DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
HOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan, Sales Representative, kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com Ragu Thillainathan, Sales Representative

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302. 5748
FULL HD
www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
என்னை அழையுங்கள்
Raj Perampalam
Broker
Direct: 416-897-9155
Office: 416-221-0999
RE/MAX

26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்
தித்திக்கும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்
Member of National Ethnic Press and Media Council of Canada
Canada's Other Voices
$1.00
416-752-1524 www.uthayannews.ca
Canadian Media Circulation Audit

உதயம் 1398 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday January 20, 2023

PYRAMID GROUP
UTHAYAN 416.301.5555
RAJ 416.843.3333
KUMAR 416.453.7777

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Family sponsorship
Super visa for parents and grandparents including health insurance;
Citizenship;
Permanent resident card renewal;
Kokulan Baskaran
Tax Consultant
Tel: 647-344-6600
info@allinoneserves.ca
www.allinoneservices.ca

வீடு வாங்க விற்க...
Buying? Selling?
மோகன் சுப்பிரமணியம்
Mohan Subramaniyam
Broker / President
416 321 2300
PROPERTY MAX
MohanTeam.com
6888-14th Avenue Markham ON, L6B 1A6

TEAM SMART
REAL ESTATE PROFESSIONALS
ANUSHAN
GOBIRAJ
416.219.3333
teamsmart.ca
ROYAL LEPAGE ignite

# ஸ்காபுறோவிலுள்ள இரண்டு தமிழர் வர்த்தக நிலையங்களுக்கு விஜயம் செய்த கனடிய அரசின் Minister of Foreign Affairs, Mélanie Joly




கடந்த வாரம் கனடிய பாராளுமன்றத்தில் இலங்கை அரசின் தமிழினப் படுகொலையாளிகளான மகிந்த ராஜபக்ச மற்றும் கோட்டாபாய ராஜபக்ச ஆகியோருக்கு எதிராக கனடிய அரசின் தடைகளை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து உரையாற்றிய கனடாவின் வெளிவிவகார அமைச்சர் **Mélanie Joly** அவர்களை ஸ்காபுறோவிலுள்ள இரண்டு தமிழர் வர்த்தக நிலையங்களுக்கு பாராளுமன்ற உறுப்பினர் ஹரி ஆனந்தசங்கரி நேற்று முன்தினம் புதன்கிழமை மதியம் அழைத்து வந்தார்.

அமைச்சர் விஜயம் செய்த இரண்டு வர்த்தக நிலையங்களும் மோர்னிங்சைட்- செப்பேர்ட் சந்திக்கு அருகில் அமைந்துள்ள **Rouge Bakery** மற்றும் **Urban Silks** ஆகியவைகள் ஆகும்.மேற்படி அமைச்சரின் விஜயத்தின் போது உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியரும் அங்கு அழைக்கப்பட்டிருந்தார்.

(உள்ளே விபரமான செய்தி 13ம் பக்கத்தில்)

# ஸ்காபுறோவில் நீயா நானா? புகழ் கோபிநாத்திற்கு மத்திய, மாகாண மற்றும் மாநகர அரசுகளின் சார்பில் உயரிய கௌரவம்





கனடாவில் ஸ்காபுறோ **Centre for Youth Empowerment and Community Services- Toronto** வின் "கோபிநாத்துடன் ஒரு மாலைப் பொழுது" விழாக்களில் கலந்து கொள்வதற்காக அழைக்கப்பெற்ற நீயா நானா? புகழ் கோபிநாத் அவர்களுக்கு ஸ்காபுறோவில் விழாவில் மத்திய, மாகாண மற்றும் மாநகர அரசாங்கங்களின் சார்பில் உயரிய கௌரவம் வழங்கப்பெற்றது.

மத்திய அரசின் சார்பான கௌரவத்தை ஸ்காபுறோ வடக்கு தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினர் **MPP Shaun Chen** அவர்கள் வழங்கினார்.

ஒன்றாரியோ முதல்வர் டக் போர்ட் அவர்களின் வாழ்த்துச் செய்தியை மாகாண பாராளுமன்ற உறுப்பினர் **MPP Logan Kanapathi** , **MPP Aris Babikian-** ஆகியோர் வழங்கி தங்கள் பாராட்டுக்களையும் தெரிவித்தனர்.

(உள்ளே விபரமான அறிக்கை 17ம் பக்கத்தில்)

JENITA AREVIN
BROKER
DOWNTOWN SPECIALIST
416.320.3201
JENITA@AREVIN.CA
ROYAL LEPAGE IGNITE REALTY, BROKERAGE
INDEPENDENTLY OWNED AND OPERATED
ROYAL LEPAGE ignite

Residential & Commercial
Real Estate Services
என்னை அழையுங்கள்
பாலா லோகன்
647-447-1562
Bala Logendralingam
Sales Representative
RE/MAX COMMUNITY

RE/MAX ACE
REALTY INC. BROKERAGE
Baskaran Sinnadurai
Commercial · Industrial · Investment
Dir: 416.880.8585
Off: 416.270.1111
Fax: 416.270.7000
baskaran.toronto@hotmail.com

Krishna Punniyam
MORTGAGE ALLIANCE
RIGHT TEAM
MORTGAGE AGENT
Purchase & Refinance
First Mortgage
Second Mortgage
Commercial Mortgage
Equity Loan
ALL IN 1
ACCOUNTING
Personal Income Tax
Corporate Income Tax
HST Returns
Bookkeeping Service
Payroll Service
Audit preparation
Business Startup service
Mobile: 416.710.9150

SRI NADARAJASUNDARAM
Broker
416-276-6666
RE/MAX ACE
REALTY INC. BROKERAGE
1286 Kennedy Rd, Unit 3 Toronto, ON, M1P 2L5

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
107 Dundas St, East, Mississauga, ON, L5A 1W7
905-272-1222
23-8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1
905-794-4404
online service: www.remitbee.com

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
416.568.4301 , 905.471.4050
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8

CANADIAN HOME APPRAISALS INC.
FOR RESIDENTIAL & COMMERCIAL
SK BALES, CRA, MVA, FRI, CRES
Bus: (416) 438-2200
Cell: (416) 801-3219
Website: www.chainc.ca
Email: skbales@hotmail.com
Ottawa Branch - Bus: (343) 698-8004
CHAI


Happy
Tamil Heritage Month
மரபுத்திங்கள்
நல்வாழ்த்துக்கள்
Logan Kanapathi
MPP Markham — Thornhill
Tel: 905-305-1935
logan.kanapathico@pc.ola.org

## உதயன் கதிரோட்டம்

# யாழ்ப்பாண அரச அதிபரின் ஆசனத்தை புதிதாய் அலங்கரிக்கும் ஒரு இலக்கிய ஆளுமை

இலங்கையின் நிர்வாக சேவை பதவிகளில் அரசாங்க அதிபர் எனனும் அந்தஸ்த்து அதிகம் உள்ள உயரிய பதவிக்குரிய ஆசனங்களில் இதுவரை ஆயிரக்கணக்கானவர்கள் அமர்ந்திருக்கின்றார்கள். அவர்களில் அந்தந்த மாவட்டங்களில் வாழும் அல்லது வாழ்ந்த மக்களால் இன்றும் போற்றிப் புகழப்படுகின்றவர்களாக பலரின் பெயர்களைக் குறிப்பிடலாம். இவ்வாறாக, யாழ்ப்பாண அரச அதிபரின் ஆசனத்தை இதுவரை காலமும் அலங்கரித்த தமிழர் அல்லது தமிழர் அல்லாதவர்களின் புகைப்படங்கள் இன்னும் யாழ்ப்பாண செயலகத்தில் காட்சிப்படுத்தப்பெற்றுள்ளன. சுமார் நாற்புத வருடங்களுக்கு முன்னர் யாழ்ப்பாண அரச அதிபராக விளங்கிய சிலரது பெயர்கள் எம்மவர்களுக்கு இன்னும் ஞாபகத்தில் தொடரும் பெருமை மிக்கவை.

அவர்களில் தமிழர் அல்லாத லயனல் பெர்ணான்டோ மற்றும் தமிழராக தேவநேசன் நேசையா ஆகிய இருவரையும் குறிப்பிடலாம். இவர்கள் இருவரதும் பணிகாலத்தில் யாழ்ப்பாண நிர்வாக மாவட்டம் பரப்பளவில் விரிந்ததாக இருந்தது தற்போதைய கிளிநொச்சி மாவட்டம் மன்னார் மாவட்டம் போன்றைவை யாழ்ப்பாண மாவட்டத்திற்குள் அடங்கிய காலம் ஒன்று இருந்தது. புரப்பளவில் பெரிதான மாவட்டமாக இருந்தாலும் மக்கள் எதிர்நோக்கிய பிரச்சனைகள் அதிகம் இருந்ததாக கூறமுடியாது.

பின்னாளில் மன்னார் மாவட்டமும் கிளிநொச்சி மாவட்டமும் தனியான மாவட்டங்களாக அறிவிக்கப்பெற்று தொடர்ந்து அவரை இயங்கத் தொடங்கிய காலப்பகுதியில் வடக்கு கிழக்கும் மற்றும் மத்திய மாகாணங்களில் சுமூகமான நிலை இருக்கவில்லை. தமிழ் இளைஞர்களின் ஆயதப் போராட்டத்தின் தொடக்கப் பகுதியில் மாவட்ட நிர்வாகங்கள் எந்தவிதமான சீர்குலைவும் இல்லா நிலை காணப்பட்டது. ஆனால் நாட்கள் செல்லச் செல்ல அவ்வாறன நிலை தொடரக்கூடியதான சாதகமான சூழ்நிலை மாற்றமடையத் தொடங்கியது.

இந்த காலப்பகுதியில் யாழ்ப்பாணம் மற்றும் முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் அரசாங்க அதிபராக பதவி வகித்தவர்கள் சந்தித்த சவால்கள் மிக அதிகம் என்றே சொல்லலாம். அந்த காலப்பகுதியில் அரசாங்க சேவை அல்லது உள்ளூராட்சி சேவை ஆகியவற்றில் எந்த பதவிகளில் பணியாற்றியவர்களுக்கெல்லாம் அன்றிருந்த நெருக்கடியான அல்லது கொந்தளிப்பு மிக்க நிலை தெளிவாகத் தெரிகின்ற காட்சியாக விளங்கியது. அவ்வாறான காலப்பகுதியில் சிறந்த மக்கள் சேவையாளன் ஆனால் கண்டிப்பு மிகக் கொண்டவர்கள் என்ற பெயரோடு யாழ்ப்பாண அரசாங்க அதிபராக இருந்த பஞ்சலிங்கம் அவர்கள் தனது உயிரைப் பலி கொடுக்க வேண்டிய ஒரு துர்ப்பாக்கிய நிலை அன்று தோன்றியது.

ஆனால் தற்போது யாழ்ப்பாணத்தில் மட்டுமல்ல இலங்கையின் பிற மாவட்டங்களில் அரசாங்க அதிபர்களாக பணியாற்றும் ஒவ்வொருவரும் எதிர் கொள்ளும் சவால் முன்னையது போன்று இல்லாவிடினும் நிதிப் பற்றாக்குறையினால் அவதிப்படும் அரசாங்கம் ஒன்றின் நிர்வாகப் பிரிவுத் தலைவராக பணியாற்றுவது என்பது சாதாரண விடயம் அல்ல என்பதையும் அனைவரும் அறிவார்கள்.

இவ்வாறான ஒரு நாட்டைப் பாதிக்கும் பொருளாதாரம் மற்றும் நிதி சார்ந்த பல 'சிக்கல்கள்" தலைவிரித்தாடும் நேரத்தில் யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபராக நியமிக்கப்பெற்றுள்ள உயர்திரு சிவபாதசுந்தரம் அம்பலவாணர் அவர்கள் வரவேற்று இவ்வாரத்தின் கதிரோட்டத்தின் பக்கத்தையும் நாம் அலங்கரிக்க விரும்புகின்றோம்.

அவரது கடந்த கால அரச சேவை மற்றும் அவர் வகித்த உயர் பதவிகள் போன்றவை தேசத்தில் உள்ள பல தரப்பட்ட மக்களாலும் அரசியல்வாதிகளாலும் உற்று நோக்கப்பெற்றுள்ளன என்பதே இந்த பதவி அவரைச் தேடிச் சென்று ஒப்படைக்கப்பட்டுள்ளதற்கு சான்றாகும். நாம் அறிந்த வரையில் மனித நேயமிக்க ஒருவராகவும் தேடல் மிகக் கொண்ட ஒரு வாசகராகவும் தமிழ் இலக்கியத்தை நேசிக்கும் ஒரு ஆர்வலராகவும் படைப்பாளியாகவும் அறியப்பெற்ற அவரது பிற ஆற்றல்கள் மற்றும் ஈடுபாடுகள், தனது புதிய பதவியை பக்குவமாகத் தொடர்வதற்கு துணையாக இருக்கும் என்ற வாழ்த்துக்களோடு அவரது எதிர்காலம் மேலும் சிறந்து விளங்கவும் பிரார்த்திக்கின்றோம்.

Canada

We acknowledge the financial support of the Government of Canada through the Canada Periodical Fund of the Department of Canadian Heritage.

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் — உதயன் — Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON MIC 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

இணுவில் திருவூர் ஒன்றியம் - கனடா
பெருமையுடன் வழங்கும்

## 20 ஆவது பொங்கல் விழா-2023

காலம் - 21-01-2023 (சனிக்கிழமை)
இடம் - கனடா கந்தசாமி கோவில் - விழா மண்டபம்
733 Birchmount Road , ஸ்காபுரோ
நேரம் - மாலை 5.30 மணி

சிறுவர் நிகழ்ச்சி, சங்கீதம். நடனம், திரையிசை நடனம்
தாளவாத்தியக் கச்சேரி, மிருதங்கசோலோ, நாட்டியநாடகம்
கரியோக்கிப்பாடல்கள் மற்றும் ஏராளமான நிகழ்வுகள் வழமைபோல
வெகுசிறப்பாக இடம்பெறவிருக்கின்றன.
கனடா வாழ் இணுவில் பிள்ளைகளின் கலைச்சங்கமமாம் பொங்கல்
விழாவிலே பங்கு பற்றித் தமது கலைத்திறமைகளை வெளிக்கொணர
விரும்பும் இணுவில் பிள்ளைகள் எம்முடன்
தொடர்பு கொள்ளுமாறு அன்போடு அழைக்கிறோம்.
சாந்தினி சர்வானந்தா 647-200-2177
முருகேசு கிருபாகரன் 416-430-0422
கஜெயன் பரராசசேகரன் 416-732-5898

## மேல் மருவத்தூர் ஆதிபராசக்தி குருமன்றத்தில் தை அமாவாசை சிறப்புபூசை

ஸ்காபறோ நாஸ்டீன் வீதியில் அமைந்திருக்கும்
மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி குருமன்றத்தில்
தை அமாவாசையை முன்னிட்டு 21-01-2023
சனிக்கிழமை காலை 9:00 தொடக்கம் விசேட பூசை
நடைபெற்று மகேஸ்வரபூசையுடன் முடிவடையும்.
அனைத்து சக்திகளையும் பங்குபற்றி அன்னையின்
அருளைப்பெறுமாறு அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

தொடர்புகளுக்கு 647-436 9647 என்னும் இலக்கத்தை அழைக்கவும்.

## Sapphire Banquet & Catering

Specializing in Videography & Photography
- Anniversary Party
- Birthday Party
- Bridal Shower
- Engagement Party
- Family Get-together
- Graduation Party
- Religious Ceremonies
- Wedding Showers
- and more...

SHIVA (647) 406-4868

### வேலைக்கு ஆட்கள் தேவை

தொழிற்சாலை ஒன்றிற்கு
வேலைக்கு ஆட்கள் தேவை.
ஆண், பெண் இருவரும்
விரும்பத்தக்கது.

உடனே அழையுங்கள்:
தொடர்புகளுக்கு Jeya:
(647) 669-2739

### KITCHEN HELPER & LINE COOK WANTED

Part-time kitchen helper,
line cook's, dish washer,
South Indian cook, and Continental
cook wanted.

Call AMAR:
(416) 988-9518

7370 Woodbine Ave. Unit 9
Woodbine & Denison, Markham

### Administrative Assistant Needed

A small office in Scarborough is looking for an Administrative Assistant (Part-Time).
Applicants with Computer Skills in Accounting and should be able to perform other office duties.
Interested Applicants should send their resumes to email address below :

admin@cyecstoronto.ca

### BUNGALOW HOUSE FOR RENT

Brimley & Lawrence சந்திப்பிற்கு அருகில்
3 Bedroom house (upstairs) with
1 kitchen & washroom, Large living hall
with Dining space, Washer & Dryer,
3 Parking spaces வாடகைக்கு உண்டு.
Close to SP Grocery store (Sri Lankan),
8mins drive to Scarborough Town Center,
& 6mins drive to Scarborough Health
Network- General Hospital.
AVAILABLE from March 1st 2023
Call: (647) 995-4043
(647) 719-1220

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# கிளிநொச்சி வடக்கு கல்வி வலயத்தில் பொங்கல் விழாவும் மாதிரிக் கல்வி வலய அங்குரார்ப்பண வைபவமும்

ஐக்கிய அமெரிக்காவை தளமாகக் கொண்டியங்கும் அனைத்துலக மருத்துவ நல அமைப்பு (IMHO-USA) மற்றும் ஐக்கிய இராட்சியத்தை தளமாகக் கொண்ட இரட்ணம் பவுண்டேசன் நிறுவனம் (Ratnam Foundation-UK) என்பன இணைந்து அமுல்படுத்தும் முன்பருவ பிள்ளை அபிவிருத்தி திட்டத்தில் மேற்படி இரு வைபவங்களும் கிளிநொச்சி வடக்கு கல்வி வலய ஆரம்ப முன்பிள்ளை பருவ அபிவிருத்தி பிரிவின் ஏற்பாட்டில் 18.01.2023 அன்று நடந்தேறின.

பொங்கல் விழா டாக்டர் சாம் முன் பள்ளி வளாகத்தில் முன்பள்ளி ஆசிரியர்களின் கலை நிகழ்வுகளுடன் சிறப்பாக கொண்டாட ப்பட்டது. இவ்விழாவில் வரவேற்பு நடனம், கோலாட்டம், கும்மி, காவடியாட்டம், கரகாட்டம் இடம்பெற்றிருந்ததுடன் இணைந்து கொண்ட அனைத்து முன்பிள்ளை ஆசிரியர்கள், பெற்றோர்கள், சிறார்கள் மற்றும் வலய உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் பொங்கலுடன் பிரசாதங்களும் ஏற்பாட்டாளர்களினால் வழங்கப்பட்டது.

அன்றைய தினம் கிளிநொச்சி வடக்கு வலயக் கல்வி பணிப்பாளர் திரு. க.அ. சிவனருள்ராஜா அவர்களின் சிந்தனையில் உருவாகி அவரால் மேற்படி இரு அமைப்புக்களான விடுக்கப்பட்ட கோரிக்கைக்கமைவாக இக் கல்வி வலயம் முன்பள்ளிகளின் மாதிரிக் கல்வி வலயமாக அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

இதனை வட மாகாண கல்வி பணிப்பாளர் திரு. திருஞானம் ஜோன்குயின்ரஸ் அவர்கள் இப்பொங்கல் விழாவில் அதற்கான பெயர்பலகையை திரைநீக்கம் செய்து உத்தியோக பூர்வமாக ஆரம்பித்து வைத்தார். இந் நிகழ்வின் போது முன்பள்ளி ஆசிரியர்களுக்கு நடாத்தப்பட்ட செயற்படு சார் திறன் விருத்தி செயலமர்வுகளில் பங்கு பற்றி தம் திறமைகளை வெளிப்படுத்தியவர்களுக்கான சான்றுகளும் இவரால் வழங்கப்பட்டமை ஆசிரியர்களுக்கான ஊக்குவிப்பாக அமைந்திருந்தது.




இவ்விரு விழாக்களிலும் அனைத்துலக மருத்துவ நல அமைப்பின் (IMHO-USA) இலங்கைக்கான வதிவிட பணிப்பாளர் திரு. சு. கிருஷ்ணகுமார் அவர்கள் கௌரவ விருந்தினராக கலந்து கொண்டு இவ்விழாவை சிறப்பித்திருந்தார்கள்.

வலய கல்வி பணிப்பாளரின் கோரிக்கைக்கமைவாக ஆசிரியர்களுக்கான திறன் விருத்தி பயிற்சிகள் மட்டுமன்றி அவர்களில் திறமையாக செயற்பட்டவர்களுக்கான மேலதிக பயிற்சிகள், அவர்களுக்கான தலைமைத்துவ பயிற்சிகள், தன்னிலை மேம்பாட்டு பயிற்சிகள், நிர்வாக விடயங்களை கையாள்வதற்கான பயிற்சிகள், இவர்களைக் கொண்டு முன் பள்ளிகளின் முன்னேற்ற அறிக்கை பெறுவதற்கான செயற்பாடுகள், கொத்தணி ரீதியாக மாதிரி முன்பள்ளிகளின் அபிவிருத்தி, இப்பள்ளிகளில் பாடசாலைத்தோட்டம், இதன் தொடர்ச்சியாக போசாக்கு உணவிற்கான சிறு பங்களிப்பு, பள்ளி சிறார்களுக்காக வலயத்தில் மாதிரி நூலகம் ஒன்று, பெற்றவர்களுக்கான விழிப்புணர்வுகள், முகாமைத்துவ குழுக்களை வலுப்படுத்தும் பயிற்சி, விசேட தேவையுடைய சிறார்களை முன்கூட்டியே இனங்கண்டு உதவியளிக்கும் செயற்பாடுகள், சிறுவர் அரங்கு செயற்பாடுகள் மற்றும் மாதிரி முன்பள்ளிகளில் மாதாந்தம் பௌர்ணமி தின கலைநிகழ்வுகளுக்கான பங்களிப்பு போன்ற வற்றை இவ்வருட இறுதி வரையான காலப்பகுதிக்குள் வழங்கும் ஏற்பாடுகள் இத்திட்டத்தில் அடங்கியுள்ளன.





# உலகமே தமிழர்களின் பின்னால் நிற்கிறது, ஆனால் முதுகெலும்புள்ள தலைவர் எமக்கு இல்லை

## தமிழர் தாயக காணாமல் ஆக்கப்பட்டோரின் சங்கத்தின் செயலாளர் கோ. ராஜ்குமார் அறிக்கை

- உலகமே தமிழர்களின் பின்னால் நிற்கிறது, ஆனால் முதுகெலும்புள்ள தலைவர் எமக்கு இல்லை.
- எமது தாய்மார்களுடன் இணைந்து தமிழ் இறையாண்மைக்காக யாரேனும் ஒருங்கிணைத்து குரல் கொடுக்க வேண்டும் என விரும்புகிறோம்.
- இறையாண்மை என்பது ஒரு கெட்ட வார்த்தை அல்ல, அது ஒரு நட்பான எளிமையான சுதந்திர வார்த்தை.

காணாமல் ஆக்கப்பட்ட தமிழ் குழந்தைகளை கண்டறியவும் எதிர்கால இனப்படுகொலையில் இருந்து தமிழர்களை காப்பாற்றும் தமிழ் இறையாண்மைக்காகவும் அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் உதவிகளை பெறுவதற்கான எமது தொடர்ச்சியான போராட்டத்தின் 2156 நாள் இன்று.

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் தாய்மார்களாகிய நாங்கள் தைப் பொங்கல் வாழ்த்துக்களை தெரிவிக்க விரும்புகிறோம். விரைவில் ஒரு நாள் இந்த திருநாளை நாம் அனைவரும் சிறப்பாக கொண்டாடுவோம்.

இரண்டு முக்கிய இராணுவ மேஜர்கள் மீது அமெரிக்கா சமீபத்தில் பயணத் தடையுடன் வேறு பல நிபந்தனைகளை விதித்தது. சுமார் 2 வாரங்களுக்கு முன்னர், இலங்கையின் முன்னாள் இரண்டு ஜனாதிபதிகளுக்கு கனடா தடை விதித்தது.

இந்த இரண்டு ஜனாதிபதிகளுடன் தொடர்புள்ள எந்தவொரு கனேடியர்களும் தண்டிக்கப்படுவார்கள் என்பது மிகவும் கவனிக்கத்தக்கது.

இவையெல்லாம் நம் மக்களுக்கு என்ன சொல்கின்றன?

உலகமே தமிழர்களின் பின்னால் நிற்கிறது, ஆனால் முதுகெலும்புள்ள தலைவர் எமக்கு இல்லை.

எமது தாய்மார்களுடன் இணைந்து தமிழ் இறையாண்மைக்காக யாரேனும் ஒருங்கிணைத்து குரல் கொடுக்க வேண்டும் என விரும்புகிறோம்.



இறையாண்மை என்பது ஒரு கெட்ட வார்த்தை அல்ல, அது ஒரு நட்பான எளிமையான சுதந்திர வார்த்தை.

குறிப்பாக அமெரிக்காவுடன் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்தை வலியுறுத்துமாறு எமது தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களை வலியுறுத்துகிறோம்.

கொழும்பைக் கண்டு பயந்தால் அமெரிக்காவிடம் பேசுங்கள்.

USTAG மற்றும் அவர்களது நண்பர்கள் இலங்கை இராணுவத்தை 25% குறைக்க விரும்புகிறார்கள், ஆனால் தமிழர் தாயகத்தில் இராணுவ பிரசன்னத்தை இலங்கையால் கையாள முடியாது. அவர்களிடம் பணம் எதுவும் இல்லை. இப்போது அவர்களே இராணுவத்தை 50% குறைக்கிறார்கள் என்பதை அறிவித்துளார்கள்.

USTAG மற்றும் அவர்களது நண்பர்கள் அமைதியாக இருக்க வேண்டும் அல்லது தமிழ் இறையாண்மையைப் பெறுவதற்கான வழியைக் கண்டறிய வகுப்புகள் எடுக்க வேண்டும்.

சீன ஆதிக்கத்தை ஒடுக்க அமெரிக்கத் தலைமையுடன் இந்தியப் பெருங்கடலைப் பாதுகாக்கும் நாடுகள் "குக்" தீவுகளுக்கு இறையாண்மையை வழங்கின.

இங்கும் இறையாண்மைக்கான வலுவான சாத்தியம் உள்ளது.

நன்றி
கோ.ராஜ்குமார்
செயலாளர் தமிழர் தாயக காணாமல் ஆக்கப்பட்டோரின் சங்கம்.

சினிமா

# இஸ்லாமியராக நடிக்கும் ரஜினி



புதிய படம் ஒன்றில் நடிகர் ரஜினிகாந்த் இஸ்லாமியராக நடிக்கவிருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது. நெல்சன் இயக்கத்தில் "ஜெயிலர்" படத்தில் நடிகர் ரஜினிகாந்த் நடித்து வருகிறார். இந்த படத்தின் படப்பிடிப்பு நடைபெற்று வரும் நிலையில் அடுத்ததாக ரஜினியின் மகள் ஐஸ்வர்யா இயக்கத்தில் "லால்சலாம்" படத்தில் நடிக்கவுள்ளார். இந்த படத்தில் சிறப்பு தோற்றத்தில் நடிப்பார் என்று கூறப்படுகிறது.

இந்த படத்தில் நடிகர் விஷ்ணு விஷால் கதாநாயகனாகவும், விக்ராந்த் முக்கிய கதாபாத்திரத்திலும் நடிக்கவுள்ளனர். இந்த படத்திற்கு இசையமைப்பாளர் ஏ.ஆர். ரகுமான் இசையமைக்கவுள்ளார். லைக்கா தயாரிப்பில் உருவாகும் இப்படம் கிரிக்கெட் கதைக்களத்தை கொண்டது.

இப்படத்தின் படப்பிடிப்பு வரும் பிப்ரவரி மாதம் தொடங்கவுள்ளது. காரைக்குடியில் தொடங்கும் இந்த படப்பிடிப்பில் ரஜினி அல்லாத காட்சிகள் படமாக்கப்படவிருக்கிறது. இந்நிலையில் இப்படத்தில் நடிக்கும் ரஜினியின் கதாபாத்திரம் குறித்த முக்கிய பதிவேற்றம்.

வெளியாகியுள்ளது. அதன்படி இப்படத்தில் நடிகர் ரஜினிகாந்த், இஸ்லாமியராக நடிக்கவுள்ளாராம். அவரது கதாபாத்திரத்திற்காக விரைவில் நீண்ட தாடி வளர்க்க போவதாக தகவல்கள் வெளியாகியுள்ளது. அதேபோன்று இந்த படத்தில் கிரிக்கெட் பயிற்சியாளராக ரஜினி நடிப்பதாகவும் தகவல்கள் கசிந்துள்ளது.


# தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி விடுதலைப் பொங்கல் நிகழ்வு யாழ்ப்பாணம் பல்கலை கழக வளாகத்தில் முன்னெடுக்கப்பட்டது

இலங்கை செய்திகள்
Sri Lanka News




தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி விடுதலைப் பொங்கல் நிகழ்வும் ஆற்றுகை நிகழ்வொன்று கடந்த 13ம் திகதி வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் பல்கலை கழக வளாகத்தில் முன்னெடுக்கப்பட்டது. மிகவும் உணர்வு பூர்வமாக நடைபெற்ற இந்த நிகழ்வில் ஏராளமான மாணவர்கள் விரிவுரையாளர்கள் மற்றும் பொதுமக்கள் ஆர்வலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# ராமேஸ்வரம் அருகே வீடு போன்ற மர்ம பொருள் கடல் மிதந்து வந்தால் பரபரப்பு




ராமேஸ்வரம் அருகே தங்கச்சிமடம் கடற்கரை பகுதியில் வீடு போன்று வடிவமைக்கப்பட்ட மர்ம பொருள் கடலில் மிதந்து வந்து செவ்வாய்க்கிழமை (17) கரை ஒதுங்கி உள்ளது.

இதையடுத்து அப்பகுதிக்கு சென்ற மீனவர்கள் கரை ஒதுங்கிய மர்ம பொருளை பார்த்ததை அறிந்து ஏனையவர்களுக்கு தெரிவித்ததை அடுத்து நூற்றுக்கணக்கான மீனவ மக்கள் கடலில் மிதந்து வந்த மர்ம பொருளை பார்வையிட்டு புகைப்படம் எடுக்க ஒரே இடத்தில் குவிந்ததால் பரபரப்பு ஏற்பட்டது.

மேலும் மிதந்து வந்த மர்ம பொருளின் உள்ளே பல்வேறு வகையான புத்தர் சிலைகள் வடிவமைக்கப்பட்டு அந்த சிலைக்கு பச்சரிசி, நெல் உள்ளிட்ட பல்வேறு தானியங்களைக் கொண்டு பூஜை செய்து பரிகாரம் செய்யப்பட்டுள்ளது தெரிய வந்துள்ளது.

மேலும் கடற்கரையில் குவிந்த பொது மக்களை போலீசார் அப்புறப்படுத்தி மிதந்து வந்த மர்ம பொருள் எங்கிருந்து வந்தது? வேறு ஏதேனும் கடத்தல் பொருட்கள் வந்ததா? என பல்வேறு கோணங்களில் போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

**- மன்னார் நிருபர் (17-01-2023)**

# மாங்குளம் மகாவித்தியாலய மாணவர்கள் அதிபரை நியமிக்க கோரி ஆர்ப்பாட்டம்




முல்லைத்தீவு மாவட்டம் துணுக்காய் கல்வி வலையத்திற்குற்பட்ட மாங்குளம் மகாவித்தியாலய மாணவர்கள் ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்துள்ளனர்.

கடந்த 2 அரை வருடங்களாக குறித்த பாடசாலைக்கு நிரந்தர அதிபர் இல்லாத நிலையில் நிரந்தர முதல்வரை நியமிக்க கோரியே குறித்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றிருந்தது.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள்,

“உடன் தீர்வு இல்லையெனில் போராட்டம் வலுப்பெறும்”
“எங்கே எங்கே எமது பாடசாலை அதிபர் எங்கே”
“தரமுயர்ந்த பாடசாலை தரமான அதிபர் வேண்டும்”
“துணுக்காய் கல்வி வலயம் அதிபர் இல்லாத 1AB பாடசாலையா”
“அருகில் வலயம் அனாதையாக பாடசாலை”

போன்ற சுலோகங்கங்களை ஏந்தி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதேவேளை சம்பவ இடத்திற்கு வருகை தந்த மாங்குளம் போலீசார், மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளை இடம்பெற ஒத்துழைக்குமாறும் இதற்கான தீர்வு ஒன்றை தாம் பெற்றுக்கொள்ள ஆவணசெய்வதாகவும் வழங்கிய உறுதி மொழியினை அடுத்து மாணவர்கள் கலைந்து சென்று கற்றல் நடவடிக்கையினை தொடர்ந்தனர்.

குறித்த ஆர்ப்பாட்டத்தில் மாணவர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர்கள் என பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

**- ஜெ.ஈழமகன் - முல்லைத்தீவு**

MORTGAGE

⇒ நல்ல ரேட்ல மோட்கேஜ் (OAC*)
⇒ லைன் ஒப் கிரெடிட்(HELOC)
⇒ ரீபைனான்ஸ்,Title Transfer,ரினிவல்
⇒ Private Mortgage (No Income Verification)
⇒ 2வது, 3வது மோட்கேஜ்(Funded within 48hrs)
⇒ பாங்க்ரப்சி, புரபோசல் செய்தோருக்கு மோர்ட்கேஜ்
⇒ பவர் ஒப் சேல் பிரச்சனையிலிருந்து விடுபட
⇒ எல்லாக் கடனையும் ஒரே பேமண்ட்டாக்கா

கடைசி நேரத்தில் மோட்கேஜ் கிடைக்காமல் வாங்கிய வீட்டை கைவிடும் நிலையில் உள்ளீர்களா?

மேலும் அனைத்து மோட்கேஜ், ரியல் எஸ்டேட் தொடர்பான தேவைகளுக்கும்.....

MORTGAGE CLINIC
www.mortgagecliniccanada.com
உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.
416-613-2788 / 416-816-9011

ஜெ (Jey) இராசதுரை MBA. BBA (Hon) AMP
Team Leader/Mortgage & Real Estate Broker
Cell : 416-624-4843
எமது முகவரி
1504 Markham Rd,
Toronto, ON, M1B 2V9
(Markham & HWY 401)



RIGHT AT HOME REALTY INC.
MORTGAGE ALLIANCE
RIGHT BROKER = RIGHT MORTGAGE
Lic # 10530
Brokerage : 112-895 Don Mills Rd, Toronto On M3C 1W3
Corporate office : 2005 Sheppard Ave E, Suit 200 Toronto On M2J 5B4

# ஒரு புதிய கூட்டு ஏன் இரண்டாகியது?

**- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்**



தமிழரசு கட்சிக்கு எதிராக ஒரு புதிய கூட்டமைப்பை அமைக்கும் முயற்சிகள் வெற்றி பெறவில்லை. இதனால் விக்னேஸ்வரன் மணிவண்ணன் அணியானது மான் சின்னத்தின் கீழும் ஏனைய கட்சிகள் குத்துவிளக்கு சின்னத்தின் கீழும் போட்டியிடுவதாக முடிவாகியுள்ளது.

தமிழரசு கட்சிக்கு எதிராக ஒரு பெரிய கூட்டை உருவாக்கப் போகின்றன என்று எதிர்பார்க்கப்பட்ட கட்சிகள் ஒரு பொதுச் சின்னத்தை கண்டுபிடிக்க முடியாமல் தங்களுக்கு இடையே இரண்டாக உடைந்து விட்டன. இந்த உடைவை தொகுத்துப் பார்த்தால் வெளிப்படையாக ஒரு விடயம் தெரிகிறது. ஆயுதப் போராட்ட மரபில் வந்த கட்சிகள் ஓரணியிலும் ஆயுதப்போராட்ட மரபில் வராத கட்சிகள் இன்னொரு அணியாகவும் நிற்பதைக் காணலாம்.

இது ஆயுதப் போராட்டங்களில் வந்த கட்சிகளுக்கும் ஆயுதப் போராட்ட மரபில் வராத கட்சிகளுக்கும் இடையிலான ஒரு முரண்பாடாக தோன்றும். கடந்த வாரம் நடந்த சந்திப்புகளில் விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இருந்து வந்த ஜனநாயகப் போராளிகள் கட்சியை கூட்டுக்குள் இணைத்துக் கொள்வதற்கு விக்னேஸ்வரன் முதலில் தயக்கம் காட்டினார். ஏனைய கட்சிகள் விளக்கம் கேட்ட பொழுது ஜனநாயக போராளிகள் கட்சியை உள்ளே வைத்துக்கொண்டு அந்த விளக்கத்தை தன்னால் கூற முடியாது என்றும் அவர்களை வெளியே அனுப்பினால்தான் அந்த காரணத்தை வெளிப்படையாக சொல்லலாம் என்று கூறியிருக்கிறார். அதனால் கடந்த வெள்ளிக்கிழமை நடந்த சந்திப்பை தொகுத்துப் பார்க்கும் ஒருவருக்கு பின்வரும் கேள்வி எழும். தமிழரசு கட்சிக்கு எதிரான ஒரு பலமான கூட்டை உருவாக்க முடியாமல் போனமைக்கு காரணம், ஆயுதப் போராட்ட மரபில் வந்த கட்சிகளும் அந்த மரபில் வராத கட்சிகளுக்கும் இடையிலான முரண்பாடா? என்பதே அக்கேள்வியாகும். காலைக்கதிர் பத்திரிகையின் செய்தியாளர் வர்ணிப்பது போல மிலிட்டரி ஹோட்டலும் சைவ ஹோட்டலும் வேறு வேறாக நிற்கின்றனவா?

ஆனால், கடந்த பொதுத் தேர்தலில் விக்னேஸ்வரன் ஈ.பி.ஆர்.எல்.எப் கட்சியின் சின்னத்தின் கீழ்தான் போட்டியிட்டு வெற்றி பெற்றார். அது மட்டுமல்ல அதற்கு முன்பு கடந்த வடமாகாண சபையில் அவர் தமிழரசுக் கட்சிக்காரர்களால் சுற்றி வளைக்கப்பட்டிருந்தபோது அவரைக் காப்பாற்றியது ஆயுதப் போராட்ட மரபில் வந்த இயக்கங்கள்தான். விக்னேஸ்வரனின் எழுச்சியென்பது ஆயுதப் போராட்ட மரபில் வந்த கட்சிகளின் உதவியால் கிடைத்த ஒன்றுதான்.அதாவது விக்னேஸ்வரனுக்கு அசைவ ஹோட்டலில்தான் விருந்து கிடைத்தது. சைவ ஹோட்டலில் அல்ல. எனவே தமிழரசுக் கட்சிக்கு எதிரான ஒரு புதிய கூட்டை உருவாக்க முடியாமல் போனமைக்கு காரணம் ஆயுதப் போராட்ட மரபில் வந்த கட்சிகளை மிதவாத மரபில் வந்தவர்கள் ஏற்றுக்கொள்ளத் தவறியமை என்று கூறப்படும் விளக்கம் முழுமையானது அல்ல.

உண்மையான பிரச்சினை சின்னம்தான். கூட்டின் பெயர்தான். தமிழரசு கட்சிக்கு எதிராக ஒரு பலமான கூட்டை கட்டி எழுப்புவது என்றால் கூட்டமைப்பு என்ற பெயர் தேவை என்று விக்னேஸ்வரன் அல்லாத ஏனைய கட்சித் தலைவர்கள் நம்பினர். கூட்டமைப்பு என்ற பெயரில் வாக்குக் கேட்டால் அதற்கென்று ஒரு வாக்கு வங்கி இருப்பதாக அவர்கள் நம்புகிறார்கள். அதனால் ஏற்கனவே 2008 ஆம் ஆண்டு, அதாவது ஆயுதப் போராட்டத்தின் இறுதிக் கட்டத்தில் தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்கு எதிராக உருவாக்கப்பட்ட ஒரு கட்சியின் சின்னத்தை பயன்படுத்துவது என்று முடிவெடுத்தார்கள். கட்சியின் பெயர் ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டமைப்பு என்பதாகும். அது புளட் இயக்கமும் ஈ.பி.ஆர்.எல்.எப் இயக்கத்தின் சுகு அணியும் இணைந்து உருவாக்கிய ஒரு கட்சியாகும். ஈ.பி.ஆர்.எல். எப்பின் சுகு அணியானது, தமிழ்த் தேசிய சிந்தனைக்கு வெளியே நிற்கிறது. அந்த இயக்கத்தின் சுரேஷ் அணி தமிழ்த் தேசிய சிந்தனைக்குள் நிற்கிறது. இவ்வாறு புளட்டும் ஈ.பி.ஆர்.எல்.எ்.பின் சுகு அணியும் சேர்ந்து உருவாக்கிய கட்சியின் சின்னத்தை பயன்படுத்தி புதிய கூட்டமைப்பை பதிந்த பின் அதில் இருக்கும் ஜனநாயக என்ற வார்த்தையை பின்னர் நீக்கலாம் என்று மேற்படி கட்சிகள் திட்டமிட்டு இருந்தன. இது தமிழரசுக் கட்சியைத் தவிர்த்து விட்டு கூட்டமைப்பைப் பதிவது என்று பங்காளிக் கட்சிகள் திட்டமிடத் தொடங்கிய பொழுதே கருக் கொண்ட ஒரு யோசனையாகும்.

ஆனால் விக்னேஸ்வரனும் மணிவண்ணனும் அந்த சின்னத்தை ஏற்றுக் கொள்ள மறுத்து விட்டார்கள். அக்கட்சியின் செயலாளராக இருப்பவர் புளட் இயக்கத்தைச் சேர்ந்த ஆர்.ஆர் என்று அழைக்கப்படும் ராகவன்.

விடுதலைப் புலிகள் ஆயுதப் போராட்டத்தை நடத்திக் கொண்டிருந்த ஒரு காலகட்டத்தில் கூட்டமைப்புக்கு எதிராக உருவாக்கப்பட்ட ஒரு கூட்டு அது என்ற அடிப்படையில் அந்த கட்சியின் சின்னத்தை பயன்படுத்துவதற்கு விக்கி மணி அணி தயங்குகிறது. புதிய கூட்டின் மீது தனது பிடி பலமாக இருக்க வேண்டுமென்றால் அதற்கு தனது கட்சியின் சின்னத்தையே பொதுச் சின்னமாக பயன்படுத்த வேண்டும் என்றும், தன்னை கூட்டின் செயலாளராக நியமிக்க வேண்டும் என்றும் விக்னேஸ்வரன் விரும்பியதாக தெரிகிறது. இவ்வாறாக சின்னம் மற்றும் செயலாளர் விடயத்தில் ஒரு பொதுக் கருத்தை எட்ட முடியாத காரணத்தால் கூட்டு உருவாகவில்லை.

தமிழரசுக் கட்சிக்கு எதிராக ஒரு பலமான கூட்டைக் கட்டியெழுப்பும் பொழுது அதில் கூட்டமைப்பு என்ற பெயர் தேவை என்று விக்னேஸ்வரன் அல்லாத ஏனைய கட்சித் தலைவர்கள் நம்புவதாக தெரிகிறது. கூட்டமைப்பு என்ற பெயர் கடந்த இரண்டு தசாப்தங்களாக மக்கள் மத்தியில் பதிந்திருப்பதனால், அந்த பெயருக்கு என்று ஒரு வாக்கு வங்கி இருக்கும் என்றும் அவர்கள் நம்புகின்றார்கள். அதுபோலத்தான் தமிழரசுக் கட்சியும் தனது வீட்டுச் சின்னத்துக்கென்று ஒரு பெரிய வாக்கு வங்கி உண்டு என்று நம்புகிறது.

பழக்கப்பட்ட ஒரு சின்னம் அல்லது பழக்கப்பட்ட ஒரு பெயர் என்பது விமர்சன பூர்வமாக சிந்திக்காத வாக்காளர்களை கவர்வதற்கு இலகுவான வழி என்று நம்பப்படுவதுண்டு. அது ஒரு விதத்தில் பொதுப் புத்தியை அதிகம் உழைப்பின்றி கவர்வதற்கான ஒரு உத்திதான். ஆனால் தமிழ் தேசியப் பரப்பில் கடந்த சில தசாப்தகால அனுபவங்களை தொகுத்துப் பார்த்தால் அது முழு வெற்றி பெற்ற ஒரு உத்தி அல்லவென்பது தெரியவரும்.

அதற்கு கீழ்வரும் உதாரணங்களைக் காட்டலாம். இந்திய அமைதி காக்கும் படைக்கும் விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கும் இடையே மோதல்கள் இடம்பெற்ற பொழுது வெளிச்சவீட்டு சின்னத்தின் கீழ் போட்டியிட்ட ஈரோஸ் இயக்கம் பெருமளவு ஆசனங்களை கைப்பற்றியது. தமிழ் அரசியலில் ஒரு சுயேச்சை குழு அந்தளவு ஆசனங்களை அதற்கு முன்னும் கைப்பற்றவில்லை இன்றுவரையிலும் கைப்பற்றவில்லை. அங்கே சின்னம் ஒரு விவகாரமாக இருக்கவில்லை. அந்த சின்னம் அதற்கு பின் எந்த ஒரு தேர்தலிலும் குறிப்பிட்டுச் செல்லக்கூடிய வாக்குகளைப் பெறவில்லை.

அதேபோன்று சில ஆண்டுகளுக்கு முன் தமிழர் விடுதலைக் கூட்டணியின் உதயசூரியன் சின்னத்தை குறித்தும் விவாதங்கள் இடம்பெற்றன. உதயசூரியன் சின்னம் ஒரு வெற்றிச் சின்னம் என்பதனால் அதன் கீழ் போட்டியிட்டால் அதிக வாக்குகளை பெறலாம் என்று ஒரு நம்பிக்கை நிலவியது. ஆனால் திருப்பகரமான வெற்றி அங்கே கிடைக்கவில்லை.

ஏன் அதிகம் போவான்? கடந்த பொதுத் தேர்தலின் போது வீட்டுச் சின்னத்துக்கு வெளியே வெற்றி பெறலாம் என்ற நம்பிக்கையை தமிழ் மக்கள் மூன்று வெவ்வேறு தரப்பினருக்கு வழங்கினார்கள். முதலாவது தரப்பு,தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி. இரண்டாவது, விக்னேஸ்வரனின் கட்சி. மூன்றாவது, வியாழேந்திரன்.

எனவே சின்னந்தான் வெற்றிக்கு அடிப்படை காரணம் என்று நம்புவது சரியா? அதே போல பழக்கப்பட்ட ஒரு பெயரை வைத்து விமர்சன பூர்வமாக சிந்திக்காத வாக்காளர்களின் கூட்டு உளவியலை கையாளலாம் என்று நம்புவதும் சரியா?

சின்னங்கள் குறியீடுகள்தான். பெயர்களும் குறியீடுகள்தான். “வார்த்தைகள் அர்த்தங்களால் சுமையேற்றப்படுகின்றன” என்று ஜிட்டு கிருஷ்ணமூர்த்தி கூறுவார். வார்த்தைகளுக்கும் சின்னங்களுக்கும் மந்திர சக்தியை கொடுப்பது கட்சிகளின் வேலை. செயற்பாட்டாளர்களின் வேலை. ஒரு கட்சி எந்தளவு கடுமையாக உழைக்கிறது என்பதில்தான் அது தங்கியிருக்கிறது. எனவே தமிழரசுக் கட்சிக்கு சவாலாக எழுவது என்பது, சின்னங்களிலும் பெயர்களிலும் தங்கியில்லை. விசுவாசமான உழைப்பில்தான் தங்கியிருக்கிறது.

சிறந்த தலைவர்கள் சின்னங்களை உருவாக்குகிறார்கள். வார்த்தைகளுக்கு புதிய அர்த்தங்களைக் கொடுக்கிறார்கள். சின்னங்களுக்கும் வார்த்தைகளுக்கும் மந்திர வலிமை ஏற்றுகிறார்கள்.

இது தொடர்பில் இரண்டு விடயங்களை அழுத்திச் செல்லவேண்டும். முதலாவது, தமிழரசுக் கட்சிக்கு எதிராக என்று சிந்திப்பதே தவறு. அது அதன் உளவியல் அர்த்தத்தில் தமிழரசுக் கட்சியின் பலத்தைக் குறித்த தாழ்வுச்சிக்கலையுங் குறிக்கும். மாறாக தேசத் திரட்சியை கட்டியெழுப்புவதற்காக என்று சிந்திப்பதே சரி. அதுதான் ஆக்கபூர்வமானது. இது முதலாவது. இரண்டாவது விடயம், கட்சிகளின் வெற்றி என்பது சின்னங்களிலும் பெயர்களிலும் தங்கியிருப்பதில்லை. நவீன தகவல் தொடர்பு யுகத்தில் கட்சிகளின் வெற்றிக்குரிய விளம்பர உத்திகளையும் பிரச்சார உத்திகளையும் வகுத்துக் கொடுப்பதற்கென்றே தொழிற்சார் வல்லுநர்கள் வந்து விட்டார்கள். அவர்கள் நினைத்தால் சின்னங்களையும் பெயர்களையும் திட்டமிட்டு ஸ்தாபிப்பார்கள். ஒரு புதிய ட்ரெண்டை உருவாக்குவார்கள். எனவே இந்தச் சின்னம்தான் வேண்டும், இந்தப் பெயர்தான் வேண்டும் என்ற மாயைகளில் இருந்து புதிய கூட்டுக்கள் விடுபடவேண்டும். தமிழ் மக்களையும் அந்த மாயைகளில் இருந்து விடுவிக்க வேண்டும்.


மாயைகளில் மூழ்கிக் கிடந்தால் மெய்மையை கண்டுபிடிக்க முடியாது. மெய்மையை கண்டுபிடித்தால்தான் பொருத்தமான உழைப்பைக் கொட்டி வார்த்தைகளையும் சின்னங்களையும் மந்திரசக்தி மிக்கதாக மாற்றலாம். எல்லாவற்றிற்கும் கடும் உழைப்பு வேண்டும். வியட்நாமிய புரட்சியின் தந்தை கோஷிமின் கூறியது, புதிய கட்சிக் கூட்டுக்களுக்கும் பொருந்தும். “மக்களிடம் செல்லுங்கள், மக்களுக்கு உண்மையைச் சொல்லுங்கள், மக்கள் உங்களுக்கு வெற்றிகளைப் பெற்றுத் தருவார்கள்”.

## வீணாவின் கவிக்கணை

சுமப்பது சுமை
என்று நினைக்காதவரை
அது உனக்கு சுமையென்று
தெரியப்போவதில்லை,
விரோதத்தின் பொருள்
நீயாக உணரும்வரை
உனக்கு யாருமே
விரோதியாக
தெரியப்போவதில்லை,
நாம் கொடுப்பது என்னவோ
அதையே பெற்றுக்கொள்கிறோம்,
நல்லதே நினைப்பவனுக்கு
என்றுமே நல்லதே நடக்கும்.

இந்தியா செய்திகள்
India News

# ராகுலுடன் நடைபயணத்தில் பங்கேற்ற காங்கிரஸ் எம்பி மயங்கி விழுந்து மரணம்





பஞ்சாப்பில் ஜன 14 காலை ராகுல் காந்தி பாதயாத்திரையில் பங்கேற்ற காங்கிரஸ் எம்.பி. சந்தோக்சிங் சவுத்ரி மாரடைப்பால் இறந்தார். அவருக்கு ராகுல்காந்தி அஞ்சலி செலுத்தினார்.

ராகுல் காந்தி கன்னியாகுமரி முதல் காஷ்மீர் வரை இந்திய ஒற்றுமை நடைபயணம் மேற்கொண்டு வருகிறார்.

கடந்த செப்டம்பர் 7-ந்தேதி அவர் கன்னியாகுமரியில் பாத யாத்திரையை தொடங்கினார். தமிழ்நாடு, கேரளா, கர்நாடகம், ஆந்திரா, தெலுங்கானா, மராட்டியம், மத்திய பிரதேசம், ராஜஸ்தான், அரியானா, டெல்லி, உத்தரபிரதேசம் ஆகிய மாநிலங்களில் நடைபயணம் செய்த பிறகு ராகுல் காந்தி கடந்த 10-ந்தேதி பஞ்சாப்பை சென்றடைந்தார்.

பஞ்சாப் யாத்திரையின் போது ராகுல்காந்தி பொற்கோவிலுக்கு சென்றார்.

வட மாநிலங்களில் கடும் பனி இருந்து வருகிறது. குளிரையும் பொருட்படுத்தாமல் அவர் தொடர்ந்து பாத யாத்திரை மேற்கொண்டு வருகிறார்.

இந்த நிலையில் ஜலந்தர் அருகே உள்ள பிலாப்பூர் பகுதியில் ராகுல் காந்தி நடைபயணத்தை தொடங்கினார். அவருடன் ஜலந்தர் தொகுதியைச் சேர்ந்த காங்கிரஸ் எம்.பி. சந்தோக்சிங் சவுத்ரி கலந்து கொண்டார். நடைபயணத்தின்போது மயங்கி விழுந்த அவர் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார். அவர் வழியிலேயே இறந்து விட்டதாக மருத்துவர்கள் தெரிவித்தனர். மாரடைப்பால் மரணம் அடைந்த அவருக்கு வயது 76.

அவரது மறைவால் பஞ்சாப் காங்கிரசார் ஆழ்ந்த துக்கத்தில் உள்ளனர். ராகுல் காந்தி உள்ளிட்ட தலைவர்கள் அவரது உடலுக்கு அஞ்சலி செலுத்தினார்கள்.

சந்தோக்சிங் சவுத்ரி 1946-ம் ஆண்டு ஜூன் 18-ந்தேதி பஞ்சாப் மாநிலம் ஜலநகர் மாவட்டம் காலிவால் பகுதியில் பிறந்தார். வக்கீலான அவர் பஞ்சாப் காங்கிரஸ் மந்திரி சபையிலும் இடம்பெற்று இருந்தார். 2019 பாராளுமன்ற தேர்தலில் அவர் வெற்றி பெற்று இருந்தார்.

காங்கிரஸ் எம்.பி.யின் மறைவை தொடர்ந்து ராகுல் காந்தியின் பாதயாத்திரை அடுத்த 24 மணி நேரத்துக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.



# இந்தியாவில் 900 கி.மீ. தொலைவில் வசித்த இரட்டையர்கள் ஒரே நேரத்தில் மரணத்தைத் தழுவினர்

ராஜஸ்தான் மாநிலம் பார்மரைச் சேர்ந்த இரட்டையர்கள் சுமர், சோஹன் சிங் வெவ்வேறு மாநிலங்களில் 900 கிமீ தொலைவில் வசித்து வந்தனர். அவர்கள் வினோதமான சூழ்நிலைகளில் ஒரே நாளில் இருவரும் சில மணிநேர இடைவெளியில் இறந்தனர். ஒருவர் குஜராத் மாநிலம் சூரத்தில் ஒரு வீட்டின் மொட்டை மாடியில் இருந்து விழுந்து இறந்தார்.

இன்னொருவர் ஜெய்ப்பூரில் தண்ணீர் தொட்டியில் விழுந்து உயிரிழந்தார். சகோதரர்கள் சுமர், சோஹன் சிங் இருவரின் உடல்களும் அவர்களது சொந்த கிராமமான சார்னோ காதலாவில் தகனம் செய்யப்பட்டன.

இவர்களில் சுமர், குஜராத்தில் வேலை செய்து வந்தார். சோகன்சிங் ஆசிரியர் தேர்வுக்குத் தயாராகி வந்தார்.



# டெல்லியில் மீண்டும் ஒரு பயங்கரம்: 15 மீட்டர் தொலைவுக்கு காரில் இழுத்துச் செல்லப்பட்ட மகளிர் ஆணையத் தலைவி

டெல்லி மகளிர் ஆணைய தலைவராக இருந்து வருபவர் ஸ்வாதி மாலிவால். இவர் எய்ம்ஸ் மருத்துவமனையின் 2-வது நுழைவு வாயிலுக்கு எதிரே இன்று (ஜன 19) அதிகாலை 3.11 மணியளவில் நின்று கொண்டு இருந்தார்.

அப்போது, கார் ஓட்டுநர் ஒருவர், அவரை 10 முதல் 15 மீட்டர் தொலைவுக்கு காரில் இழுத்துச் சென்ற அதிர்ச்சி சம்பவம் நடந்து உள்ளது.

இதுபற்றி ஸ்வாதி மாலிவால் தனது டுவிட்டர் செய்தியில், “டெல்லியில் பெண்களின் பாதுகாப்பு சூழல் பற்றி ஆய்வு செய்வதற்காகச் சென்றேன். அப்போது, குடிபோதையில் இருந்த கார் ஓட்டுநர், என்னிடம் பாலியல் துன்புறுத்தலில் ஈடுபட்டார். அவரை பிடிக்க முயன்றேன். ஆனால், காரின் ஜன்னலில் எனது கையை அவர் சிக்க வைத்து விட்டார். அதன்பின் காருடன் என்னை இழுத்துச் சென்றார். கடவுள் என்னை காப்பாற்றி விட்டார்” என்று தெரிவித்து உள்ளார்.

டெல்லியில் மகளிர் ஆணைய தலைவரே பாதுகாப்புடன் இல்லை எனும்போது, நிலைமையை கற்பனை செய்து பாருங்கள் என்று அவர் தெரிவித்துள்ளார்.

இந்த சம்பவத்தில் குடிபோதையில் இருந்த கார் ஓட்டுநர் ஹரீஷ் சந்திரா (வயது 47) கைது செய்யப்பட்டு உள்ளார்.

புத்தாண்டு தினத்தில் அஞ்சலிசிங் என்ற பெண் காரில் 13 கிமீ இழுத்துச்செல்லப்பட்ட சம்பவம் போல் மகளிர் ஆணையத் தலைவிக்கே நடந்துள்ளது பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

THANA INSURANCE Inc.

# Thana Insurance Inc

## NON MEDICAL INSURANCE

| AGE | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | | 70 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 10 K | 27 | 23 | 29 | 27 | 35 | 30 | 44 | 36 | 61 | 48 | 84 | 63 |
| 25 K | 37 | 33 | 47 | 40 | 54 | 49 | 76 | 64 | 106 | 84 | 148 | 105 |
| 50 K | 69 | 62 | 88 | 74 | 103 | 92 | 147 | 123 | 206 | 162 | 290 | 205 |
| 100 K | 133 | 118 | 172 | 144 | 202 | 179 | 289 | 240 | 406 | 318 | N/A | N/A |
| 200 K | 260 | 231 | 338 | 282 | 398 | 353 | N/A | N/A | N/A | N/A | N/A | N/A |

## 20 YEARS TERM - NON MEDICAL INSURANCE

| AGE | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | | 70 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 100K | 32 | 26 | 50 | 40 | 86 | 60 | 140 | 94 | 265 | 171 | 450 | 296 |
| 200 K | 60 | 46 | 103 | 74 | 166 | 115 | 275 | 182 | N/A | N/A | N/A | N/A |

INVESTMENTS

Protect
once
helps your life






LIFE INSURANCE
ஆயுட் காப்புறுதி
Thana Manickavasagar
Insurance Broker
Cell : 416-728-5772
Office : 416-519-3896
thana7@gmail.com www.thana.ca
fax : 647-547-8147
80 Nashndene Road ,#D218, Scarborough,ON,M1V 5E4

# சூடு பிடிக்கும் உள்ளூராட்சித் தேர்தல்: வடக்கில் இம்முறை அதிக கட்சிகள் போட்டி

- எமது யாழ் செய்தியாளர்



இலங்கையின் அடிப்படை அதிகார அலகான உள்ளூராட்சித் தேர்தல் அறிவிக்கப்பட்டிருந்தாலும் அது உறுதியாக நடைபெறுமா என்று தெரியாத நிலையிலும் கட்சிகள் தமது ஏற்பாடுகளை தீவிரமாக இறங்கியுள்ளன.

தமிழர் தாயக பகுதிகளான வடக்கு - கிழக்கில் இம்முறை தமிழ்க் கட்சிகள் பிளவுபட்டு நிற்கின்றன. இது தமிழ் மக்களிடையே பெரும் கவலையையும் ஏமாற்றத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில் வடக்கு மாகாணத்தில் இதுவரை இல்லாத வகையில் கட்சிகள் களமிறங்குகின்றன.

அவ்வகையில் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 23 கட்சிகள் உள்ளூராட்சித் தேர்தலில் களமிறங்குவது உறுதி செய்யப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டுகளைவிட 2023ஆம் ஆண்டு இடம் பெறக் கூடும் என்று எதிர்பார்க்கப்படும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் இம்முறை அதிக கட்சிகள் போட்டியிடவுள்ளன.

இதற்கமைய யாழ்ப்பாணம் மற்றும் முல்லைத்தீவில் தலா 23 கட்சிகளும், கிளிநொச்சியில் 15 கட்சிகளும், வவுனியாவில் 29 கட்சிகளும் போட்டியிடும் அதேநேரம் மன்னாரில் 25 கட்சிகளும் போட்டியிடவுள்ளதாக தமது முகவர்களை நியமித்துள்ளனர்.

2023 உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடவுள்ள கட்சிகள் மாவட்டங்களில் தமது அதிகாரமளிக்கப்பட்ட முகவர்களை நியமிக்கும் இறுதித் தினம் நேற்றுடன் முடிவடைந்த நிலையில் அவ்வாறு முகவர்களை நியமித்த கட்சிகளின் எண்ணிக்கையின் அடிப்படையிலேயே இந்த எண்ணிக்கை கணக்கிடப்படுகின்றது.

இதேநேரம் இந்த கட்சிகளின் எண்ணிக்கைக்கு அப்பால் சுயேச்சை குழுக்களும் போட்டியிடுவதும் குறிப்பிடத்தக்கது.

வடக்கு கிழக்கு பகுதிகளில் பிரதான தமிழ் அரசியல் அமைப்பாக இருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் பாரிய பிளவு ஏற்பட்டுள்ள நிலையில், இலங்கை தமிழரசுக் கட்சியைத் தவிர அண்மையில் வரை அதில் அங்கமாக இருந்த டெலோ மற்றும் புளொட் கட்சியினரும் அதிலிருந்து வெளியேறி, அதே கூட்டமைப்பு என்ற பெயரில் புதிய அணியை உருவாக்கியுள்ளன.

டெலோ மற்றும் புளொட்டுடன் முன்னர் கூட்டமைப்பிலிருந்து விலகிய சுரேஷ் பிரேமச்சந்திரன் தலைமையிலான ஈ பி ஆர் எ.ஃ.ப் எப், சிவாஜிலிங்கம் மற்றும் சிறீகாந்தாவின் தமிழ்த் தேசியக் கட்சி, ஜனநாயகப் போராளிகள் கட்சி ஆகியவையே புதிய கூட்டணியை அமைத்துள்ளன.

எனினும் அவர்களின் விளம்பரத்தைக் காணும் போது, ஆங்கிலத்தில் TNA என்பதற்கு முன்னர் சிறியதாக D என்ற எழுத்தைச் சேர்த்துள்ளனர். அதாவது "ஜனநாயக" தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற தோற்றத்தை அவர்கள் ஏற்படுத்தியுள்ளனர். ஆனால் அதை தமிழில் ஏன் அவ்வகையில் "ஜ" என்ற வார்த்தையை முன்னால் போடவில்லை என்பதற்கான விளக்கம் ஏதும் இதுவரை இல்லை.

இதனிடையே கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான கட்சியையும் இந்த கூட்டணியில் சேருமாறு அழைப்பு விடுக்கப்பட்டபோதும் அந்த அழைப்பு மறுக்கப்பட்டு விட்டது.

அதேவேளை வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் விக்னேஸ்வரன் தலைமையிலான கட்சியும் இவர்களுடன் இணைவார் என்று முன்னர் கூறப்பட்டது. எனினும், தனக்கு கட்சியில் செயலாளர் நாயகம் பதவியை அளிக்கவோ அல்லது தமது கட்சியின் மான்ஹ சின்னத்திலோ போட்டியிட இதர தலைவர்கள் உடன்படவில்லை, எனவே தனியாகப் போட்டியிடுகிறோம் என்று அறிவித்துள்ளார்.

புதிதாக உருவாக்கப்பட்டுள்ள கூட்டணியில் தலைவர்கள் சட்டப் பிரச்சனைகளைத் தவிர்ப்பதற்கான முன்னால் "D" என்ற எழுத்தை பெரியதாகத் தெரியும்படி சேர்க்காமல் சிறிய-தாகப் போட்டுள்ளது அவர்களின் நேர்மையற்ற அணுகுமுறையை காட்டுகிறது என்று கருத்துக்கள் வெளியாகியுள்ளன. அவர்களை சிலர் "டுப்ளிகேட்" டி என் ஏ என்று இப்போதே விமர்சிக்க ஆரம்பித்துள்ளதாக யாழ்ப்பாண மக்கள் கூறுகின்றனர்.




# யாழ் மாநகர சபை முதல்வர் தேர்வில் தொடரும் உள்குத்து

- எமது யாழ் செய்தியாளர்




இலங்கையில் உள்ளூராட்சி சபைகளிற்கான தேர்தல் அறிவிக்கப்பட்டிருந்தாலும் அவை உறுதியாக நடைபெறுமா என்று தெரியாத நிலையில், இருக்கும் சபைகளிலும் பலவகைகளில் நெருக்கடிகள் தொடருகின்றன.

விரைவாக உள்ளூராட்சித் தேர்தல் நடைபெறுமாயின் யாழ் மாநகர சபைகளிற்கு புதிய உறுப்பினர்களும், அவர்களில் ஒருவர மேயராக-மாநகர முதல்வராகத் தேர்வாவார். ஆனால், அதுவரை யாழ் மாநகர சபையின் அமர்வுகளை முன்னின்று நடத்த முதல்வர் இல்லாததால் நகரின் தூய்மைப் பணி உட்படப் பல அத்தியாவசியப் பணிகள் முடங்கக்கூடாது என யாழ் மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

இந்நிலையில் புதிய மாநகர முதல்வர் வியாழன் (19) அன்று தேர்வாவார் என்று எதிர்பாக்கப்பட்ட போதும் அதுவும் பொய்த்துப் போனது.

வியாழக்கிழமை காலை யாழ்ப்பாணம் மாநகர சபை கூடிய நிலையில், அவையில் போதிய உறுப்பினர்கள் (கோரம்) இல்லாத காரணத்தால் முதல்வர் தேர்வு இடை நிறுத்தப்படுவதாக உள்ளூராட்சி ஆணையாளர் தெரிவித்ததையடுத்து சபை ஒத்தி வைக்கப்பட்டது.

தமிழர் தாயக பகுதியில் மிக முக்கிய உள்ளூராட்சி அமைப்பான யாழ்ப்பாணம் மாநகர சபையின் மாநகர சபையின் முதல்வரைத் தேர்வு செய்வதற்கான கூட்டம் வியாழனன்று உள்ளூராட்சி ஆணையாளர் செ. பிரணவநாதன் தலைமையில் மாநகர சபை மண்டபத்தில் இடம்பெற்றது. அதன் போது அவையில் கோரம் இல்லாததால் மாநகர முதல்வர் தேர்வு ஒத்திவைக்கப்படுவதாக ஆணையாளர் அறிவித்தார்.

யாழ் மாநகர சபையில் ஏற்பட்ட முதல்வர் வெற்றிடத்தை நிரப்பும் நோக்கில் 19 ஆம் திகதியன்று முதல்வர் தேர்வு நடைபெறும் என்று உள்ளூராட்சி ஆணையாளர் அறிவித்ததையடுத்து மாநகர சபையின் 45 உறுப்பினர்களில் 24 உறுப்பினர்கள் சபையில் பிரசன்னமாகி இருந்தபோது சபையில் 24 உறுப்பினர்கள் சமூகமளித்துள்ளதனால் கோரம் உள்ளது என்று கூறி முதல்வர் தேர்வு இடம்பெறுவதாக ஆணையாளர் தெரிவித்தார்.

இதற்கமைய இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் சார்பில் இ. ஆனல்ட்டின் பெயரை உறுப்பினர் பி.இ. கிறேசியன் முன்மொழிய உறுப்பினர் என்.எம். பாலசந்திரன் வழிமொழிந்தபோது வேறு தேர்வு ஏதும் இருக்கவில்லை. இதன்போது சபையில் இருந்த நான்கு உறுப்பினர்கள் இவரது தேர்விற்கு எதிர்ப்புத் தெரிவித்து வெளியேறுவதாக்கூறி சபையில் இருந்து வெளியேறினர்.



இதன் காரணமாக சபை உறுப்பினர்களின் எண்ணிக்கை 20 ஆகக் குறைய அவையை நடத்துவதற்குத் தேவையான 50% எண்ணிக்கையான 23 ஐ விட எண்ணிக்கை குறைவாக இருக்கும் நிலை ஏற்பட்டது.

இதனையடுத்து சபையில் கோரம் போதாமை காரணமாக வாக்கெடுப்பு ஒத்தி வைக்கப்படுவதாக ஆணையாளர் தெரிவித்தபோது கோரம் இருப்பதாக அறிவிக்கப்பட்டே தேர்வு ஆரம்பமாகியது முதல்வர் வேட்பாளரை எதிர்த்தே உறுப்பினர்கள் வெளிநடப்பு எனவும் தேர்வை ஒத்திவைக்க வேண்டிய தேவை இல்லை என உறுப்பினர் இ.ஆனல்ட் கோரினார்.

இந்த நிலையில் இன்றைய முதல்வர் தேர்வு ஒத்தி வைக்கப்படுகின்றது அடுத்த திகதி உரிய முறையில் அறிவிக்கப்படும் என உள்ளூராட்சி ஆணையாளர் சபையில் அறிவித்தார்.

சபையின் வியாழன் அமர்விற்கு த.தே.கூட்டமைப்பு - 15 உறுப்பினர்கள், த.தே.ம. முன்னணியின் மூன்று உறுப்பினர்கள், ஈ.பி.டி.பி. கட்சியின் நால்வர் மற்றும் சுதந்திரக் கட்சி, கூட்டணி ஆகியவற்றின் தலா ஒரு உறுப்பினர்களும் பிரசன்னமாகியிருந்தனர்.

யாழ் மாநகர சபையின் முதல்வராக இருந்த விஸ்வலிங்கம் மணிவண்ணன் சமர்ப்பித்த வரவு-செலவு திட்டம் சபையில் தோல்வியடைந்த சூழலில் அவர் பதவி விலகும் நிலைக்குத் தள்ளப்பட்டார்.

உள்ளூராட்சி சபைக்கான தேர்தல்கள் தொடர்பில் கட்சிகளும், வேட்பாளர்களும் அதிக கவனம் செலுத்தி வருவதால், மாநகர முதல்வர் தேர்வில் யாரும் உண்மையான அக்கறை காட்டவில்லை என்று கூறப்படுகிறது. சபையின் காலம் இன்னும் மிகச் சொற்ப காலமே உள்ளதால் முதல்வராக தேர்வாகி சபையில் தோல்விகளைச் சந்திப்பதைவிட புதிய தேர்தல்கள் மூலம் சபைக்குத் தேர்வாகி அதன் பின்னர் முதல்வர் பதவியில் கவனம் செலுத்துவது நலம் என்கிற கருத்தும் நிலவுகிறது என்பதையும் அவதானிக்க முடிகிறது.

எனினும் அடுத்த 14 நாள்களிற்குள் மீண்டும் ஒரு முறை முதல்வர் தேர்விற்கு உள்ளூராட்சி ஆணையாளர் ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும் என்பதே சட்ட ஏற்பாடாகும்.

இதேநேரம் முதல்வர் தேர்வின்போது சபையில் இருந்து வெளிநடப்புச் செய்த நான்கு உறுப்பினர்களில் மூவர் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினையும் ஒருவர் ஈ.பி.டி.பியினையும் சேர்ந்தவர்கள் என்பதோடு அதன் பிறகு சபையில் பிரசன்னமானவர்களில் 15 பேர் த.தே.கூட்டமைப்பும், மூவர் ஈ.பி.டி.பி, கூட்டணி மற்றும் சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த தலா ஒரு உறுப்பினர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.



# கனடா இந்து

CANADA HINDU

*Published by Thurkeswaram, Sridurka Hindu Temple, 30 Carnforth Road, Toronto, ON M4A 2K7 TEL : 416-759 9648*

# துர்க்கேஸ்வரத்தில் பாலஸ்தாபனம் 22-1-2023 ஞாயிற்றுக்கிழமை

**றொறன்ரோவில் அருட்பிரசித்தம் பெற்ற திருக்கோவிலான துர்க்கேஸ்வரத்தில் பாலஸ்தாபனம் நடைபெறவுள்ளது. ஜனவரி 20ம் திகதி வெள்ளிக்கிழமை விநாயகர் வழிபாட்டுடன் ஆரம்பித்து, பூர்வாங்கக்கிரியைகளும், யாகபூஜைகளும் ஜனவரி 21ம் திகதி சனிக்கிழமையும் தொடர்ந்து நடைபெற்று, ஜனவரி 22ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10:15 மணிக்கு பாலஸ்தாபனம் இடம் பெறும்.**

கனடாவில் மிகப்பெரும் கும்பாபிஷேகம் 2001ம் ஆண்டு, துர்க்கேஸ்வரத்தில் நடைபெற்றது யாவரும் அறிந்ததே. 2023ம் ஆண்டு மீண்டும் இவ்வாலயத்தில் கும்பாபிஷேகம் நடைபெறுவதற்கு ஏதுவாக, பாலஸ்தாபனத்தை 22-1-2023 ஞாயிற்றுக்கிழமை நிகழ்த்த ஆலயத்தினர் தீர்மானித்துள்ளனர். பாலஸ்தாபனம் பற்றிய விளக்கத்தினை ஆலய பிரதமகுருக்களிடம் கேட்டபோது,

"கடந்த காலங்களில் இவாலயத்தில் நடைபெற்ற பூஜைகள், ஹோமங்கள் மற்றும் அருட்பெருவிழாக்களால் அதிஅருட்சக்தி பெற்று விளங்கும் விக்கிரகங்களில் உள்ள சக்தியை மந்திரபூர்வமான கிரியைகளால் கும்பங்களில் வரவழைத்து, அதன் பின்னர் சன்னிதானங்களில் உள்ள விக்கிரகங்களை பாலாலயம் என அழைக்கப்பெறும் சிறு ஆலயத்தில் ஸ்தாபித்து, கும்பங்களை அபிஷேகித்து தெய்வங்களை வழிபடுவதற்கான விஷேட ஏற்பாடே பாலஸ்தாபனமாகும். பாலஸ்தானம் நிகழ்ந்த பின்னர், ஆலயத்தில் சன்னிதானங்கள் மீளப்புதுப்பிக்கப்பெறும். புனருத்தாரண வேலைகள் துரிதமாக நடைபெறும். கும்பாபிஷேகத்துக்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பெறும். இவ்வாறாக, மூன்றரை மாதங்கள் நடைபெற்று பின்னர் மே மாதம் 4ம் திகதி, 2023ம் ஆண்டு வியாழக்கிழமை மஹாயாக மஹாகும்பாபிஷேகம் நடைபெறும்"

என்று சிவஸ்ரீ. தியாகராஜாக்குருக்கள் கணஸ்சுவாமிகள் தெரிவித்தார். ஆலயத்தில் ஏற்கெனவே புதிய வர்ணம் தீட்டும் திருப்பணிகள் ஆரம்பித்துவிட்டன. ராஜகோபுரத் திருப்பணிகள் பூர்த்தியுறும் நிலையில் உள்ளன. துர்க்கேஸ்வரம் கும்பாபிஷேகம் பற்றி பக்தர் ஒருவரிடம் கேட்டபோது,

"பக்தர்கள் அம்பாளின் திருவருளைப் பெறவேண்டும் என்பதற்காக பல சிறப்பான ஹோமங்களையும் வழிபாடுகளையும் இவ்வாலயம் தொடர்ந்து செய்துவருகிறது. எதையுமே மேன்மையாகவும் மகத்துவம் மிளிரவும் செய்யும் இவ்வாலயத்தின் கும்பாபிஷேகமும் அவ்வாறே அமையும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை"

எனக் குறிப்பிட்டார்.

## துர்க்கேஸ்வரம் மஹாகணபதிப் பெருமானுக்கு விநாயக சஷ்டி வழிபாடு

**08-12-2022 வியாழன் முதல் 28-12-2022 புதன் வரை**

துர்க்கேஸ்வரத்தில் விநாயகர்சஷ்டி விரதத்தினை முன்னிட்டு, அலங்கார மண்டபத்தில் உயர்பீடத்தில் பஞ்சமுகவிநாயகர் வீற்றிருக்க, கும்பங்கள் நிலை நிறுத்தி, விம்பத்திலும் கும்பத்திலும் அருள் நிறைத்து, விநாயகருக்குப் பிரீதியான நைவேத்தியங்கள் படைத்து, அறுகினாலும், மலர்களினாலும் அர்ச்சித்து வழிபாடுகள் நிகழவிருக்கின்றன.

தினமும் மாலை 6.30 மணிக்கு கும்பபூஜை, சங்கல்ப்பம் நிகழ்ந்து, தொடர்ந்து மஹா கணபதிக்கு அபிஷேகம் நடைபெறும். இரவு 7.31 மணிக்கு விஷேட பூஜை, வழிபாடுகள் நிகழ்ந்து, தொடர்ந்து வசந்த மண்டபத்தில் வீற்றிருக்கும் துர்க்கேஸ்வரம் றொறன்ரோப் பெரும் பிள்ளையாருக்கு விஷேட வழிபாடுகள் நடைபெற்று, சுவாமி வீதிவலமும் அருட் தரிசனமும் பக்தர்களுக்கு கிட்டவுள்ளது.

அருள்நிறை துர்க்கேஸ்வரம் கணபதியை வழிபட்டு அருள்பெற நித்தமும் பக்தர்கள் துர்க்கேஸ்வரத்துக்கு வருகை தருகின்றனர். இவ்விழா டிசெம்பர் 28ம் திகதி புதன்கிழமை பூர்த்தியாகும்.

**1-1-2023 ஞாயிறு மாலை 5 மணிக்கு துர்க்கேஸ்வ்ரத்தில் "கனடா TMS" V.S.தெய்வேந்திரன் தலைமையில் கனடாக் கலைஞர் வழங்கும் பக்திப் பாமாலை**

உ
சிவமயம்

# ராமநாத இந்துமத கிரியாபீடம்

*திருமணம் - வீடு குடிபுகுதல் - ருது சாந்தி பூஜை - புண்யாகவாசனம் - 60ம் கல்யாணம் (சஷ்டியாப்த பூர்த்தி) - 31ம் நாள் துடக்கு கழித்தல் - வீட்டுக்கிருத்தியம் (திவசம்) - ஆட்டத்திவசம் - மாசியம் - சிரார்த்தம் - புரட்டாதி மாளையம - கணபதி ஹோமம் - லட்சுமி ஹோமம் - நவக்கிரக ஹோமம் - தோஷ நிவர்த்தி பூஜைகள் - சத்தியநாராயண பூஜை - வளைகாப்பு மற்றும் அனைத்து இந்துமத சேவைகளும் பெற்றுக்கொள்ளலாம்*

**இன்னும் பல ஆண்டுகளுக்கான பஞ்சாங்கத்தினை நாம் கணித்து வைத்திருப்பதனால் திருமண மண்டபங்களை முன்கூட்டியே ஒழுங்கு செய்ய முகூர்த்தங்களை நம்மிடம் கணித்துக் கொள்ளலாம்**

**வைபவங்களுக்கான மங்கள இசை ஏற்பாடும் செய்து தரப்படும்**

**647-927 1434 ராம்ஜி ஐயா 647-618 7755**

கனடிய செய்திகள்
Canadian News

# City of Vaughan Celebrates 'Tamil Heritage Month and Thai Pongal' with the support of Canadian Tamil Congress.

# கனடிய தமிழர் பேரவையின் ஆதரவுடன் தமிழர் மரபுரிமை மாதத்தையும் தைப்பொங்கல் விழாவையும் கொண்டாடிய கனடாவின் வோன் நகர சபை



கனடிய தமிழர் பேரவையின் ஆதரவுடன் தமிழர் மரபுரிமை மாதத்தையும் தைப்பொங்கல் விழாவையும் கொண்டாடிய கனடாவின் வோன் நகர சபை கடந்த திங்கட்கிழமை இந்த பெருவிழாவிற்காக தனது நகரசபையின் வளாகத்தை ஒதுக்கித் தந்தது. நூற்றுக்கணக்கான மக்கள் அங்கு கலந்து கொண்டனர்.

கனடாவில் உள்ள நூற்றுக்கணக்கான மாநகர சபைகள் மற்றும் சில மாகாண சபைகள் இந்த இரண்டு விழாக்களையும் ஒவ்வொரு தை மாதத்திலும் கொண்டாடி வருவது இங்கு குறிப்பிடத்தக்கது.

அந்த வகையில் City of Vaughan நகர சபையின் மேயர் Steven Del Duca அவர்கள் தலைமையில் இந்த விழாக்கள் நடைபெற்றன.

விழாவில் நமது பாராளுமன்ற உறுப்பினர் ஹரி ஆனந்தசங்கரி மற்றும் கல்விச்சபை உறுப்பினர் நீதன் சாண் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

கனடிய தமிழர் பேரவையின் சார்பில் அதன் தலைவர் சிவன் இளங்கோ அவர்கள் தமிழ் மொழியின் சிறப்புக்கள் மற்றும் அதன் தொன்மை ஆகியவை தொடர்பாக சிறப்புரையாற்றினார். தமிழிலும் ஆங்கிலத்திலும் அமைந்த அவரது உரை வேற்றின மக்களையம் கவரும் வகையில் இருந்தது குறிப்பிடத்தக்கது.









# நமது தமிழ் மொழியின் உயரிய பாரம்பரியத்தைப் பற்றி நாங்கள் மிகவும் பெருமைப்படுகிறோம்

## வான் நகரசபை நடத்திய தமிழர் மரபுரிமை மாத விழாவில் கனடிய தமிழர் காங்கிரஸ் தலைவர் சிவன் இளங்கோ புகழாரம்




நமது தமிழ் மொழியின் உயரிய பாரம்பரியத்தைப் பற்றி நாங்கள் மிகவும் பெருமைப்படுகிறோம். கடந்த திங்கட்கிழமை கனடாவின் வான் நகரசபை நடத்திய தமிழர் மரபுரிமை மாத விழாவில் சிறப்பு விருந்தினர் உரையாற்றிய கனடிய தமிழர் காங்கிரஸ் தலைவர் சிவன் இளங்கோ புகழாரம் சூட்டினார். வான் நகரசபையின் மேயரும் Steven Del Duca அவர்கள் தலைமையில் நடைபெற்ற இந்த பெருவிழாவில் நூற்றுக்கணக்கான மக்கள் கலந்து கொண்டனர்.

அங்கு உரையாற்றிய திரு. சிவன் இளங்கோ தொடர்ந்து பேசியதாவது, ஏனைய சில சமூகங்களைப் போலவே. எமது தமிழ் மொழியும், மொழி, இலக்கியம், நெறிமுறைகள் மற்றும் ஒழுக்க விழுமியங்கள் உட்பட பல அம்சங்களை உள்ளடக்கியது. எனவே நமது பாரம்பரியத்தைப் பற்றி நாங்கள் மிகவும் பெருமைப்படுகிறோம்.

2000 ஆண்டுகளுக்கு முன்பு எழுதப்பட்ட ஒரு உன்னதமான தமிழ் மொழி உரைகள் அடங்கிய திருக்குறள், மக்களின் நெறிமுறைகள் மற்றும் ஒழுக்கம் குறித்து இதுவரை எழுதப்பட்ட மிகப் பெரிய படைப்புகளில் ஒன்றாக பரவலாகப் பெசப்படுகிறது.




சமீப காலங்களில், 3,000 ஆண்டுகளுக்கு முன்பே தமிழ் உள்ளடக்கியதைப் பற்றி பேசும் அதே வேளையில், பன்முகத்தன்மை மற்றும் உள்ளடக்கம் குறித்து அதிக கவனம் மற்றும் விவாதங்கள் இடம்பெற்று வருகின்றன. பண்டைய தமிழ்ப் புலவர் கணியன் பூங்குன்றனார் "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற அற்புதமான வரியை எமக்குப் படைத்துச் சென்றார். அந்த வரி பின்வருமாறு ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது: "Every country is my country and very person is my Kin". ஒவ்வொருவரையும் தன் சொந்த மக்களாகக் கருதுவதைத் எமது தமிழ் மக்கள் நீண்ட காலமாக மதித்து வருகின்றார்கள்.

கனடியத் தமிழர் பேரவையின் சார்பில், ஒவ்வொருவருக்கும் தமிழ் மரபு மாத நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

தமிழ் பாரம்பரிய மாதத்தை இந்த அழகிய வாகன் நகரில் இன்று அவரது வணக்க மேயர், கவுன்சிலர்கள், நகர ஊழியர்கள் மற்றும் உங்கள் அனைவருடனும் கொண்டாடுவதில் நாங்கள் மிகவும் மகிழ்ச்சியடைகிறோம். இந்தியா மற்றும் இலங்கைக்கு வெளியில் மிகப்பெரிய தமிழ் புலம்பெயர்ந்தவர்களைக் கொண்ட நாடாக கனடா கருதப்படுகிறது.

எங்களில் பெரும்பாலோர் 80 மற்றும் 90 களில் பெருமளவிலான இன முரண்பாடுகள் மற்றும் பாகுபாடு காரணமாக இலங்கையில் இருந்து வந்தவர்கள். தமிழ் மரபு மாதத்தை வாகனத்தில் கொண்டாடுவோம் என்று அந்த நேரத்தில் நம்மில் யாரும் எதிர்பார்த்திருக்க மாட்டார்கள் என்று நினைக்கிறேன்.

எங்களை வரவேற்று இன்று எங்களுடன் இணைந்து இந்த முக்கியமான கொண்டாட்டத்தை நடத்தியதற்காக மேயர், கவுன்சிலர்கள் மற்றும் நகர ஊழியர்களுக்கும் நாங்கள் நன்றி கூறுகிறோம்.

உலகெங்கிலும் 90க்கும் மேற்பட்ட தமிழர்கள் உள்ளனர் மற்றும் உலகளாவிய தமிழ் சமூகம் வார இறுதியில் தைப் பொங்கலைக் கொண்டாடியது.

தைப் பொங்கல் தமிழர்களுக்கு மிகவும் சிறப்பு வாய்ந்த பண்டிகையாகும், ஏனெனில் இந்த பண்டிகை எவ்வித மதப் பின்னணியின்றி அனைவராலும் கொண்டாடப்படுகிறது. தமிழர்கள் தமிழ் பாரம்பரிய மாதத்தை ஜனவரி மாதத்தில் கொண்டாடுகிறார்கள்.

தமிழ் அடையாளத்தின் ஒரு அங்கமான தமிழ் மொழியானது இன்றும் உலகம் முழுவதும் 90 மில்லியனுக்கும் அதிகமான மக்களால் பேசப்படும் பழமையான மொழியாகும். தமிழ் வம்சாவளியினர் அல்லாத இரண்டு தமிழ் அறிஞர்களின் கூற்றுகளை மேற்கோள் காட்ட விரும்புகிறேன்.

ஜார்ஜ் ஹார்ட், தமிழ் செம்மொழி மாநிலமாகத் திகழ்வது குறித்து எழுதிய கடிதத்தில், "செம்மொழி பாரம்பரியமாகத் தகுதிபெற, ஒரு மொழி பல அளவுகோல்களைப் பொருத்த வேண்டும்:

- இது பழமையானதாக இருக்க வேண்டும்,
- இது ஒரு சுயாதீனமான பாரம்பரியமாக இருக்க வேண்டும், அது பெரும்பாலும் வேறொரு பாரம்பரியத்தின் கிளையாக அல்ல
- இது ஒரு பெரிய மற்றும் மிகவும் வளமான பண்டைய இலக்கியங்களைக் கொண்டிருக்க வேண்டும்.

இந்தத் தேவைகள் ஒவ்வொன்றையும் தமிழ் பூர்த்தி செய்கிறது.

- தமிழ் மிகவும் பழமையானது (லத்தீன் மற்றும் அரபு மொழி ஆகியவற்றை விட பழமையானது)
- இது சமஸ்கிருதம் அல்லது பிற மொழிகளின் செல்வாக்கின்றி, முற்றிலும் சுதந்திரமான பாரம்பரியமாக எழுந்தது மற்றும்
- அதன் பழங்கால இலக்கியங்கள் பரந்த மற்றும் வளமானவை.

மற்றொரு அறிஞரான டேவிட் ஷல்மன், "தெற்காசியாவில் உள்ள எண்பது மில்லியன் மக்களாலும், உலகம் முழுவதும் பரந்து விரிந்து கிடக்கும் புலம்பெயர் மக்களாலும் பேசப்படும் தமிழ், சிறந்த உலக மொழிகளில் ஒன்றாகும்". தமிழ் ஒரு மொழியை விட மேலானது.

அது நம் தமிழ் மொழியைப் பற்றியது. நாம் பெருமைப்படும் மற்றும் கொண்டாட வேண்டிய வி'யங்கள் இருக்கலாம்.

உங்கள் ஆதரவிற்காக மேயர், கவுன்சிலர்கள் மற்றும் நகர ஊழியர்களுக்கு மீண்டும் எங்கள் நேர்மையற்ற பாராட்டுக்கள் மற்றும் உங்கள் அனைவருடனும் இணைந்து செயல்பட நாங்கள் எதிர்நோக்குகிறோம்" என்றார்.

# பேச்சுவார்த்தையில் இலங்கையில் உள்ள தமிழ்த் தரப்புகளின் பொறுப்புப்பற்றிய தமிழ்ச் சிவில் சமூகத்தவர்களின் கரிசனைகள்

**(குறிப்பு ஸ்ரீலங்கா என்பதை இலங்கை என்று வாசிக்கவும் - ஆசிரிய பீடம் - கனடா உதயன)**

இலங்கைத் தீவின் தேசங்களுக்கு இடையிலான தேசிய இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான பேச்சுவார்த்தைகள் மீண்டும் ஆரம்பித்துள்ளன. இலங்கையின் ஜனாதிபதி எதிர்வரும் பெப்ரவரி 04ம் திகதிக்கு முன்னதாக இனப்பிரச்சினைக்கான தீர்வுகளைக் காணப்போவதாகக் கூறுகின்றார். தமிழர் தரப்போ எவ்வித முன்னாயத்தமோ ஏகோபித்த கொள்கை இணக்கமோ இன்றி பேச்சுவார்த்தைகளில் இணைந்துள்ளது.

இலங்கை இன்று பாரிய பொருளாதாரப் பேரழிவில் சிக்கியுள்ளது. கடந்த எட்டு தசாப்தங்களாக ஏனைய தேசங்களை, குறிப்பாக தமிழ்த்தேசத்தை சிங்கள பௌத்த மேலாதிக்கத்தின் எதிரியாகக் கருதி சிறீலங்கா செயற்பட்டதன் விளைவு இது. இந்த உண்மையை இன்றுவரை சிங்கள தேசத்தின் பெரும்பாலான அரசியல்வாதிகளோ, அதிகாரிகளோ. புத்திஜீவிகளோ, அல்லது மக்களோ வெளிப்படையாக ஏற்றுக்கொண்டதில்லை.

உண்மையை ஏற்க மறுத்தாலும் தேசிய இனப்பிரச்சினையைத் தீர்ப்பதன் மூலமே தற்போதைய பொருளாதாரக் கையறு நிலையிலிருந்து மீளலாம் என்ற யதார்த்தம் உறைத்ததனாலேயே பேச்சுவார்த்தைக்கான அழைப்பு அரசுத்தரப்பால் விடப்படுகின்றன. இதுவே இன்று தமிழர் தரப்புக்கான பலமான நிலையை ஏற்படுத்தியுள்ளது.

இந்த சூழ்நிலையில் தமிழர் தரப்பு பேச்சுவார்த்தைகளில் ஈடுபடும்போது கவனத்தில் கொள்ள வேண்டியவை தொடர்பான எமது கரிசனைகளை நாம் வெளிப்படுத்த விரும்புகின்றோம்.

1. பேச்சுவார்த்தையின் ஒரு தரப்பாக தமிழ்த்தேசத்தை இனவழிப்பு மூலம் அழித்துவிடவும் அதன் இருப்பையும் அடையாளங்களையும் அழிப்பதற்கும் சிறீ லங்கா என்ற செயற்கையான ஒற்றைத் தேசியத்தினுள் அனைவரது அடையாளங்களையும் கரைத்துவிடுவதற்காக செயற்படுகின்ற சிங்கள தேசமும் மறு தரப்பாக இத்தீவின் வடக்கு - கிழக்கைத் தமது மரபுவழித் தாயகமாகக் கொண்டு, அரசியல் கோட்பாட்டினடிப்படையில் தம்மை ஒரு தேசமாக அடையாளப்படுத்துகின்ற, அந்த அடையாளத்தை பாதுகாப்பதற்காக தொடர்ச்சியாக அரசியல் ரீதியிலான போராட்டங்களையும் வீரமும் தியாகங்களும் நிறைந்த விடுதலைப் போரையும் நடாத்திய, எப்போதும் தேர்தல்களில் அதற்கான ஆணைகளை மீள மீள வழங்கி வருகின்ற தமிழ்த் தேசமும் உள்ளன.

2. எந்த ஒரு பேச்சுவார்த்தையிலும் எந்தத் தரப்புக்கும் விட்டுக்கொடுக்க முடியாத அடிப்படையான விடயங்கள் என சில இருக்கும். இனவழிப்பை எதிர்கொள்கின்ற தமிழ்த்தேசத்திற்கு எப்போதும் விட்டுக்கொடுக்க முடியாதவை அவர்களின் தேசிய இருப்புக்கான பாதுகாப்பும் தேசிய அடையாளங்களுக்கான பாதுகாப்புமாகும். இத்தீவின் தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வு என்பது இந்த உத்தரவாதங்களைத் தருவதாகவே எப்போதும் இருக்க வேண்டும். இத்தீவின் தேசிய இனப்பிரச்சினை வரலாற்றில் இடம்பெற்ற பேச்சுவார்த்தைகள் அனைத்தையும் சிறீ லங்கா அரசு தனக்கு சாதகமாகவே பயன்படுத்திக் கொண்டது. இதுவரை நடைபெற்ற பேச்சுவார்த்தைகள் காலத்தை இழுத்தடிப்பதற்கும், தமிழர் தரப்பை பலவீனப்படுத்துவதற்கும் அரைகுறைத்தீர்வுகளை திணிப்பதற்கான முயற்சிகளுக்கும், ஈற்றில் பயனற்ற பேச்சுவார்த்தைகளிலிருந்து தமிழர் தரப்பு ஏமாற்றப்பட்டு வெளியேறும்போது தமிழர்கள் தீர்வுக்குத் தயாரில்லை என்ற பொய்யை உருவாக்குவதற்காகவுமே சிறீ லங்கா அரசால் பயன்படுத்தப்பட்டன என்பதை நாம் மறக்கக் கூடாது.

3. முதலில், பேச்சுவார்த்தைகளுக்கான தெளிவான வழிவரைபடம் ஒன்றை இருதரப்புகளும் இணைந்து தயாரிக்க வேண்டும். இது, பிரதானமாக முக்கிய அடைவுகள், அவற்றுக்கான நேர அட்டவணை என்பவற்றைக் கொண்டிருக்க வேண்டும்.

4. பேச்சுவார்த்தைகள், இனவழிப்பின் விளைவுகளாக தமிழ் மக்கள் அன்றாடம் எதிர்நோக்குகின்ற பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கான பேச்சுவார்த்தைகள், இறுதி அரசியற் தீர்வுக்கான பேச்சுவார்த்தைகள் என இரண்டு தளங்களில் சமாந்தரமாக நடாத்தப்பட வேண்டும்.

5. அன்றாடப்பிரச்சினைகளுக்கான தளத்தில் பின்வருவனவற்றை எவ்வாறு செயற்படுத்துவது என்பது பற்றி பேசப்பட வேண்டும்.

5.1. தமிழர் தாயகத்தில் நடைபெறும் சகல நில அபகரிப்புகளையும் நிறுத்துதலும் காணிகளை மீள வழங்கலும்

5.2. தமிழர் தாயகத்தில் மேற்கொள்ளப்படும் தொல்பொருள் ஆய்வு என்ற போர்வையிலான அனைத்து ஆக்கிரமிப்புகளையும் உடன் நிறுத்துதல்

5.3. சிறைகளிலுள்ள சகல தமிழ் அரசியற் கைதிகளையும் நிபந்தனையற்று விடுவித்தல்

5.4. வலிந்து காணாமலாக்கப்பட்டோருக்கான சர்வதேச விசாரணைகளை ஆரம்பித்தல்

5.5. தமிழ்ப்பிரதிநிதித்துவத்தைக் குறைக்கும் வகையில் மேற்கொள்ளப்பட்டுள்ள உள்ளூராட்சி சபைகளுக்கான எல்லை மறுசீரமைப்புகளை மீளப்பெறல்



5.6. தமிழர் தாயத்தின் குடிப்பரம்பலை மாற்றி அமைப்பதற்காக சுதந்திரத்திற்கு முன்பான பொறுப்பாட்சிக் காலத்திலிருந்து இன்று வரை மேற்கொள்ளப்பட்டுவருகின்ற குடியேற்றங்களுட்பட அனைத்தையும் நிறுத்துதலும் அகற்றுதலும்

5.7.இராணுவமயமாக்கம் நீக்கம். உதாரணமாக, தமிழர் தாயகத்தை பெருமெடுப்பில் ஆக்கிரமித்து, தமிழர்களின் வாழ்வின் சகல அம்சங்களிலும், முன்பள்ளிகளுட்பட தமிழர்தாயகத்தின் சிவில் நிர்வாக செயற்பாடுகளிலும் சிறீ லங்காவின் முப்படைகளும் செய்துகொண்டிருக்கும் அனைத்துத் தலையீடுகளையும் முழுமையாக நிறுத்துதல், அவர்களை முகாம்களுக்குள் முடக்குதல் மற்றும் அளவையும் குறைத்தல்

5.8. தமிழர்கள், தமக்காக போராடி உயிர் நீத்தவர்களையும் இனவழிப்பின்போது இறந்த தமது உறவுகளையும் நினைவு கூர்வதற்கான உரிமையை தடுக்காது இருத்தல், சிறீலங்கா இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள மாவீரர் துயிலுமில்லங்கள் உட்பட தமிழர் சார்பான சகல நினைவுச்சின்னங்களையும் விடுவித்தல், மீள அமைப்பதற்கான தடைகளை நீக்குதல்

5.9. ஈழத்தமிழர்களின் கோரிக்கையான, தமிழர்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட, இனவழிப்பு, மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள் மற்றும் போர்க்குற்றங்கள் தொடர்பாக உடனடியாக சர்வதேச விசாரணைகளை முன்னர் ஒப்புக்கொண்டபடி ஆரம்பிக்க அனுமதித்தல்

5.10. இறுதி அரசியல் தீர்வு எட்டப்படும் வரை தமிழர்கள் தமது தாயகத்தின் அன்றாட அலுவல்களை நடாத்துவதற்காக இடைக்கால நிர்வாகப் பொறிமுறை ஒன்றை அமைத்தல் இந்தப் பேச்சுவார்த்தைத் தளத்தில், இவற்றை அமுல்படுத்துவதற்கான கால அட்டவணைகள் பற்றி பேசப்பட வேண்டும். குறுகிய காலத்தில் இவற்றை உடனடியாக அமுலுக்குக் கொண்டு வருவதன் மூலம் சிறீலங்கா அரசு பேச்சுவார்த்தை மூலம் தேசிய இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான தனது உறுதியையும் நேர்மையையும் தமிழ் மக்களுக்கும் உலகுக்கும் வெளிப்படுத்த முடியும்.

6. இரண்டாவது தளத்தில் இலங்கைத் தீவின் தேசிய இனப்பிரச்சினைக்கான இறுதி அரசியற் தீர்வு நோக்கிப் பேசப்பட வேண்டும். இறுதித் தீர்வுக்கான பேச்சுவார்த்தைகள் காத்திரமானவையாக இருப்பதாயின் அவை இலங்கையின் தற்போதைய ஒற்றையாட்சி அரசியல் யாப்புக்கு அப்பாலான தீர்வை நோக்கியதாக, ஆரம்பத்திலிருந்து இருக்க வேண்டும். 13ம் திருத்தத்தைப்பற்றி பேசுவது, அதன் "பிளஸ்" பற்றி பேசுவது, "மேலவை" பற்றிப் பேசுவது என்று ஒற்றையாட்சி அரசியல் யாப்பினுள் பேச்சுவார்த்தையை முடக்கி காலத்தைக் கடத்தாது நேரடியாகவே தமிழர்களது அபிலாசைகளான பிரிக்க முடியாத தாயகம், தேசியம், தன்னாட்சி, இறைமை என்பவற்றைப் பூர்த்தி செய்யக்கூடிய தீர்வுகளை நோக்கி பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட வேண்டும். அரசியற் தீர்வின் அடிப்படைகளாக வட்டுக்கோட்டைத் தீர்மானம், திம்புக் கோட்பாடுகள், தமிழ் மக்கள் பேரவையின் தீர்வுத் திட்ட முன்மொழிவு என்பவற்றின் உள்ளடக்கங்கள் அமைய வேண்டும்.

7. தமிழ் மக்களால் ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய சிவில் சமூகப் பிரதிநிதிகள், புத்திஜீவிகள் மற்றும் புலம்பெயர் தமிழர்களின் பிரதிநிதிகளை பேச்சுவார்த்தைகளில் தமிழர் தரப்பில் இணைத்துக் கொள்ள வேண்டும்.

8. தமிழ் அரசியல் தலைவர்கள் மட்டும் தமிழர் தரப்பிலிருந்து பேச்சுவார்த்தைகளில் கலந்துகொள்வது என்பது கனதியான தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கும் பேச்சுவார்த்தையில் சிறீ லங்காவின் இராஜதந்திர சூழ்ச்சிகளை எதிர்கொள்வதற்கும் போதுமானது அல்ல. தமிழர்கள் பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்பவர்களுக்கு ஆராசனைகள் வழங்குவதற்காக தமக்கென பல்துறைசார் மதியுரைஞர் குழுக்களை (அரசியல் யாப்பு நிபுணர்கள், காணி அபகரிப்புகள் மற்றும் காணிச்சட்டங்கள் தொடர்பான அறிவுடையோர், அரசியல் அறிஞர்கள், பொருளாதார அறிஞர்கள், பல்வேறு துறைகளில் நிர்வாக அனுபவமுடையவர்கள், அரசியல் ஆய்வாளர்கள், பிராந்திய விடயங்களில் பரீட்சயமுடையவர்கள் என்) உருவாக்க வேண்டும். அவர்களைத் தகுந்த சந்தர்ப்பங்களில் பேச்சுவார்த்தைகளில் பொருத்தமான வகையில் இணைத்துக்கொள்வதுடன் அவர்கள் தமிழ் மக்களுக்கு பொறுப்புக் கூறுபவர்களாகவும் இருக்க வேண்டும்.

9. சிறீலங்கா அரசுடன் தமிழ் மக்கள் நடாத்தும் எந்தவொரு பேச்சுவார்த்தையும் வெளிப்படைத் தன்மையுடன் நடாத்தப்பட வேண்டும். தமிழர் தரப்பு சார்பாக பங்கேற்பவர்கள், பேச்சுவார்த்தை பற்றியும் தீர்வுத் திட்டம் தொடர்பாகவும் தமிழ் மக்களுடன் துணிச்சலான, வெளிப்படையான கலந்துரையாடல்களை தொடர்ச்சியாக நடாத்தி, இறுதித் தீர்வு மற்றும் ஏனைய பிரச்சினைகள் பற்றிய மக்களது அபிப்பிராயங்களை பெற்றுக் கொண்டு அவற்றுக்கு ஏற்பத் தம்மை தகவமைத்துக் கொள்ள வேண்டும்.

10. அதே வேளை, சில விடயங்கள் உரிய காலம்வரை பகிரங்கப்படுத்தபட முடியாதவையாக இருக்கும் என்ற யதார்த்தத்தையும் நாம் ஏற்றுக் கொள்கின்றோம். அதனால் உருவாக்கப்படுகின்ற பல்துறைசார் மதியுரைஞர் குழுக்களுடன் அவ்வாறான விடயங்களுட்பட அனைத்து விடயங்களும் உடனுக்குடன் முழுமையாகப் பகிரப்பட்டு, ஆய்வுக்குட்படுத்தப்பட்டு, கலந்துரையாடப்படுவதன்மூலம் உரிய தந்திரோபாயங்கள் வகுக்கப்பட வேண்டும். பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்ளும் தமிழ்த்தரப்பினர், தேவைப்படும் அனைத்து சந்தர்ப்பங்களின்போதும் பேச்சுவார்த்தையின் இறுதியிலும் பேச்சுவார்த்தை மற்றும் அதன் அடைவுகள் என்பன தொடர்பாக தமிழ் மக்களுக்கு பொறுப்புக்கூறல் வேண்டும்.

11. முன்னைய பேச்சுவார்த்தைகளில் இந்தியாவும் ஏனைய சர்வதேச சக்திகளும் எவ்வாறு நடுநிலையோ, நியாயமோ இன்றி தமிழர்களது நலன்களுக்கு எதிராக நடந்து கொண்டன என்பதை நாம் அறிவோம். ஆனாலும் இந்தப் பேச்சுவார்த்தையிலும் ஒன்றுக்கு மேற்பட்ட நாடுகள் - குறிப்பாக சிறீ லங்காவை பொருளாதார வீழ்ச்சியிலிருந்து பாதுகாக்க முன்வரும் நாடுகள், மத்தியஸ்தம் வகிப்பது நல்லது என்றே நாம் நம்புகின்றோம். ஆனால் அவர்களது மத்தியஸ்தம் தொடர்பான விதிமுறைகள் முற்கூட்டியே உருவாக்கப்படல் வேண்டும். மேலும், இந்நாடுகளுடன் உலகில் இருக்கின்ற பிரபல்யமான, மனச்சாட்சியுள்ள, எப்போதும் நியாயத்தின் பக்கம் நிற்கின்ற, நசுக்கப்படுபவர்களுக்காக குரல் கொடுக்கின்ற, அழுத்தங்களுக்கு அடிபணியாத தனிநபர்களுள் சிலராவது மத்தியஸ்தர்களாகவும் கருத்துரைக்கும் பார்வையாளர்களாகவும் பேச்சுவார்த்தையில் இணைக்கப்பட வேண்டும் என்பதை நாம் வலியுறுத்துகின்றோம்.

இவை அனைத்துக்கும் மேலாக, புலம் பெயர் தமிழர்களிடமும் ஏனைய சர்வதேச முதலீட்டாளர்களிடமும் பேச்சுவார்த்தையின் விளைவாக தமிழ் மக்கள் திருப்தியடையும் வகையிலான இறுதித்தீர்வு எய்தப்பட்டு, அது தமிழ் மக்களின் மத்தியில் பொது வாக்கெடுப்புக்கு விடப்பட்டு, அவர்களால் ஏற்கப்பட்டு, நடைமுறைக்கு வரும்வரையில் சிறீ லங்கா பயனுறும் வகையிலான முதலீடுகளையோ அல்லது பொருளாதாரப் பேரழிவிலிருந்து மீட்கும் நோக்கிலான உதவிகளையோ மேற்கொள்ள வேண்டாம் என நாம் கேட்டுக் கொள்கின்றோம். இதேபோல் பேச்சுவார்த்தைகளில் தமிழர்தரப்பாகக் கலந்துகொள்பவர்களும் இதே கோரிக்கையை புலம்பெயர் தமிழர்களிடமும் சர்வதேச முதலீட்டாளர்களிடமும் பேச்சுவார்த்தைக்கு எம்மை வற்புறுத்துகின்ற சக்திகளிடமும் பகிரங்கமாக வலியுறுத்துதல் வேண்டும்.

*(தொடரும்)*

## உரும்பிராய் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் கனடா பெருமையுடன் வழங்கும்

UHCOSA Est 1994

## உரும்பிராய் பாடசாலைகளின்

# 27 வது பொங்கல் விழா

## PONGAL VIZHA




**தொடரும் பொங்கல் விழாவில் அதி சிறந்த இயல், இசை, நாடக நிகழ்வுகளை கண்டுகளிக்க அரியதோர் வாய்ப்பு.**

ஜனவரி மாதம் 21 ஆம் திகதி
சனிக்கிழமை மாலை 5 : 30 மணி



## THAMIL ISAI KALAA MANRAM

**1120 TAPSCOTT RD, SCARBOROUGH M1X 1E8**

நிகழ்ச்சி தொடர்பான மேலதிக விரங்களுக்கு :

கதிரமலைநாதன் : 647 287 4738
சுமி : 647 710 7816
வரதன்: 416 805 7392

urumpiraischoolsosa.ca@gmail.com

விளம்பர அனுசரணையாளர். சாந்தா பஞ்சலிங்கம்



கனடிய செய்திகள் Canadian News

# ஸ்காபுறோவிலுள்ள இரண்டு தமிழர் வர்த்தக நிலையங்களுக்கு பாராளுமன்ற உறுப்பினர் ஹரி ஆனந்தசங்கரியோடு விஜயம் செய்த கனடிய அரசின் Minister of Foreign Affairs Mélanie Joly

**கடந்த வாரம் கனடிய பாராளுமன்றத்தில் இலங்கை அரசின் தமிழினப் படுகொலையாளிகளான மகிந்த ராஜபக்ச மற்றும் கோட்டாபாய ராஜபக்ச ஆகியோருக்கு எதிராக கனடிய அரசின் தடைகளை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து உரையாற்றிய கனடாவின் வெளிவிவகார அமைச்சர் Mélanie Joly**







கடந்த வாரம் கனடிய பாராளுமன்றத்தில் இலங்கை அரசின் தமிழினப் படுகொலையாளிகளான மகிந்த ராஜபக்ச மற்றும் கோட்டாபாய ராஜபக்ச ஆகியோருக்கு எதிராக கனடிய அரசின் தடைகளை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து உரையாற்றிய கனடாவின் வெளிவிவகார அமைச்சர் Mélanie Joly அவர்களை ஸ்காபுறோவிலுள்ள இரண்டு தமிழர் வர்த்தக நிலையங்களுக்கு பாராளுமன்ற உறுப்பினர் ஹரி ஆனந்தசங்கரி புதன்கிழமை மதியம் அழைத்து வந்தார்.

அப்போது கனடிய அரசின் Minister of Foreign Affairs Mélanie Joly அவர்களது அமைச்சில் பணியாற்றும் முக்கியமான ஆலோசகர்களும் அதிகாரிகளும் கலந்து கொண்டனர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

கனடாவின் வெளிவிவகார அமைச்சர் Mélanie Joly அவர்கள் விஜயம் செய்த இரண்டு வர்த்தக நிலையங்களும் மோர்னிங்சைட் - செப்பேர்ட் சந்திக்கு அருகில் அமைந்துள்ள Rouge Bakery மற்றும் Urban Silks ஆகியவைகள் ஆகும்.

மேற்படி அமைச்சரின் விஜயத்தின் போது உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியரும் அங்கு அழைக்கப்பட்டிருந்தார்.

அமைச்சர் மேற்படி வர்த்தக நிலையங்களுக்கு விஜயம் செய்தபோது Urban Silks நிறுவனத்தின் உரிமையாளர் திரு. மனோகரன் பொன்னுச்சாமி மற்றும் அவரது பாரியார் Rouge Bakery நிறுவனத்தின் உரிமையாளர் திரு. நீதிராஜா நாகரட்ணசிங்கம் ஆகியோர் முறையே மாலைகள் அணிவித்து அமைச்சரையும் பாராளுமன்ற உறுப்பினரையுயும் வரவேற்றனர்.

அப்போது அங்கு கூடியிருந்த தமிழ் அன்பர்கள் சிலர் அமைச்சர் அவர்கள் இலங்கை அரசின் தமிழினப் படுகொலையாளிகளான மகிந்த ராஜபக்ச மற்றும் கோட்டாபாய ராஜபக்ச ஆகியோருக்கு எதிராக கனடிய அரசின் தடைகளை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து உரையாற்றி அந்த நடவடிக்கைகளை உறுதிப் படுத்தும் வகையில் தொடர்ந்தும் சந்திப்புக்களிலும் உரையாடல்களிலும் ஈடுபட்டு வரும் பணிக்காக நன்றியையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொண்டனர்.



கனடிய செய்திகள் Canadian News

# பல்வேறு தடைகள், சவால்களுக்கு மத்தியிலும் நமது அரசியல் பயணம் தொடர்கின்றது

## தாயக மக்களின் தனித்துவமான அரசியலிருப்பை உறுதிப்படுத்துவதிலும் நாம் பேதங்களை மறந்து செயலாற்றிவருகின்றோம்



Transnational Government of Tamil Eelam
நாடுகடந்த தமிழீழ அரசாங்கம்
445 Milner Ave., Unit 11, Toronto ON, M1B 2K4 . TP 416-751-TGTE, Fax 416-752-tgte,

### நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் உறுப்பினர் கனடா வாழ் நிமால் விநாயகமூர்த்தி வெளியிட்டுள்ள தைப்பொங்கல் செய்தியில் தெரிவிப்பு

சனவரி 15, 2023

பல்வேறு தடைகள், சவால்களுக்கு மத்தியிலும் நமது அரசியல் பயணம் தொடர்கின்றது. தாயக மக்களின் தனித்துவமான அரசியலிருப்பை உறுதிப்படுத்துவதில் - நாம் பேதங்களை மறந்து செயலாற்றிவருகின்றோம். மேற்குலகில் ஒரு டயஸ்போரா சமூகமாக நாம் எழுச்சியுற்றிருக்கின்றோம். தாயகத்தில் நமது மக்கள் பலமற்றவர்களாக இருக்கின்றனர். அதனை ஈடுசெய்யும் வகையில் நாங்கள் அவர்களின் சர்வதேச குரலாக வளர்சியுற்றிருக்கின்றோம். இந்த பின்புலத்தில் நோக்கினால், யூத டயஸ்போராவிற்கு பின்னர், ஒரு டயஸ்போரா சமூகமாக, ஈழத் தமிழ் சமூகம் வளர்ச்சியடைந்திருக்கின்றது. தாராளவாத மேற்குலகின் புலம்பெயர் சமூகமாக நாம் எழுச்சியுற்றிருக்கின்றோம். இந்த எழுச்சியை அரசியலோடு மட்டும் நாம் சுருக்கிவிடக் கூடாது. நமது தாயகத்தினை பொருளாதாரரீதியில் உயர்த்துவதற்கான அடித்தளமொன்றை நாம் ஏற்படுத்த வேண்டும். அதனை எங்களால் மட்டுமே செய்ய முடியும். வேலியால் விழுந்தவரை மாடு மிதித்த கதையாக - சிங்கள யுத்தத்தால் சீரழிந்த நமது மக்கள், இப்போது பொருளாதார நெருக்கடியின் கோரப்பிடிக்குள் மூச்சுத்திணறிக் கொண்டிருக்கின்றனர். அவர்களுக்கு நாம் இருகரம் நீட்டுவதுடன், அவர்களது பொருளாதார சுயத்திற்காகவும் நாம் உறுதியுடன் பணியாற்ற வேண்டியவர்களாக இருக்கின்றோம்.

இவ்வாறு கனடா வாழ் நாடு கடந்த அரசாங்கத்தின் சிரேஸ்ட உறுப்பினராக நிமால் விநாயகமூர்த்தி அவர்கள் வெளியிட்டுள்ள தைப்பொங்கல் செய்தியில் தெரிவித்துள்ளார். அந்த செய்தி அறிக்கையில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது;

தமிழினமானது, தனக்கெனத் தனித்துவமான மொழி, கலை, பண்பாடு, மரபுகள், வழக்காறுகள் முதலிய கட்டமைப்புகளைக் கொண்ட ஓர் இனமாகும். இன்றைய உலகில் "இயற்கையைப் போற்றுவோம்" என்ற முழக்கங்களைக் கேட்கின்றோம். இது சார்ந்த மாநாடுகளைப் பார்க்கின்றோம். எனினும். நம் முன்னோர் 2500 ஆண்டுகளுககு முன்பே இயற்கையைப் போற்றிய நிகழ்வைப் பொங்கல் விழா எமக்கு எடுத்துரைக்கின்றது. வானிலே கார்முகிலை எழச் செய்து, கடல் நீரை முகக்க வைத்து நமக்கு மழையைக் கொடுத்துப் பயிர்களுக்குமப் பசுமையைத் தந்து நமக்கும் ஒளியாக நின்று அனைத்து வளங்களும் நமக்குக் கிடைக்க கதிரவன் அல்லவா அடிப்படையானவன் என்ற செய்நன்றி மறவாத் தன்மையோடு, உயரிய எண்ணத்தோடு கொண்டாடப்படுவதே பொங்கல் விழாவாகும். பண்டைத் தமிழ்ழன் கொண்டாடிய பொங்கல் விழாவைப் புறநானூற்றிலே நாம் காணுகின்றோம். இராசராசன் காலத்திலே புதிதுண்ணல் என்ற பெயரில் கொண்டாடப்பட்டதையும் பார்க்கின்றோம்.

ஈழத்தைப் பொறுத்த வரையிலே அடுத்தடுத்து ஆட்சிக்கு வந்த சிங்கள அரசுகளால் இப்பண்பாட்டு விழுமியங்கள் யாவும் அழிக்கப்பட்டன அல்லது அழிந்தன. இலங்கை ஆங்கிலேயரிடமிருந்து விடுலை பெற்ற நாள் முதல் இன்றைய நாள் வரை நடந்தேறிய நிகழ்ச்சிகள் யாவும் தமிழர் கலைபண்பாடுகளை வாழ்க்கை முறைகளை சீரழிப்பதையே நோக்கமாகக் கொண்டிருந்தன என்பதைச் சமூகவியலாளர்கள் நன்கறிவர்.

அரசியல்ரீதியில் நாம் இணைந்தும், தனித்தும் பல்வேறு செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றோம். அதே போன்று, தாயகத்திலும் தமிழ் தேசிய அரசியல் கட்சிகளும், அமைப்புக்களும் இணைந்தும், தனித்தும் இயங்கிவருகின்றன. ஒரு ஜனநாயக அரசியல் தளத்தில் இவ்வாறுதான் அமைப்புக்கள் இயங்கும். நமது விட்டுக்கொடுக்க முடியாத நிலைப்பாடுகளில் நாம் இணைந்திருப்போம் - அவ்வாறான நிலைப்பாடுகளில் தனித்திருப்பதும் பிரச்சினைக்குரிய விடயமல்ல. ஆனால் நாம் முடிந்தவரையில் தமிழ் தேசியத்திற்கான ஓரணியாக செயலாற்றுவதே காலத்தின் தேவையாகும். எனவே நாம் அரசியலில் உறுதியாக இயங்கிவருவது போன்று, தாயக மக்களின் பொருளாதார மீட்சிக்காகவும் அதே வேகத்துடன் பணியாற்றுவோம்.

நமது குரல் வலுவாக இருப்பதற்கான அடித்தளத்தை நமது பொருளாதார வாழ்வே நமக்குத் தருகின்றது. ஒரு சமுதாயம் பொருளாதாரத்தில் நலிவுற்றிருந்தால், அதனால், அதற்கான தனித்துவமான எதிர்காலம் தொடர்பில் சிந்திக்க முடியாது. ஆனால் இந்த நிலைமை ஒரு ஆயுதப்போராட்டச் சூழலில் மாறுபடும். 2009 இற்கு முன்னரும் தாயகத்தில் பொருளாதார பிரச்சினைகள் இருந்திருக்கின்றன. ஆனால் ஆயுதப் போராட்டம் வழங்கிய வெளிச்சத்தில், அந்தத் துன்பங்கள் இரண்டாம்பட்சமாகியது. அதே வேளை ஆயுதப் போராட்டத்தை தாண்டி, மக்களை எவராலும் அணுகவும் முடியாமலிருந்தது. ஆனால் இப்போது நிலைமைகள் அப்படியல்ல. மக்களின் பொருளாதார இயலாமைகளை, வறுமையை, அரசியலாக்கும் அன்னியக் குழுக்கள் பல்கிப் பெருகிவிட்டன. அவ்வாறான குழுக்களை தடுத்துநிறுத்தும் வல்லமையும் தற்போதுள்ள தமிழ் தேசிய கட்சிகளுக்கில்லை. ஜனநாயகத்தின் பெயரால் இவ்வாறான தலையீடுகள் இடம்பெறுகின்ற போது, ஒரு கட்டத்திற்குமேல் அவற்றை தடுப்பதும் சாத்தியமில்லை.

இந்த இடம்தான் நாம் பணியாற்ற வேண்டிய இடமாகும். ஏனெனில் பொருளாதாரரீதில் பலவீனமான நிலையிலிருக்கும் மக்களை தமிழ் தேசியமென்னும் ஒரு சொல்கொண்டு மட்டும் கையாள முடியாது. அவர்களது வாழ்வே நெருக்கடிக்குள் இருக்கின்ற போது, அவர்களை நமது வெறும் சுலோகங்களால் மட்டும் திருப்திப்படுத்திவிட முடியாது. இந்த இடைவெளியை பயன்படுத்தியே, தென்னிலங்கை கட்சிகளும், அவர்களுக்கு ஆதரவுவழங்கும் தமிழ் குழுக்களும் பலவீனமான தமிழ் மக்கள் மத்தியில் ஊடுருவுகின்றனர். அவர்களால் வெற்றிபெறவும் முடிந்திருக்கின்றது. இதனை தடுத்துநிறுத்தி, நமது தாயக மக்களை தமிழ் தேசியத்தின் பக்கமாக பிணைக்க வேண்டுமாயின், நாம் அவர்களது பொருளாதார வாழ்வை மீட்டெடுக்கும் பல்வேறு செயல்திட்டங்களை முன்னெடுக்க வேண்டும். அரசியலதிகாரம் கிடைத்த பின்னர்தான் இவ்வாறான விடயங்களை நாம் செய்வோமென்றால், அதற்கிடையில் கணிசமான மக்கள், அவர்களது வறுமையின் பிடியால், சிதறிவிடுவர்.

சிதறிய மக்களை மீளவும் ஓரிடத்திற்கு கொண்டுவருவது மிகவும் கடினம். எனவே வருமுன் காப்போமென்னும் அடிப்படையில், நமது தாயகத்தின் பொருளாதாரத்தை மீட்பதற்கான பணியில், நாம் அனைவரும் ஒன்றிணைய வேண்டும். இன்று வடக்கில் பல்வேறு திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளதாக செய்திகள் வருகின்றன. இதன் காரணமாக தமிழ் நாட்டிற்கும் ஈழத்தமிழர் தாயகத்திற்குமான வர்த்தக, கலாசாரா தொடர்புகள் அதிகரிக்கப்போகின்றன. இது பிறிதொரு புறம், நமக்கான பொருளாதார திட்டங்களுக்கான வாய்ப்புக்களையும் வழங்கும். இவற்றை முற்றிலும் நமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்கான திட்டங்களை நாம் வகுக்க வேண்டும். இதன் மூலம் நமது தாயக மக்கள் நன்மையடையக் கூடிய சூழலை உருவாக்க வேண்டும். தாயகத்திலுள்ள இளைஞர் யுவதிகள் அங்கு வாழமுடியுமென்னும் நம்பிக்கையை ஊட்ட வேண்டும்.

புதுவை அண்ணர் கூறியிருப்பது போன்று - "காலத்தை தவறவிட்டால் பின்னர் கண்டவனெல்லாம் கதவை தட்டுவான், எனவே, நமது பணிகளை செய்வதற்கான காலத்தை தவறவிடுவோமானால், பின்னர், நமது மக்கள் மற்றவர்களால் சிதறிடிக்கப்படுவதையும் நம்மால் தடுக்கமுடியாமல் போகும். இதுவரை நடந்தவைகள் போகட்டும், இந்தத் தைத்திருநாளில், நமது தாயகத்தின் பொருளாதாரத்தை மீட்டெடுக்கும் பணிகளுக்காக உறுதிபூணுவோம்.

ஈழத்தமிழ் மக்களுக்கு இழந்த நாட்டை மீட்டு எடுப்பது ஒன்றே வழி!

"தை பிறந்தால் வழி பிறக்கும்" என்ற முதுமொழிக்கமைய பிறக்கப் போகும் தைத்திங்கள் தமிழ் மக்கள் அனைவருக்கும் எல்லா நன்மைகளையும் கொண்டு வர வேண்டுமென வாழ்த்தி விடைபெறுகின்றேன்.

நன்றி.
நிமால் விநாயகமூர்த்தி
உறுப்பினர், நாடு கடந்த தமிழீழ அரசாங்கம்.

# யாழ்ப்பாண மாவட்ட புதிய அரசாங்க அதிபராக நியமனம் பெற்றுள்ள சிவபாதசுந்தரம் அம்பலவாணர் அவர்களை சுருவில் மக்கள் ஒன்றியம் — கனடா வாழ்த்துகின்றது

யாழ்ப்பாணம் சுருவிலை வதிவிடமாகக் கொண்டிருந்தவரும் தற்போது யாழ்ப்பாண மாவட்ட புதிய அரசாங்க அதிபராக நியமனம் பெற்றுள்ளவருமான சிவபாதசுந்தரம் அம்பலவாணர் அவர்களை சுருவில் மக்கள் ஒன்றியம் - கனடா வாழ்த்தும் வகையில் செய்தி ஒன்றை வெளியிட்டுள்ளது.

அந்தச் செய்தியில் பின்வருமாறு தெரிவிக்கப்பெற்றுள்ளது.

"எமது கிராமத்தை சேர்ந்த திரு. சிவபாதசுந்தரம் அம்பலவாணர் அவர்கள் யாழ் மாவட்டத்திற்கான புதிய அரச அதிபராக நியமிக்கபட்டதை அறிந்து மிக்க மகிழ்ச்சி கொள்வதோடு அவரது அரச மற்றும் பொதுப் பணிகள் மென் மேலும் சிறந்து விளங்கி தாயக மக்களுக்கு நன்மைகளைக் அளிக்கவும் அவரது சேவை தொடரவும் வாழ்த்துகிறோம்.

அத்துடன் எமது மண்ணின் மைந்தன் அவர்கள் உடல் ஆரோக்கியத்தோடு நீண்ட நாள் உயர் பதவிகளில் பிரகாசிக்கவும் சுருவில் ஐயனார் அருள் பெற்று வாழவும் வேண்டுகின்றோம்".

திரு.அ.சிவபாலசுந்தரன்



யாழ் மாவட்ட அரச அதிபராகப் பொறுப்பேற்கும் கடிதத்தை பிரதமர் கையளிக்கும் தருணம்







இங்ஙனம்,
சுருவில் மக்கள் ஒன்றியம் - கனடா

இவ்வாறு அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.


இனிய
தைப்பொங்கல்
மற்றும்
தமிழ் மரபுத் திங்கள்
நல்வாழ்த்துக்கள்
Happy Thai Pongal
& Tamil Heritage Month
Raymond Cho
MPP - Scarborough North
Constituency Office
Unit B, 4559 Sheppard Ave. E
Scarborough, ON M1S 1V3
(416) 297-5040 | raymond.choco@pc.ola.org
www.raymondcho.ca
Ontario

# பனிப்பொழிவு துவங்கும்போது நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டியது என்ன.



1. **பனிப்பொழிவு துவங்கும்போது, தெருக்கள் சாலைகளில் வாகனங்களை நிறுத்துவது தடை செய்யப்படுகிறது.** அனைத்து கார்களையும் சாலையைவிட்டு நகர்த்தி வைக்கவும், இதனால் பனி வாரி அகற்றும் இயந்திரங்கள் தங்கள் பணியைச் செய்ய இயலும்.
2. **பக்க வாட்டு நடைபாதைகளில் இருக்கும் பனித்துகள் மற்றும் பனிக்கட்டியை அகற்றவும்** பனிப்பொழிவுக்குப் பின்னர் அடுத்த நாள் காலையில் உங்கள் பக்கவாட்டு நடைபாதைகளில் பனியை வாரிவிடவும்.
3. ப்ராம்ப்ட்டன் ப்ளோ ட்ராக்கர் எனும் ஆன்லைன் செயலி அல்லது 311 செயலி மூலம் உங்கள் அண்டை அயலில் **பனி அகற்றும் பணியின் முன்னேற்றம் பற்றிய தடம் அறியவும்.**
4. **பனி அகற்றும் சேவையானது சாலைகளின் வகைப்படுத்தலின் அடிப்படையில் முன்னுரிமை கொடுக்கப்படுகிறது.** அனைத்து சாலைகளிலும் 24 மணி நேரத்திற்குள்ளாக பனி அகற்றப்படும்.
5. **பிரச்சனை ஏதும் உள்ளதா?** அதைப் பற்றி தெரிவிக்க, பனிப்பொழிவு முடிந்தபின்னர் தயவு செய்து 24 மணி நேரம் காத்திருக்கவும்.

மேலும் தகவல்களுக்கு வருகை தரவும்: **brampton.ca/snow**

3-1-1 **brampton.ca**/snow BRAMPTON


உங்கள் வீட்டை புதுப்பிக்க வேண்டுமா?

Coverall Group Inc

- Painting
- Bathrooms
- Kitchens
- Decks
- Flooring
- Basements
- Pot lights
- Accent Walls

Contact us 416.706.8160






**Nick Mantas**

Councillor
Ward 22, Scarborough-Agincourt

100 Queen Street West, Suite A1
Toronto, ON M5H 2N2
Phone: (416) 392-1374
Fax: (416) 392-7431
Nick.Mantas@toronto.ca






# ஸ்காபுறோவில் விழாவில் நீயா நானா? புகழ் கோபிநாத் அவர்களுக்கு மத்திய, மாகாண மற்றும் மாநகர அரசாங்கங்களின் சார்பில் உயரிய கௌரவம்

கனடாவில் ஸ்காபுறோ மற்றும் மொன்றியால் ஆகிய நகரங்களில் முறையே Centre for Youth Empowerment and Community Services - Toronto வின் "கோபிநாத்துடன் ஒரு மாலைப் பொழுது" மற்றும் "தமிழ் மரபுத் திங்கள் - 2023" ஆகிய விழாக்களில் கலந்து கொள்வதற்காக அழைக்கப்பெற்ற நீயா நானா? புகழ் கோபிநாத் அவர்களுக்கு ஸ்காபுறோவில் விழாவில் மத்திய, மாகாண மற்றும் மாநகர அரசாங்கங்களின் சார்பில் உயரிய கௌரவம் வழங்கப்பெற்றது.

கடந்த 14-01-2023 அன்று மாலை ஸ்காபுறோ சீனக் கலாச்சார மண்டபத்தில் நடைபெற்ற இந்த விழாவில் முதலில் பைரவி இசைக்குழுவின் மெல்லிசை நிகழ்ச்சி நடைபெற்றது.





அனைத்தையும் ஆரம்பத்திலிருந்து திருமதி. சில்வியா பிரான்சிஸ் நேர்த்தியாக தொகுத்து வழங்கினார். தொடர்ந்து கோபிநாத் அவர்கள் மேடையில் தோன்றி அனைவருக்கும் "வணக்கம்" கூறினார்.





பின்னர் அவருக்கு Centre for Youth Empowerment and Community Services - Toronto அமைப்பின் சார்பாக அதன் தலைவர் திரு. சங்கர் நல்லதம்பி மலர் மாலை அணிவித்தார்.

தொடர்ந்து கோபிநாத் அவர்களுக்கு மத்திய, மாகாண மற்றும் மாநகர அரசாங்கங்களின் சார்பில் உயரிய கௌரவம் வழங்கப்பெற்றது மத்திய அரசின் சார்பான கௌரவத்தை ஸ்காபுறோ வடக்கு தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினர் MPP Shaun Chen அவர்கள் வழங்கினார்.

ஒன்றாரியோ மாகாண அரசின் சார்பாக ஒன்றாரியோ முதல்வர் டக் போர்ட் அவர்களின் வாழ்த்துச் செய்தியை மாகாண பாராளுமன்ற உறுப்பினர் MPP Logan Kanapathi, MPP Aris Babikian ஆகியோர் வழங்கி தங்கள் பாராட்டுக்களையும் தெரிவித்தனர். தொடர்ந்த ரொறன்ரோ மாநகராட்சி நிர்வாகத்தின் சார்பில் மேயர் அவர்களின் வாழத்துச் செய்தியை மாநகர கவுன்சிலர்கள் Nick Mantus, Jamaal Myers ஆகியோர் வழங்கினார்கள்.

தொடர்ந்து இந்த விழாவை முன்னின்று ஏற்பாடு செய்த லோகேந்திரலிங்கம் அவர்களின் சிற்றுரை இடம்பெற்றது. அதனைத்





தொடர்ந்து அன்றைய நாளின் முக்கிய உரையை வழங்க கோபிநாத் அவர்கள் ஒலிவாங்கிக்கு முன்பாக வந்தார். மண்டபம் நிறைந்த ரசிகர்களின் வாழ்த்தொலிகளுக்கிடையில் அவரது உரை இடம் பெற்றது.

சுமார் ஒன்றரை மணி நேரம் இடம்பெற்ற அவரது உரையை பார்வையாளர்கள் ரசித்த வண்ணம் செவிமடுத்தனர்.

அதனைத் தொடர்ந்து விழா சிறப்பாக நடைபெற ஒத்துழைப்பு வழங்கிய வர்த்தக நிறுவனங்களின்



பிரதிநிதிகள் மேடைக்கு அழைக்கப்பெற்று பாராட்டுப் பத்திரம் வழங்கப்பெற்று கௌரவிக்கப்பெற்றனர். தொடர்ந்து ஊடக நிறுவனங்களின் பிரதிநிதிகளும் கௌரவிக்கப்பெற்றனர்.

இறுதியில் கோபிநாத் அவர்களின் விருப்பத்திற்கு ஏற்ப விழாவிற்கு வருகை தந்த அனைத்து ரசிகர்கள் மற்றும் வர்த்தகப் பிரமுகர்கள் ஆகியோரோடும் புகைப்படங்கள் எடுக்கப்பெற்றன.

**செய்தியும் படங்களும்: சத்தியன் - கனடா உதயன்**





தாயகத்தில் நலிந்த நோயாளிகளின் இதய சத்திர/
சிறுநீரக சிகிச்சைக்காக மாபெரும் இன்னிசை விருந்து
பொன்மனச் செம்மல், ஏழைகளின் இதய தெய்வம்
எம்.ஜி.ராமச்சந்திரன்
அவர்களின் வாழ்வை கொண்டாடும் முகமாக
MGR 106
இன்னிசைப் பொழுது
27th JANUARY Friday 2023 7PM
Metropolitan Centre
3840 Finch Ave East
Scarborough
Help Save A Life
உயிர் காக்க உதவுங்கள்
SCAN ME
Shianaaz
FREE PARKING
LIFE SAVING HEART SURGERIES | MOBILE MEDICAL CLINIC ( KILINOCHCHI) | LIVELIHOOD ASSISTANCE FOR THE NEEDY
416-200-7652, 647-526-7652 www.Nivaranam.com $25 $50 & $100
திரட்டப்படும் நிதி முழுவதும் ஏழைகளுக்கான இலவச இருதய சத்திர சிகிச்சைக்கும். கிளிநொச்சியில் மாற்றுத் திறனாளிகளுக்கான நடமாடும் மருத்துவமனை திட்டத்திற்கும். போரினால் பாதிக்கப்பட்டோரின் வாழ்வாதர உதவிகளுக்கும் இதர தேவைகளுக்கும் பயன்படுத்தப்படும்.
(முழு நிதி விபரங்களும் இணையத்தில் பகிரப்படும்)
100% of proceeds will be used for projects without any expences deducted
செந்தில் குமரனின் நிவாரணம் (கனடா)
Ticket Locations:
Elanthulir Video (Inside Era Supermarket), Fashion World, Golumbia Video, Kumar Video, KTM Salon (Keele & Finch), New Spiceland S.K. Fashion, Vithus Video
உயிர் காக்க உதவுங்கள்! Help Save a Life!
இருதய மற்றும் சிறுநீரக சத்திர சிகிச்சைக்கான பணமின்றி ஆயிரக்கணக்கான எங்கள் உறவுகள் ஈழத்தில் பரிதாபமாக உயிரிழந்து கொண்டிருக்கிறார்கள்
மேலும் பல தாய்மார்கள் கண்களில் நீர் மல்க தங்கள் பிள்ளைகளின் உயிர் காப்பாற்றபட மாட்டாதா என்று ஏங்கித் தவித்துக் கொண்டிருக்கின்றனர்
அவர்களின் வாழ்வில் ஒரு ஒளியை ஏற்றுவோம்!
இதுவரை உங்களை போல் நல்லுள்ளங்களின் உதவியுடன் 96 உயிர்கள் காப்பாற்றப்பட்டுள்ளது
LIFE SAVING HEART SURGERIES | MOBILE MEDICAL CLINIC ( KILINOCHCHI) | LIVELIHOOD ASSISTANCE FOR THE NEEDY
திரட்டப்படும் நிதி முழுவதும் ஏழைகளுக்கான இலவச இருதய சத்திர சிகிச்சைக்கும். கிளிநொச்சியில் மாற்றுத் திறனாளிகளுக்கான நடமாடும் மருத்துவமனை திட்டத்திற்கும். போரினால் பாதிக்கப்பட்டோரின் வாழ்வாதர உதவிகளுக்கும் இதர தேவைகளுக்கும் பயன்படுத்தப்படும்.
(முழு நிதி விபரங்களும் இணையத்தில் பகிரப்படும்)
செந்தில் குமரனின் நிவாரணம் (கனடா)
Together We Can Accomplish Great Things!
416.200.7652
www.Nivaranam.com
100% of Your Donations Will Be Sent To Projects & To Perform Surgeries
Account Details will be enlisted both on Facebook & Website

# தமிழ்த் தேசியம் தகர்ந்து போவதில்லை



வி.தேவராஜ்
மூத்த
ஊடகவியலாளர்

• சுயநல அரசியலால் சீரழியும் தமிழர் அரசியல்
• "தமிழ் மக்கள் கண்ணீரில் பொங்கிக் கொண்டிருக்க தமிழ்த் தலைமைத்துவங்கள் சுய நலத்தில் பொங்கிக் கொண்டிருக்கின்றனர்
• நாற்காலிகளுக்காக தமிழ்த் தேசியக் கோஷம்

*14.01.2011* அன்று ஒரு அன்பர் தொலைபேசியில் தொடர்பு கொண்டு ஏன் தமிழ்த் தலைமைகள் விலை போகின்றன. இன்றைய இந்த நெருக்கடி நிலையிலாவது இன உணவ்வுடன் தமிழினத்தின் விடிவுக்காக விமோசனத்திற்காகப் பணியாற்றக் கூடாதா என்று தொலைபேசியில் வினவினார். கடந்த *12* வருடங்களுக்கு முன் அந்த அன்பர் எழுப்பிய கேள்வி அவரது உள்ளக் கிடக்கையாக மாத்திரமன்றி தமிழ் மக்களின் ஏகோபித்த உணர்வலையாகவும் உள்ளது என்று அவ் வேளையில் கேசரியில் எனது பத்தியில் எழுதினேன். அந்த அன்பரின் கேள்வி இன்று எழுப்பப்பட்டாலும் பொருந்தும்.

*15.01.2011* இல் வீரகேசரியில் எழுதிய எனது பத்தி அவ் வேளையில் இவ்வாறு கூறியது.

"தமிழ் மக்கள் கண்ணீரில் பொங்கிக் கொண்டிருக்கின்றனர். தமிழ்த் தலைமைத்துவங்கள் சுய நலத்தில் பொங்கிக் கொண்டிருக்கின்றனர். இது தமிழ் மக்களின் தலைவிதியாகப் போய்விட்டது போலும். வாக்களித்த மக்களை மறப்பதும் மக்களின் நலன்களைத் தூக்கி வீசிவிட்டு தமது சுய நலன்களுக்குள் புதைந்து போவது என்பது தமிழ் அரசியல் தலைமைத்துவங்களுக்கும் அரசியல்வாதிகளுக்கும் கை வந்த கலை. இன்று தமிழ் மக்கள் அனுபவிக்கின்ற பெரும்பாலான இன்னல்கள் தமிழ்த் தலைமைத்துவங்களாலும் உருவாக்கப்பட்டவை என்பது வெளிச்சத்துக்கு வராத உண்மை".

*2023* ஜனவரியில் அதாவது *12* வருடத்திற்குப் பிறகும் மீட்டுப் பார்க்கும்போது அது இன்றைய சூழ்நிலைக்கும் பொருந்துவதாகவே உள்ளது. அப்படியானால் தமிழ்த் தலைமைகள் தம்மை மாற்றிக் கொண்டதாக இல்லை என்பதே உண்மையாகும்.

• சுயநல அரசியல்

மொத்தத்தில் தமிழ்த் தலைமைத்துவங்களின் உள்ளக சுயநல அரசியல் ஒட்டு மொத்த தமிழ் இனத்தையும் துவம்சம் செய்து கொண்டிருக்கின்றது. வடக்கு கிழக்காகட்டும் மலையகமாகட்டும் ஒட்டு மொத்த தமிழினத்தின் தலைவிதியைத் தீர்மானிக்கப் புறப்பட்ட இந்த அரசியல் தலைமைகளின் உள்ளக சுய நல அரசியல் சீரழித்துக் கொண்டிருக்கின்றது.

தமிழ் பேசும் மக்களின் அபிலாஷைகளை முன் நகர்த்தும் நிலையில் இன்றைய தமிழ்த் தலைமைகள் இல்லை என்ற கசப்பான உண்மையை ஏற்றுக் கொண்டாக வேண்டும்.

• "நாற்காலிகளுக்காக கோஷம்" எழுப்புவர்களாகவே தமிழ்த் தலைமைகள்!

அரசாங்கத்துடன் இணைந்தால்தான் சமூகத்திற்காக எதையும் செய்ய முடியும் என்று கூறுபவர்களும் மக்கள் ஒற்றுமைப்பட்டாலே தமிழ்த் தேசியத்தை நிலை நிறுத்த முடியும் உலகத்திற்கு தமது ஒன்றுபட்ட சக்தியை காட்ட முடியும் எனக் கோரி வாக்கு வேட்டையாடுபவர்கள் மறுபுறம் என ஒட்டு மொத்த தமிழ் தலைமைகளும் இறுதியில் எல்லோருமே "நாற்காலிகளுக்காக கோஷம்" எழுப்புவர்களாகவே உள்ளனர்.

இவர்கள் நாடாளுமன்றம் சென்று என்ன செய்தனர் மாகாண சபை பிரதேச சபைகளில் வெற்றி ஈட்டி என்ன செய்தனர் என்பதைக் கூட்டிக் கழித்துப் பார்த்தால் எல்லாம் பூஜ்ஜியமாகவே இருக்கும். ஆனால் தமிழ்த் தலைமைகள் அவர்களது ஆதரவாளர்கள் அனைவரும் சுகபோகம் அனுபவிக்கவே தேசியம் தேசியத்திற்கு எதிரான கோஷம் என்பன பயன்படுகின்றனவே ஒழிய தமிழ் மக்களின் விடுதலை நோக்கி அல்ல என்பது உண்மை.

• Serious Business

மொத்தத்தில் தமிழ்த் தலைமைகளுக்கும் அவர்கள் சார்ந்தோருக்கும் அரசியல் என்பது Serious Business என்பதுதான். இந்த Business இல்லாத தலைமைகளும் உள்ளன.

• தமிழ்த் தேசியம் தகர்ந்து போவதில்லை

இன்றைய தமிழ்த் தலைமைகளின் இந்த போக்கு காரணமாக தமிழ்த் தேசியம் தகர்ந்து விட்டதாக அர்த்தமல்ல. அது இன்னொரு வடிவத்திற்கு தன்னைத் தயார்படுத்திக் கொண்டிருக்கின்றது என்பதை தமிழ்த் தலைமைகள் புரிந்து கொண்டால் சரி.

ஏனெனில் தமிழ்த் தேசியமும் தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளும் தகர்ந்து போவதில்லை. அவை நீறு பூத்த நெருப்பாக தமிழ் மக்களின் மனதில் கனன்று கொண்டிருக்கின்றன என்பதை சுதந்திர இலங்கையின் கடந்த 75 வருடகால வரலாறு உணர்த்துகின்றது.

இன்றைய நிலையில் "சிஸ்டம் சேஞ்" என தென்னிலங்கை கோரி நிற்பது போன்று தமிழ்த் தலைமைகளை வீட்டுக்குப் போகுமாறு கோரும் நிலை உருவாகினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

இவ்வாறு எழுதுவதனால் இன்னொரு தீவிரவாதத்தைத் தூண்டுவதாக தமிழ்த் தலைமைகள் சில போர்க் கொடி தூக்கி பிரசாரப்படுத்த முயலலாம். வடக்குக் கிழக்கில் தற்பொழுதே தமிழ்த் தலைமைகளுக்கு எதிராக உண்ணாவிரதப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது. மன்னாரில் ஒரு பிரதேச சபையில் மக்களே முன் வந்து வேட்பு மனுவை தாக்கல் செய்துள்ளனர். இத்தகைய சம்பவங்கள் தமிழ்த் தலைமைகளின் மீதான நம்பிக்கையின்மையின் வெளிப்பாட்டின் வடிவங்களாகும்.

• தென்னிலங்கையில் *103* வயது முதியவரின் எதிர்பார்ப்பு

தென்னிலங்கையில் மாற்றம் தேவையென இளைஞர் யுவதிகள்தான் வீதியில் இறங்கி போராடுகின்றனர் என்று கூறுவதற்கில்லை. ஆங்கிலப் பத்திரிகை ஒன்றில் *103* வயது நிரம்பிய பெரியவர் - The writer, D. L. Sirimanne from Kohuwala is 103 years old - இவ்வாறு எழுதுகின்றார்.

• சிங்கள தலைவர்களால் நாடு நாசமானது.

பிரித்தானியாவிடம் இருந்து இலங்கை சுதந்திரம் பெற்று ஏறக்குறைய 75 வருடங்கள் ஆகிறது. துரதிஷ்டவசமாக அதிகாரத்திற்காக போராடும் பேராசை கொண்ட தேசப்பற்றற்ற சிங்கள தலைவர்களால் நாடு தவறாக ஆட்சி செய்யப்பட்டு நாசமானது.

அது இப்போது திவாலான தேசமாக உள்ளது. 80சதவீத மக்கள் உணவு எரிபொருள் மற்றும் மருந்து இல்லாமல் பட்டினியில் உள்ளனர். 75 ஆண்டுகால தவறான ஆட்சியை சுதந்திரத்தின் 75 வருடங்களாக கொண்டாட திட்டமிடுவது அவமானம்.

*2023* பெப்ரவரி *4* ஆம் திகதி இலங்கையை வளமான மற்றும் மகிழ்ச்சியான நாடாக மாற்ற கடவுள் அல்லாஹ் மற்றும் அனைத்து தெய்வங்களுகளையும் நோக்கிய மனந்திரும்பும் மத பிரார்த்தனைகளில் ஈடுபடும் நாளாக இருக்க வேண்டும்.

மிக விரைவில் எதிர்காலத்தில் அதன் பல்லின பல கலாசார பல மொழிகளுடன் அனைத்து குடிமக்களும் சுதந்திரத்துடனும் சமத்துவத்துடனும் வாழும் நாளாக உதயமாக வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

எனவே தென்னிலங்கையின் சிந்தனைப் பரம்பல் 103 வயது பெரியவர்வரை ஆழப் பரவி வேரோடிப் போய் உள்ளது.

அதாவது "மாற்றம்" குறித்த சிந்தனை அரச பயங்கரவாத அடக்குமுறைகளையும் மீறி தென்னிலங்கையில் ஆழ வேரூன்றிக் கொண்டிருக்கின்றது.

ஆனால் ஒற்றுமைப்பட வேண்டிய தமிழ்த் தலைமைகள் "நாற்காலி அரசியலுக்காக" தமிழ் மக்களின் கருத்துக்களுக்கு மாறாக "நவக்கிரகங்களாக" திசைமாறி நிறகின்றனர்.

• தமிழ்ச் சிவில் சமூகம்

இவ்வேளையில் பேச்சுவார்த்தையில் இலங்கையில் உள்ள தமிழ்த் தரப்புகளின் பொறுப்புப் பற்றிய தமிழ்ச் சிவில் சமூகத்தவர்களின் கரிசனைகள் அடங்கிய மகஜர் வெளிவந்துள்ளது. 27 சிவில் அமைப்புக்களும் 551 சிவில் சமூக செயற்பாட்டாளர்களும் கூட்டாக அறிக்கை ஒன்றினை வெளியிட்டுள்ளனர்.

தமிழர் தரப்பில் பொது வெளியில் முன் வைக்கப்பட்டுள்ள தமிழ்த் தரப்புக்களுக்கான பொறுப்புக்களை கையேற்பது யார் என்ற கேள்வி எழும்புகின்றது. இன்றைய நிலையில் எவராவது பொறுப்பெடுக்க முன்வந்தால்கூட அது தேர்தல்கால வாக்குறுதியாகவே அமையும்.

அதேவேளையில் தமிழ்ச் சிவில் சமூகத்தவர்களின் செயற்பாடு இத்துடன் நின்றுவிடக் கூடாது. தமிழ்ச் சமூகத்தில் வெற்றிடமாகி உள்ள தலைமைத்துவத்தை வடிவமைப்பதற்கான வேலைத் திட்டத்தை முன் நகர்த்த வேண்டிய வரலாற்றுக் கடமை தமிழ்ச் சிவில் சமூகத்தவர்களின் கைகளில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

Email : vathevaraj@gmail.com



# மொன்றியால் மாநகரில் இயங்கிவரும் 30க்கும் மேற்பட்ட தமிழ் அமைப்புக்கள் ஒன்றாகக் கூடி கொண்டாடிய தமிழ் மரபுத் திங்கள் பெருவிழா

கனடிய செய்திகள் Canadian News



மொன்றியால் மாநகரில் "லவால்" பிரதேசத்தில் ஒரு அழகிய மண்டபத்தில்








கொண்டாடப்பெற்ற "தமிழ் மரபுத் திங்கள்" கொண்டாட்டத்தின் போது கனடிய வெளிவிவகார அமைச்சர் மெலனி அவர்கள், எமது கனடிய பாராளுமன்ற உறுப்பினர் ஹரி ஆனந்தசங்கரி







மற்றும் நீயா நானா புகழ் கோபிநாத் அவர்கள் ஆகியோரோடு உரையாடிய பின்னர் எடுத்துக் கொண்ட புகைப்படங்கள் இங்கே காணப்படுகின்றன.

இன்றைய நிகழ்வில் சுமார் 2500 பார்வையாளர்களும் பிரமுகர்களும் கலந்து கொண்டார்கள் என்பதும் எமது தமிழ்ப் பண்பாட்டையும் கலையின் மேன்மையினையும் வெளிக்காட்டும் படைப்புக்கள் மேடையேற்றப்பெற்றன என்பதும் குறிப்பிடத்தக்கது.

அத்துடன் மொன்றியால் மாநகரில் இயங்கிவரும் 30க்கும் மேற்பட்ட தமிழ் அமைப்புக்கள் ஒன்றாகக் கூடி இந்த தமிழ் மரபுத் திங்கள் பெருவிழாவை நடத்தினார்கள் என்பது இங்கு எடுத்துச் சொல்ல வேண்டிய ஒரு முக்கிய குறிப்பாகும்.



அங்கு இறுதி நிகழ்வாக இடம்பெற்ற கோபிநாத் அவர்களின் நெறியாழ்கையில் இடம்பெற்ற விவாத நிகழ்ச்சி மக்களின் பாராட்டைப் பெற்றது என்பதும் அந்த நிகழ்வு வரை எமது றொறன்றோ குழுவினர் காத்திருக்கக் கூடிய சந்தர்ப்பம் அமையவில்லை என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.



இந்த நிகழ்வானது தமிழ் மொழிக்கும் தமிழ் பண்பாட்டின் மேன்மைக்கும் முத்தமிழின் அழகுக்கும் எடுக்கப்பெற்ற பெருவிழா என்றால் மிகையாகாது.



றொறன்ரோவிலிருந்து பாராளுமன்ற உறுப்பினர் ஹரி ஆனந்தசங்கரி ஒன்றாரியோ மாகாண சபை உறுப்பினர் லோகன் கணபதி மற்றும் கல்விச் சபை உறுப்பினர் நீதன் சாண் ஆகியோர் உத்தியோகபூர்வமாக கலந்து கொண்டார்கள் என்பதும் கவனிக்கத் தக்கதும் பெருமைப் பட வேண்டியதுமான ஒரு விடயமாகும்.

**செய்தியும் படங்களும்: சத்தியன்**


உங்கள் திறமைக்கு அதிஷ்டம் காத்திருக்கிறது

வெல்லுங்கள் 1,50,000 ரூபாய்கள்!



எழுத்தாளர் 'குரு அரவிந்தன் வாசகர் வட்டம்'
நடத்தும் உலகளாவிய திறனாய்வுப் போட்டி - 2023



தமிழ் இலக்கிய உலகில் புகழ் பெற்ற எழுத்தாளர் குரு அரவிந்தன் அவர்களின் தமிழ் இலக்கிய சேவையைப் பாராட்டும் முகமாகவும், வாசிப்பு, எழுத்துப் பழக்கத்தை ஊக்குவிக்கும் நோக்கமாகவும் இடம்பெறும் குரு அரவிந்தன் எழுதிய நாவல், சிறுகதை தொடர்பான திறனாய்வுப் போட்டி.

15 பரிசுகள், மொத்தம் 1,50,000 ரூபாய்கள், இலங்கை ரூபாயில் வழங்கப்படும்.

| | |
|---|---|
| முதலாம் பரிசு இலங்கை ரூபாய்கள் | -30,000. |
| இரண்டாவது பரிசு இலங்கை ரூபாய்கள் | -25,000. |
| மூன்றாவது பரிசு இலங்கை ரூபாய்கள் | -20,000. |
| நாலாவது பரிசு இலங்கை ரூபாய்கள் | -15,000. |
| ஐந்தாவது பரிசு இலங்கை ரூபாய்கள் | -10,000. |
| 10 பாராட்டுப் பரிசுகள் இலங்கை ரூபாய்கள் தலா | -5,000. |

குரு அரவிந்தன் அவர்களின் படைப்புகளுக்கான திறனாய்வுப் போட்டி. குறைந்தது 2 புதினங்கள் அல்லது 4 சிறுகதைகள் பற்றி உங்களின் கருத்துரைகளைத் தமிழில் அல்லது ஆங்கிலத்தில் 5 பக்கங்களுக்குள் அல்லது 500 சொற்களுக்கு மேற்படாமல் யூனிகோட் மற்றும் வேர்ட் (Unicode and Word) அச்சுப்பிரதியாக அனுப்பவும். மாணவ, மாணவிகளாயின் தனியாகக் குறிப்பிடவும். வயது வரம்பு இல்லை. ஒருவர் ஒரு கட்டுரை மட்டுமே அனுப்பலாம். பரிசுபெற்ற கட்டுரைகளைத் திருத்தி நூலாக வெளியிடும் உரிமை வாசகர் வட்டத்திற்கு உரியது. மின்னஞ்சல் வழியாக ஆங்கிலத்தில் உங்களின் முழுப்பெயர், தெளிவான அஞ்சல் முகவரி, மின்னஞ்சல் முகவரி, செல்போன் என் விவரங்களோடு அனுப்பவேண்டும்.

உங்கள் திறனாய்வு எமக்குக் கிடைக்க வேண்டிய கடைசி நாள்: 31.03.2023

போட்டி முடிவுகள் 2023 ஏப்ரல் மாதம் 30 ஆம் திகதி இணையத்தில் வெளியிடப்படும்.

மின்னஞ்சல் : kurufanclub@gmail.com இணையம் : kurunovelstory.blogspot.com

<https://canadiantamilsliterature.blogspot.com/>

இந்த அறிவிப்பினை உங்களின் முகநூல் பக்கத்திலும் பகிர்க்குழுக்களிலும்; (whatsapp) பகிர்ந்து உதவுங்கள்.

நன்றி!

**சுலோச்சனா அருண்,**
செயலாளர், குரு அரவிந்தன் வாசகர் வட்டம்.


tasty
தமிழா
தமிழ் மண்ணிலிருந்து
நேரடியாக உலகெங்கும்...
பனை வெல்லம்
தேன் நெல்லி
மரச்செக்கு எண்ணெய்கள்
சுக்கு மல்லி காபி தூள்
யாழ். கறித்தூள்
இலங்கை மற்றும் தென்னிந்திய மசாலா பொருட்கள் பாரம்பரிய உணவு வகைகள்..
கனடாவில்
Tasty தமிழா தயாரிப்புகள் இங்கு கிடைக்கும்..
MAHAANS PICK & PRESS OIL MILL INC
Organic Bulk Store & Water Filling Station
5635 Finch Ave East,
Unit 5, Scarborough M1B 5K9.
Call:
416 293 4010
MAHAANS
PICK & PRESS OIL MILL INC


Dr. புஷ்பா வன்னித்தம்பி
பல் வைத்தியர்
Dr. Pushpa.V & Associates
Dentist
New Patients Welcome
Open 7 Days a week
Sunday by Appointment only
சகல விதமான பல்வைத்திய சேவைகளுக்கும்
Scarborough
1200, Markham Road,
Suite # 119, Scarborough
ON M1H 3C3
(Markham / Ellesmere)
416-289-7187
Markham
7595, Markham Road,
Suite #4,
ON. L3S 0B6
(Markham / 14th, Opposite to Costco)
905-201-8900

# Ranil Got Army Occupied Land Area Numbers Wrong?

Siva Parameswaran - Senior International Journalist




Thai Pongal day events in the Tamil heartland of Jaffna seems to have gone wrong for the President Ranil Wickremesinghe.

While on one side protesters demanding the return of their lands and seeking to know the whereabouts of their relatives who surrendered, were brutally attacked with water cannon without being given answers on the other side the visit itself perse was disappointing for the Tamils, they say.

Mocking the brutal action of the security forces the Tamils in an act of defiance had a shampoo bath as the water cannons sprayed water amidst breaking down.

As release of lands were being discussed, land grabbing attempts continues by the government and at many places, the public have thwarted such an attempt.

Now, serious questions have been raised by the war affected Tamils in the North and East about his claims of the area of the land held by the security forces. The actual area including government and departmental lands held by the army is by far huge than the actual number the president told in Jaffna.

According to the report of the UN Human Rights High Commissioner, "In his 8 August 2022 speech, the president acknowledged that there are many land issues that need to be resolved".

The report further said, "The Government reports that the total number of private lands released by the Armed Forces from 2009 to June 2022 is 2,601,796 acres or 92.42%, with a further 53 (0.19%) acres proposed for release".



Accordingly, the president has confirmed that more 2.8 million acres of land were forcefully taken over by the state's Armed Forces. That being the case 6.52% amounting to 1,83,589 acres are still occupied by the security forces.

But the president in his speech on Thai Pongal day in Jaffna said, "We are also discussing the return of land in Jaffna. During the war, the army kept about 30,000 acres under their control because they wanted to protect these areas".

He further added, "Today only 3,000 acres are left under the security forces. The army has expressed its willingness to hand over another part of it. We are discussing it".

However, at a meeting at the Jaffna District office, President Wickremesinghe ordered the release of 110 acres in Valikamam North, 4360 acres in Vadamaratchi East and 354 acres in Kuruthurmalai.

Even if it is assumed that those 3000 acres are in the Jaffna peninsula, he has not said anything about the 1,83,589 acres of land mostly in the Vanni area, which is where the maximum number of security forces camp exist in the whole nation.

According to TNA MP Sivagnanam Sritharan 4374.5 acres of land in Killinochi district alone continues to be under military occupation. This mostly refers to private lands forcefully occupied by the army depriving the livelihood of hundreds of thousands of Tamils. In adjoining Mullaitivu district the situation is even dire.



Apart from this the security forces are also occupying government and department lands like belonging to Agriculture/Wildlife/Health/Education etc.,

In such a scenario, the numbers quoted by the President appears very much misleading.

Meanwhile former Chief Minister of Northern Province and former Judge of the Supreme Court justice C V Wigneswaran has told the president that over 60,000 acres of land are still under the security forces throughout the province. However, it is reported the president replied that only 16,000 acres are with the forces. Also, Wigneswaran says the president has agreed to check the details of the lands occupied by the state's armed forces provided by him.

As in any Executive Presidency system when the President is the Supreme Commander of the Armed Forces, instead of ordering the security forces to release the lands immediately, Ranil Wickremesinghe says discussion is on with the army on handing over back the land legally belonging to the public.




Tamils whose lands were forcefully grabbed under the guise of war and security say the president should stand by his words of 'doing everything' to get back their lands while he was leader of the opposition (LOP) and subsequently Prime Minister.

Information gathered from various sources clearly indicate the numbers quoted by the President and the state do not tally with the actual occupation.

In 2012 when Ranil Wickeremasinghe as LOP participating in a meeting along with now Tamil Progressive Alliance Leader and Colombo district MP Mano Ganesan and all TNA MPs in front of Tellipalai Dugai Amman Kovil assured that he stands with them and will ensure lands are returned. This incident has been well documented.

In spite of his assurances more than a decade ago in Vanni alone 45,000 acres of lands are occupied by security forces camp, out of which 5000 acres are pvt land, 6000 - 7500 govt lands, rest all dept lands. For example, in Killinochi dist Vaddakachi village army is doing agriculture in 672 acres of private ownership lands.

While in Thiruvayaru village 450 acres of land belonging to the agriculture department a model farm is run by SL army camp. Also, in Mannar district Manthai West DS division Vellankulam village 1000-acre model cashew and coconut farm were taken for army camp.

Now, all the commercial proceeds of such fertile lands are being taken away by the security forces, while the locals who fled to save their lives are left struggling for their livelihood. Most of them say they survive as daily wage labourers and finding a job amidst serious economic challenge is a huge task.



Meanwhile in Mullaitivu district PTK DS division- Moongilaru and Viswamadu villages in the forest dept land, SL civil security division is having a model tree planting village in 1000 acres where the army is cultivating and selling the produce, in what would have been a source of living of thousands of locals whose survival has become a question mark as increasing threat of land grabbing continues.

Similarly, in Killinochi District Poonagari DS division Mudkomban village 200-acre model farm area taken over by the army depriving the war affected Tamils of their daily living.

Although, according to sources Ranil Wickremsinghe is said to have ordered returning 354 acres of land in Kurunthoormalai area immediately, the Buddhist clergy and army are stay put there forcefully and have constructed a Vihara with utter disregard to a court order.

Locals are apprehensive if the army and the clergy will agree to the release of the land which is a traditional Tamil sacred area with the Adhi Ayyanar Sivan Kovil there.

# "ஜனாதிபதிக்கு எதிரான ஆர்ப்பாட்டம்" – வேலன் சுவாமிகள் பிணையில் விடுதலை



**தைப்** பொங்கல் விழாவில் பங்குபெற யாழ்ப்பாணம் வந்திருந்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிற்கு எதிரான போராட்டத்தில் பங்குபெற்று கருப்புக் கொடி காட்டியதாக பொலிசார் குற்றஞ்சாட்டிய வழக்கில் வேலன் சுவாமிகளிற்கு யாழ் நீதிமன்றம் பிணை வழங்கியுள்ளது.

சிவகுரு ஆதீணகுரு தவத்திரு வேலன் சுவாமிகள் புதன்கிழமை (18) கைது செய்யப்பட்டு அன்று இரவுவேளை நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட நிலையில் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

அவர் சார்பில் சட்டத்தரணிகளான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் மற்றும் சட்டத்தரணி சிவஸ்கந்தசிறி உள்ளிட்டோர் நீதிமன்றத்தில் ஆஜராயினர்.

அப்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க யாழ்ப்பாணம் வந்தபோது பொதுப் பாதுகாப்பிற்கு குந்தகமாகச் செயல்பட்டமை, பொலிசாரின் பணிக்கு இடையூறு விளைவித்தமை உள்ளிட்ட 5 குற்றச்சாட்டுக்களின் கீழ் அவர் மீது பொலிசார் வழக்குத் தொடுத்தனர். ஜனாதிபதிக்கு கருப்புக் கொடி காட்ட முயன்றார் என்றும் அவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டது.

நீதிமன்றத்தில் தனது வாதங்களை முன்வைத்த ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன் "அரசியல் அமைப்பின் 14ஆம் சரத்தின் கீழ் ஓர் எதிரணி ஜனநாயக வழியில் போராட இடமுண்டு. அதேநேரம் குறிப்பிட்ட தினம் ஜனாதிபதியின் வருகையின் சமயம் அமைதியான வழியில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின் போது வேலன் சுவாமி எந்தவொரு வன்முறையிலும் ஈடுபடவில்லை" என்று வாதிட்டார். மேலும் பலமுறை தன்னை தொடர்ந்து பயணிக்க அனுமதிக்குமாறே அவர் கோரினார் என்றும் நீதிமன்றில் கூறப்பட்டது. அவை காணொளிகளாகவும் வெளிவந்துள்ளதோடு அங்கே பொலிசார் ஏற்படுத்திய தடையுன்போது சுவாமிகள் உடல் அளவில் பாதிக்கப்பட்டுள்ளார் என்பவை உட்பட சட்டத்தரணிகள் மன்றின் கவனத்திற்கு கொண்டு சென்றனர்.

இவற்றினை ஆராய்ந்த யாழ்ப்பாணம் நீதிமன்றம் புதன்கிழமை இரவு 9 மணியளவில் தவத்திரு வேலன் சுவாமியை ஓர் சரீரப் பிணையில் செல்ல அனுமதித்ததோடு வழக்கினை ஜனவரி மாதம் 31ஆம் திகதிக்கு ஒத்திவைத்துள்ளது.

சமூகச் செயற்பாட்டாளரான வேலன் சுவாமிகள் கடந்த ஆண்டு தமிழ் மக்களிற்கு நியாயம் கோரி இடம்பெற்ற பி 2 பி போராட்டத்தில் முன்னிலை வகித்திருந்தார். தொடர்ச்சியாக தமிழ் மக்களின் நலம் சார்ந்த விடயங்களில் தன்னை ஈடுபடுத்திக்கொள்கிறார். அதன் காரணமாக பொலிசார் மற்றும் பாதுகாப்பு படையினரின் சீற்றத்திற்கு ஆளாகியுள்ளார் என்று உள்ளூர்வாசிகள் கூறுகிறனர்.

# தலை விழுந்தால் எனக்கு வெற்றி, பூ விழுந்தால் உனக்குத் தோல்வி: "தேசியச் சிக்கலில்" இரணிலின் சூதாட்டம்

- என் சத்தியமூர்த்தி

(கடந்தவாரத் தொடர்ச்சி)

மிரட்டலா அல்லது?

சனாதிபதியின் வேண்டுகோளின் பேரில் சனவரி 5 ஆம் திகதி அன்று முறைசாரா கலந்துரையாடல்களுக்குப் பின்னர், தமிழ் தேசியக் கூட்டமைப்பு, குறிப்பாக அடுத்த மூன்று நாட்களில் மாநாட்டில் சேர முடிவு செய்வதற்கு முன்னர், நிலுவையில் உள்ள "அரசியல் அல்லாத" ஆனால் பிரபலமான மற்றும் "அழுத்தமான" கோரிக்கைகள் குறித்து அரசாங்கத்தின் மனதை எடைபோடும் என அறிவித்தது.

ஒரு தீர்வைக் கண்டுபிடிக்கத் தங்களால் முடிந்த அனைத்தையும் செய்கிறோம் எனத் தமிழ்த் தலைவர்கள் விளக்கினர், காரணம் இன்னும் ஒரு தடவை பேச்சுவார்த்தை முறிவதற்கோ முறித்துக் கொள்வதற்கோ ஆன பழி தங்கள் மீது சுமத்தப்படுவதை அவர்கள் விரும்பவில்லை.



ஆனாலும், மூன்று கோரிக்கைகளுக்கு சாதகமான பதில் கிடைக்காவிட்டால் மாநாட்டைப் புறக்கணிக்கப் போவதாக ததேகூ அச்சுறுத்தல் விடுத்திருப்பது மிரட்லுக்குச் சமமாகும்.

ஒருவகையில், அனைத்துக் கட்சி மாநாட்டில் இரணிலின் அணுகுமுறை, குறிப்பாக இனச் சிக்கலைத் தீர்ப்பதற்கு, ததேகூ இன் அணுகுமுறையை ஒத்ததாகும்.

இந்தச் சிக்கலுக்கான தீர்வு என்ன என்ற விளையாட்டில் இரணில் திறமையானவர்.

தமிழர் தரப்பு அவருக்கு வெட்டிய குண்டு, குழிகள் பற்றி அவர் அறிவார். அவரைப் போலவே, சிங்களப் பெரும்பான்மையினர் அரசியலமைப்பின் "ஒற்றுமை" திட்டத்தை " கூட்டாட்சி" ஆக மாற்றுவதை ஏற்றுக் கொள்ளமாட்டார்கள் என்பதும் அவர்கள் (ததேகூ) அறிவார்கள். ஆனால், அவரை என்ன, எங்கே, ஏன், எப்படிச் சிக்க வைக்கும் என்பது தெரிந்தும் கட்.டாயப்படுத்துகிறார்கள்.

போருக்குப் பிந்தைய சிங்கள பிரபல்யத்தில், மக்கள்வாதத்திலிருந்து வேறுபட்ட, மகிந்த, மாகாணங்களுக்கு, குறிப்பாக தமிழர்களுக்கு அதிக அதிகாரங்களை வழங்கத் தயாராக இருப்பதாகக் கூறப்பட்டது. சிங்கள பேரினவாதிகள் மட்டுமல்ல மற்றவர்கள் மத்தியிலும் "கூட்டமைப்பு" என்ற சொல் கெட்ட சொல்லாக இருக்கிறது. இதனால் இருதரப்பினரும் (ததேகூ மற்றும் அரசாங்கமும்) "கூட்டாச்சி" என்ற சொல்லை குறிப்பிடாமல் விட்டுவிட்டார்கள்.

ததேகூ அந்த நேரத்தில் தேவையில்லாமல் முட்டாள்தனமாக நடந்து கொண்டது.

இப்போதும் அப்படிச் செய்ய நினைக்கிநுது. மேலும், சம்பந்தன் மற்றும் சுமந்திரன் போன்றவர்கள், அரசியலமைப்பின் தன்மையை மாற்றுவதற்குக் பொது வாக்கெடுப்பு தேவைப்படும் என்பதை நன்கு அறிவார்கள், மேலும் இரணில் வெற்றி பெற்றாலும் பெறாவிட்டாலும், அதை எதிர்கொள்ளும் மனநிலையில் இல்லை என்பதும் நன்றாகவே தெரியும்.

ஒவ்வொரு திருப்பத்திலும் பிளவு படுதல் நாடு கூட இதுபோன்ற ஒரு திட்டத்தை ஏற்க முடியாது, ஏனெனில் இது ஒவ்வொரு முறையும் பிரிவினைகளை ஏற்படுத்தும், மேலும் தொடரும் பொருளாதார நெருக்கடியிலிருந்து கவனத்தை திசை திருப்பும். பட்டறிவு வாய்ந்த ஒரு நிர்வாகி என்ற முறையில் இரணில் அப்படி நடக்க விரும்பமாட்டார்.

இதேபோல் அல்லது இதைவிட முக்கியமானது குறைந்தபட்சம் 2024 மற்றும் 2025 ஆம் ஆண்டுகளில் சனாதிபதி தேர்தல்கள் மற்றும் நாடாளுமன்றத் தேர்தல்கள் நடைபெறும் வரை மகிந்த தனது அரசாங்கத்திற்குத் தொடர்ந்து சமமான அல்லது அதற்கும் மேலான ஆதரவு அளிப்பது ஆகும்.

'கூட்டாட்சி' என்ற ஒற்றை வார்த்தையைப் பேசும் தமிழர்களோ, தமிழர்கள் பங்கேற்கும் பிற தமிழ்க் கட்சிகளோ, மறு இணைப்பு குறித்த தங்களின் தற்போதைய நிலைப்பாட்டை தெளிவுபடுத்தவில்லை. முன்னைய காலங்களில் கூட, சந்திரிகா பல்லின மக்கள் வாழும் கிழக்கு மாகாணத்தில் உள்ள பகுதிகளின் "தொடர்ச்சி" அடிப்படையிலான மறுசீரமைப்பை மட்டுமே முன்மொழிந்தார். 1987 ஆம் ஆண்டு மாகாண சபைகள் சட்டத்தில் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளபடி, அத்தகைய போக்கிற்கு இப்போதும் கிழக்கில் ஒரு அரசியல் வாக்கெடுப்புத் தேவையா என்றால் அதுபற்றிக் கிழக்குக் கூட ஒரு விவாதத்தைத் தொடக்க அனுமதிக்காது என்பதே யதார்த்தமாகும்.

இதுபோன்ற அடிப்படை விடயங்கள் பற்றிய கலந்துரையாடல்கள் இல்லாவிட்டாலும், மூன்று அழுத்தமான சிக்கல்கள் குறித்த ததேகூ இன் கோரிக்கைகள் இதுவரை மேற்கொள்ளப்படாத முன்னேற்றத்தை சிதைக்கும் ஆற்றலைக் கொண்டுள்ளன. முதலாவது விடயத்தைப் பொறுத்தளவில் பயங்கரவாதத்துக்கு எதிரான சட்டம் அல்லது பிற சட்டங்களின் கீழ் குறிப்பிட்ட குற்றவியல் குற்றச்சாட்டுகள் எதுவும் இல்லாத "அரசியல் கைதிகளை" விடுவிப்பதில் அரசாங்கத்திற்கு எந்தச் சிக்கலும் இருக்கக்கூடாது. மூன்றாவது கோரிக்கையின் பேரில், போர்க் காலத்தில் ஆயுதப் படைகளால் ஆக்கிரமிக்கப்பட்ட தமிழர் நிலங்களை மீட்பதற்கு எதிராக, அரசாங்கம் மிக நீண்ட காலத்திற்கு முன்பே அவர்களுடன் (ததேகூ) கலந்துரையாடியிருக்க வேண்டும். அவ்வாறு செய்யத் தவறியதால், அவர்கள் இருவரும் 'சரணடைதல்' செயல்முறையைத் தொடங்க வேண்டும்.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர்

தொல்லியல் பணிகளை மேற்கொள்வது, வன நிலத்தைப் பாதுகாப்பது மற்றும் பிற போலிக் காரணங்களுக்காக, போருக்குப் பிந்தைய காலத்தில் தமிழ்ப் பகுதிகளில் அரசாங்கம் மேற்கொண்ட 'நில அபகரிப்பு'க்கு எதிராகவும் தமிழர் கோரிக்கைகள் அடங்கியுள்ளன. முன்னைய கோட்டாபய இராசபக்சவின் மதிப்பிழந்த சனாதிபதி ஆட்சியின் போதுதான் (தமிழர்களது) காணிகளை அபகரிக்கும் பணி நடத்தது. அதையெல்லாம் மீண்டும் அரசாங்கம் சிக்கலாக்குவதற்கு எந்தக் காரணமும் நியாயமும் இல்லை.

தமிழர்களுக்குள் இருந்தோ அல்லது தமிழர்களிடமிருந்தோ முன்வைக்கப்படும் தீர்வின் வரையறைகள் எதுவாக இருந்தாலும் இரண்டாவது கோரிக்கைதான் அரசாங்கத்தால் எளிதாக இசைந்து கொடுக்கக் கூடிய ஒன்றாகும். அது ஏற்கனவே ஐநா மனித உரிமைகள் பேரவையில் அமெரிக்கா தலைமையிலான மேற்கு நாடுகளால் முன்னெடுக்கப்படுகின்றது. குறிப்பாக, அதற்கு ததேகூ ஆதரவளிக்கிறது. தமிழர்களின் 'வலிந்து காணாமல் போனவர்கள்" தொடர்பாக கொழும்பில் எந்தவொரு அரசாங்கமும் இந்த விடயத்தை முன்னெடுத்தால் உயிர்வாழ முடியாது என்பது அனைவரும் அறிந்ததே. எந்தவொரு தலைவரும் தனது பதவிக் காலத்தைத் தாண்டி செல்லக்கூடிய அந்த ஆபத்தை எடுக்க விரும்பமாட்டார்.

ஒட்டுமொத்தமாக, பேச்சுவார்த்தைகள் முதல் நாளிலேயே தோல்வியடைந்தால், அது பொறுப்புக்கூறல் பற்றிய சிக்கல்கள் காரணமாக இருக்கும். அதைத் தாண்டிச் சென்றால், அது ஒரு "கூட்டாச்சித் தீர்வு" பற்றியதாக இருக்கும், அதே மாதிரியான மற்றொரு கோணத்தை "மறு இணைப்பு" வழங்கும். இறுதியில் தந்திரசாலியான இரணில் அரசாங்கத்துக்குள்ளும் வெளியேயும், சிங்கள மக்களுக்குள்ளும் வெளியேயும், நாட்டிற்குள்ளும் வெளியேயும் தனது விமர்சகர்களிடம் 'தலைவிழுந்தால் எனக்கு வெற்றி, பூ விழுந்தால் உனக்குத் தோல்வி' என்று ஒரேயொரு விடயத்தை மட்டும் சொல்லிக் கொண்டிருக்கிறார். (முற்றும்)

இந்தக் கட்டுரையை எழுதியவர் ஒரு கொள்கை ஆய்வாளர் மற்றும் அரசியல் விமர்சகர், சென்னையில் வாழ்கிறார்.
மின்னஞ்சல் - **sathiyam54@nsathiyamoorthy.com**

ஆங்கிலத்தில் எழுதப்பட்ட இந்தக் கட்டுரையை **https://www.google.com/search?q=Heads%2C+I+win%2C+tails%2C+you+lose%3A+Ranil%E2%80%99s+gambit+on+the+%E2%80%98national+problem%E2%80%99&oq=Heads%2C+I+win%2C+tails%2C+you+lose%3A+Ranil%E2%80%99s+gambit+on+the+%E2%80%98national+problem%E2%80%99&aqs=chrome..69i57j69i60l2.1763j0j15&sourceid=chrome&ie=UTF-8** என்ற இணையதளத்தில் படிக்கலாம்.

*தமிழாக்கம்: கனடா நக்கீரன்.*

பருத்தித்துறை மக்கள் ஒன்றியம் கனடா
19வது வருடாந்தக் கலை இரவு 2023

காலம்: சனிக்கிழமை 21-01-2023
மாலை 6.00 மணி

இடம்: The Queen Palace Banquet Hall
1713 Brimley Road
Scarborough, ON M1P 3G5
(Brimley & Brimorton)

கலை இரவில் பாரம்பரியக் கலைகளான பறை. சிலம்பாட்டம் என்பனவற்றோடு நாடகம். நடனம். இன்னிசைக்கச்சேரி ஆகியன இடம்பெறவுள்ளன. அத்தோடு இரவு உணவும் பரிமாறப்படும்.


பருத்தித்துறை வாழ் மக்ககள். அங்கத்தவர்கள். நண்பர்கள். நலன் விரும்பிகள் அனைவரையும் தவறாது கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் வேண்டுகின்றோம்.

நன்றி.

ந. சிவசுப்பிரமணியம் - மணியம் மாஸ்ரர்
தலைவர்
தொடர்புகட்கு: (647) 545-9905

க. பாலேஸ்வரன்
கௌரவ செயலாளர்
தொடர்புகட்கு: (416) 358-6853

# சிறந்த மாடுபிடி வீரர்களுக்கு அரசுப் பணி வழங்க வேண்டும்: ஜல்லிக்கட்டில் சாதித்த மதுரை மின் வாரிய ஊழியர் வலியுறுத்தல்



''கார் வாங்க வசதியில்லை. எப்படி யாவது வாங்கிவிட வேண்டும் என்ற ஆசையில் விளையாடி கார் பரிசு பெற்றுள்ளேன்,'' என்று மதுரை அவனியாபுரம் ஜல்லிக் கட்டில் 3வது முறையாக சிறந்த மாடுபிடி வீரர் பரிசு பெற்ற ஆர்.விஜய் (23) தெரிவித்துள்ளார்.

ஜல்லிக்கட்டில் ஒரு காளையை அடக்குவதே வீரர்களுக்கு பெரும் சிரமம். அந்த எவுக்கு காளைகளுக்கு பல்வேறு பயிற்சிகளை கொடுத்து அவற்றின் உரிமையாளர்கள் தயார் செய்கிறார்கள். ஆனால், மதுரை ஜெய்ஹிந்த்புரத்தைச் சேர்ந்த ஆர்.விஜய் என்பவர், அவனியாபுரம் ஜல்லிக்கட்டில் 28 காளைகளை அடக்கி 3வது முறையாக சிறந்த மாடுபிடி வீரர் பரிசு பெற்று அசத்தி உள்ளார்.

முதல் 2 முறை அவருக்கு இரு சக்கர வாகனங்கள் பரிசாக வழங்கப்பட்டன. இந்த முறை கார் பரிசு கிடைத்தது. வாடகை வீட்டில் வசிக்கும் நிலையில், தற்போது பரிசாக வாங்கிய காரை நிறுத்தக் கூட விஜய்க்கு இடமில்லை. கல்லூரியில் பிபிஏ படித்து வந்த நிலையில் தொடர்ந்து படிக்க வசதியின்றி படிப்பை பாதியில் நிறுத்தி விட்டார்.

குடும்பச் சூழலால் மின்வாரியத் தில் ஒப்பந்தத் தொழிலாளியாக வேலையில் சேர்ந்துள்ளார். அதன் பிறகு மின்வாரியத்தில் நிரந்தர வேலை கிடைத்து தற்போது கேங் மேன் ஆக பணிபுரிந்து வருகிறார். மின்வாரியத்தில் பணிபுரிந்தாலும் ஜல்லிக்கட்டில் தொடர்ந்து விளையாடி வருகிறார்.

ஜல்லிக்கட்டு விளையாடச் செல்வதற்காக ஒருபோதும் விடுமுறை எடுப்பதில்லை. ஞாயிற்றுக்கிழமை விடுமுறை நாளில் நடக் கும் ஜல்லிக்கட்டுப் போட்டிகளில் மட்டும் இவர் பங்கேற்கிறார். அவனியாபுரம் ஜல்லிக்கட்டில் 2020, 2021, 2023ம் ஆண்டில் 3 முறை சிறந்த மாடுபிடி வீரர் பரிசு பெற்று அசத்தியுள்ளார். இந்த முறை கார் பரிசு பெற்ற மகிழ்ச்சியில் இருந்த அவரை சந்தித்தோம்.

இது குறித்து விஜய் கூறிய தாவது: ஜல்லிக்கட்டில் ஆரம்ப காலத்தில் எனக்கு பெரிய பிடிப்பு இல்லை. 2017ம் ஆண்டு ஜல்லிக் கட்டுப் போராட்டம் வெடித்தபோதுதான், இந்த போட்டி மீது ஆர்வம் ஏற்பட்டது. ஜல்லிக்கட்டு போராட்டத்தில் இவ்வளவு கூட்டம் திரள்கிறார்களே என ஆச்சரியப் பட்டேன். அதன்பிறகுதான், ஜல்லிக்கட்டு ஒரு வகையில் நாட்டினக் காளைகளை பாதுகாக்க உதவுவதை தெரிந்து கொண்டேன்.

மேலும், இந்த வீர விளையாட்டு நமது பாரம்பரியம், அடையாளத்தை அடுத்தடுத்த தலை முறையினருக்கு கடத்துகிறது. அதனால், ஜல்லிக்கட்டு மீது மிகப்பெரிய ஈர்ப்பு ஏற்பட்டது. ஊரில் ஞாயிற்றுக்கிழமை தோறும் மாடு பிடிக்க என்னோடு படித்தவர்கள், நண்பர்கள் செல்வர். அவர்களுடன் சென்று காளைகளை பிடிக்க பழகினேன்.

ஆரம்பத்தில் களத்தில் இறங்கவே அஞ்சினேன். நண்பர்கள் கொடுத்த ஊக்கத்தால் விடுமுறை நாட்களில் தொடர் பயிற்சி எடுத்து காளைகளை சிறப்பாக அடக்கப் பழகினேன். போட்டிகளில் பங்கேற்று வெற்றியும் பெற்றேன். ஆனால், பாலமேடு, அலங்காநல்லூர் போட்டிகளில் மட்டுமே கார் பரிசாக வழங்கப்பட்டது. அவனியாபுரத்தில் கார் வழங்குவதில்லை.

எனக்கோ கார் வாங்க ஆசை. ஆனால், எனது குடும்பச் சூழலில் கார் வாங்க முடியவில்லை. இந்நிலையில், அவனியாபுரம் ஜல்லிக்கட்டில் இந்த முறை கார் பரிசாக வழங்கப்படும் என அறிவித்தனர். எப்படியும் கார் பரிசு பெற வேண்டும் என ஆசைப் பட்டேன். அதற்காக திட்டமிட்டு காளைகளை பிடித்தேன். நினைத்தபடியே கார் பரிசாக கிடைத்தது.

ஜல்லிக்கட்டில் உயிரை பணயம் வைத்துதான் காளைகளை அடக்குகிறோம். என்னைப் போன்ற சிறந்த மாடுபிடி வீரர்களுக்கு அரசுப் பணி வழங்க வேண்டும். நான் ஏற்கெனவே மின்வாரியத்தில் கேங்மேனாக இருப்பதால், எனக்கு பதவி உயர்வு வழங்கினால் நலமாக இருக்கும். இவ்வாறு அவர் கூறினார்.

# நீட் விலக்கு மசோதா குறித்து விளக்கம் கேட்டு மீண்டும் மத்திய அரசு கடிதம் : மா.சுப்பிரமணியன் தகவல்


"தமிழ்நாடு அரசு அனுப்பிய நீட் விலக்கு மசோதா குறித்து மீண்டும் விளக்கம் கேட்டு மத்திய ஆயுஷ் அமைச்சகம் கடிதம் அனுப்பியுள்ளது. சட்ட வல்லுநர்களுடன் ஆலோசித்து விரைவில் பதிலளிக்கப்படும்'' என்று தமிழக மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் கூறியுள்ளார்.

சென்னையில் தமிழக மருத்துவம் மற்றும் மக்கள்நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது அவர் கூறியது: "நீட் விலக்கு மசோதாவை ஆளுநர் மூலம் குடியரசுத் தலைவருக்கு அனுப்பி வைத்ததற்குப் பிறகு, குடியரசுத் தலைவர் அலுவலகத்தில் இருந்து உள்துறை அமைச்சகத்தின் வாயிலாக ஒன்றிய அரசின் சுகாதாரத் துறை, ஆயுஷ் அமைச்சகம், உயர் கல்வித் துறை ஆகிய துறைகளில் இருந்து தமிழ்நாடு மருத்துவம் மற்றும் சுகாதாரத் துறைக்கு பல்வேறு விளக்கங்களைக் கேட்டு கடிதங்களை எழுதியுள்ளனர்.

கடந்த நான்கைந்து மாதங்களாக அந்த கடிதங்களுக்கு விளக்கங்கள் சட்ட வல்லுநர்களுடன் எல்லாம் கலந்தாலோசிக்கு பதில்கள் அனுப்பிவைக்கப்பட்டன. இதன்பிறகு மீண்டும், கடந்த 13ம் தேதி ஒரு வாரத்திற்கு முன்னால் ஆயுஷ் அமைச்சகத்தில் இருந்து ஒரு விளக்கம் கோரி கடிதம் வந்துள்ளது.

ஏற்கெனவே தமிழ்நாடு அரசு, சட்ட வல்லுநர்களால் பரிந்துரைக்கப்பட்டு அனுப்பப்பட்ட அந்த விளக்கத்தில் இருந்து மேலும் ஒரு சிறிய விளக்கம் பெறுவது குறித்து கேட்டிருந்தனர். அதுதொடர்பாக நேற்று விவாதிக்கப்பட்டது. இதுகுறித்து சட்ட வல்லுநர்களுடன் கலந்துபேசி விரைவில் பதில் அனுப்பப்படும்'' என்று அவர் கூறினார்.

# இலங்கைக்கான பொருளாதார உதவிகளை நிபந்தனைகள் இல்லாமல் செய்யக் கூடாது: அன்புமணி ராமதாஸ்



இலங்கைக்கான பொருளாதார உதவிகளை நிபந்தனைகள் இல்லாமல் செய்யக் கூடாது என்று அன்புமணி ராமதாஸ் தெரிவித்துள்ளார். இது குறித்து பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில், "இலங்கை அரசு மீளமுடியாத கடன்சுமையில் சிக்கியுள்ள நிலையில், அந்த நாடு பன்னாட்டு நிதியத்திடம் இருந்து கடன் பெறுவதற்கு இந்தியா முழுமையான ஆதரவைத் தெரிவித்திருக்கிறது. மனித நேய அடிப்படையில் இந்தியாவின் நிலைப்பாடு வரவேற்கத்தக்கது என்றாலும் கூட, மனித உரிமைகளை மதிக்காத இலங்கைக்கான பொருளாதார உதவிகளை நிபந்தனைகள் இல்லாமல் செய்யக் கூடாது.

வரலாறு காணாத கடன்வலையில் சிக்கியுள்ள இலங்கை, அதை சமாளிக்க பன்னாட்டு நிதியத்திடம் இருந்து ரூ.23,606 கோடி கடன் வாங்க முடிவு செய்திருக்கிறது. இலங்கைக்கு பன்னாட்டு நிதியம் கடன் வழங்குவதற்கு இந்தியாவின் ஆதரவு தான் முதன்மைக் காரணம் ஆகும். இலங்கைக்கு கடன் வழங்க பன்னாட்டு நிதியம் பல்வேறு நிபந்தனைகளை விதித்திருக்கிறது. அவற்றில் முதன்மையானது, இலங்கைக்கு கடன் வழங்கியுள்ள இந்தியா, சீனா ஆகிய நாடுகளில் ஒன்று, இலங்கையின் கடன் சீரமைப்புத் திட்டத்திற்கு ஆதரவளிக்க வேண்டும் என்பதாகும்.

இலங்கையில் நிலைமையை கருத்தில் கொண்டு, இதற்கு இந்தியா ஒப்புக்கொண்டுள்ளது. அதுமட்டுமின்றி, இதற்கான உடன்பாட்டிலும் இந்தியா கையெழுத்திடவுள்ளது. அதற்காக இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கர் இரு நாட்கள் அரசு முறை பயணமாக இன்று இலங்கைத் தலைநகர் கொழும்புக்கு சென்றுள்ளார்.

இலங்கைக்கு இந்தியா மிக அதிக அளவில் கடன் வழங்கியிருப்பதும், பன்னாட்டு நிதியம் கடன் வழங்க ஆதரவளிப்பதும் முழுக்க முழுக்க மனிதநேய அடிப்படையில் தான் அமைய வேண்டும். அதைக் கடந்து இலங்கைக்கு உதவி செய்ய வேண்டிய எந்த வகையான தார்மிகக் கடமையும் இந்தியாவுக்கு கிடையாது. அதற்கான தகுதியும் இனப்படுகொலை செய்த இலங்கை பேரினவாத அரசுக்கு கிடையாது.

இலங்கைக்கு எந்த நிபந்தனையும் இல்லாமல் தான் இந்தியா கடனுதவி வழங்கியுள்ளது. அதுமட்டுமின்றி, பன்னாட்டு நிதியத்திடமிருந்து இலங்கை கடன் பெறுவதற்கான உடன்பாடுகளில் கையெழுத்திடுவதற்காகவும் இந்தியா எந்த நிபந்தனையும் விதிக்கவில்லை. இலங்கைக்கு கடன் கிடைப்பதற்காக இந்தியா இந்த அளவுக்கு இறங்கிச் சென்று உதவி செய்ய எந்த நியாயமும் இல்லை.

இலங்கைப் போரின் போது ஒன்றரை லட்சம் அப்பாவி தமிழர்களை படுகொலை செய்த சிங்கள அரசு, அதற்காக இன்று வரை வருந்தவில்லை. இலங்கை கடுமையான பொருளாதார நெருக்கடிகளை கடந்த காலங்களில் எதிர்கொண்டு வந்த போதும் கூட, தமிழர்களுக்கு எதிரான இனவெறியை கைவிடவில்லை. இலங்கையில் ஈழத் தமிழர்களுக்கு எதிரான இனவெறித் தாக்குதல்கள் தொடர்வதாக ஐ.நா. மனித உரிமைகள் ஆணையம் 2022 பிப்ரவரி மாதம் தனது அறிக்கையில் குற்றஞ்சாட்டியது. இலங்கையில் தமிழர்கள் அதிகம் வாழும் பகுதிகளில் நிலைமை மோசமடைந்து இருப்பதாக அந்த அறிக்கை கூறியது. இலங்கையில் தமிழர்களுக்கு எதிரான அத்துமீறல்களும், கொடுமைகளும் இன்னும் தொடர்கின்றன. தமிழக மீனவர்களை சிங்களப் படையினர் கைது செய்வதும் தொடர்கதையாகிவிட்டது.

இனவெறி கோட்பாட்டை ஒழிக்காதவரை இலங்கைக்கு செய்யப்படும் உதவிகள் விழலுக்கு இறைத்த நீர் போல வீணாகும். இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக தொடரும் இனவெறி வன்முறைகளுக்கு முடிவுகட்டாமல், பிரச்சினைகளுக்கு நிலையான தீர்வு ஏற்படாது. எனவே, இலங்கைக்கு நிபந்தனை இல்லாமல் இந்திய அரசு கடன் வழங்கவோ, கடன் வழங்குவதற்கு ஆதரவளிப்பதோ கூடவே கூடாது.

வடக்கு கிழக்கிலிருந்து ராணுவத்தை குறைத்தல், போர்க்குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான குற்றங்களுக்கு பொறுப்புக்கூறலை உறுதி செய்தல், தமிழர் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணுதல், மீனவர் சிக்கலுக்குத் தீர்வு உள்ளிட்டவை தொடர்பாக இலங்கையிடம் வாக்குறுதிகளைப் பெற்று அதனடிப்படையில் மட்டும் தான் இலங்கைக்கு இந்தியா உதவ வேண்டும். இலங்கை அதிபர் ரணில் விக்கிரமசிங்கேவை சந்திக்கவுள்ள இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் இது தொடர்பாக வலியுறுத்தி போதுமான உத்தரவாதங்களை பெற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்'' என்று அதில் கூறியுள்ளார்.

# என்னடி மீனாட்சி சொன்னது என்னாச்சு – காற்றோடு போயாச்சு

**சிவா பரமேஸ்வரன் - மூத்த பன்னாட்டுச் செய்தியாளர்**



அரசியலில் பதவி எனும் சுகத்தை அனுபவித்துவிட்டால், அதிலிருந்து வெளியே வருவது மிகவும் கடினம். இது நாடுகளைக் கடந்த ஒன்று. உலகின் மிகவும் வல்லரசான, செல்வந்த நாடான அமெரிக்கா தொடக்கம் மிகவும் வறிய நிலையிலிருந்தாலும் தம்மை வல்லரசாகக் காட்டிக் கொள்ள முனையும் வடகொரியாவும் இதில் அடங்கும். பதவி மற்றும் குடும்ப அரசியல் என்பது ஆசியா மற்றும் ஆப்ரிகாவில் சர்வ சாதாரணம்.

இந்தியாவின் நேரு குடும்பம் தொடங்கி இலங்கையின் பண்டாரநாயக்க குடும்பம் வரை இது பரவலாக அறியப்பட்ட ஒன்று. ஒரு முறை பதவியில் இருந்து அதிலுள்ள சுகம், சொத்துக்கள், படாடோபம், கேட்காமலேயே கொட்டும் பணம், அதிகாரம் போன்றவற்றை இழப்பதற்கு யாரும் தயாராவதில்லை. பதவி என்ற அதிகாரத்தின் மூலம் ஈட்டப்படும் சொத்துக்களைப் பாதுகாக்க வாரிசுகளை களத்தில் இறக்குவது முறையற்ற வகையில் சேர்த்த பணத்தைப் பாதுகாக்க மட்டுமல்ல அதை மேலும் பெருக்குவதற்கு ஒரு உத்தியாகப் பயன்படுத்தப்படுகிறது.

பதவி என்று வரும் போது கொள்கைகள் காற்றில் பறக்கவிடப்படுவது இயற்கையானது மட்டுமின்றி ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்றாகிவிட்டது. தொடர்ச்சியாக பதவியில் இருப்பது ஊழலிற்கு வித்திடும் என்பதும் மறுக்க முடியாது. மக்கள் சேவைக்கு பதவி என்பது ஒரு கருவி மற்றும் வாய்ப்பாக உள்ளது என்கிற காற்றில் கம்பு சுற்றும் வாதத்தை அரசியல்வாதிகள் வைப்பார்கள் ஆனால் அது உண்மையில்லை என்பது அவர்களுக்கும் தெரியும் அடுத்தவர்களுக்கும் புரியும்.

அரசியலும் பதவியும் தண்ணீரும் மீனும் போல் என்று சொல்லக் கேட்டிருக்கிறேன். அதாவது தண்ணீர் சுத்தமாக இருக்க மீன்கள் தேவை அதே போன்று மீன் உயிர் வாழ்வதற்கு தண்ணீர் தேவை என்பதே அதன் அடிப்படை. அதை அரசியலிற்கு பொருத்தி பார்த்தால் ஊழல் மூலம் பணம் சம்பாதிக்க பதவி தேவை அதேவேளை பதவி இருந்தால் தான் பணம் சம்பாதிக்க முடியும்.

இதற்கு யாரும் விதிவிலக்கல்ல. இந்த பதவி மோகம் அல்லது தேவை என்பது அரசியல் மட்டுமல்ல அது வர்த்தகம், கலைத்துறை, தொழிற்துறை என அனைத்திலும் வியாபித்திருக்கும் ஒன்று. இவை அனைத்திலும் இழையோடும் அடிநாதம் ஒன்றுதான். ஈட்டலும், ஈட்டியதைப் பாதுகாத்தலுமே.

இலங்கையில் கட்சி, ஆட்சி மற்றும் தனிப்பட்ட ரீதியில் பலவீனமாக இருக்கும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தனது ஆட்சியை தக்கவைத்துக்கொள்ள அனைத்தையும் செய்யத் தயாராக இருக்கிறார். அவர் பதவியில் தங்கியிருப்பதும் ஆட்சி செய்வதும் ராஜபக்சக்களின் தயவிலேயே உள்ளது ஊரும் உலகமும் அறியும். ஆனால் தான் சுயாதீனமாக முடிவெடுப்பதாக அவர் வெளியுலகிற்கு காட்டிக்கொள்ள விழைகிறார் என்றே தோன்றுகிறது.

ராஜபக்சக்களின் கண் அசைவு அல்லது ஒப்புதலின்றி அவரால் அரச பதவியில் யாரையும் சுயாதீனமாக அமர்த்தவும் இயலாது என்பதே யதார்த்தம்.

இதன் பின்னணியிலேயே அவர் ஜனவரி 19 ஆம் திகதி இரு அமைச்சர்களை நியமித்துள்ளதை பார்க்க வேண்டியுள்ளது என்று கருதுகிறேன். இலங்கை இன்று இருக்கும் பொருளாதார நெருக்கடியில் நிதியுதவிகள் தேவையென்றால் செலவினங்கள் குறைக்கப்பட வேண்டும் என்று கடன் வழங்கும் நாடுகளும் நிறுவனங்களும் வலியுறுத்தி வருகின்றன. அதில் முக்கியமானது அரச செலவினங்கள் குறைக்கப்பட வேண்டுமென்பதாகும். அப்படியான சூழலில் ரணில் விக்ரமசிங்க புதிதாக இரண்டு அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்களை நியமித்துள்ளார். இதில் அமைச்சரவையிலேயே மிகவும் இளையவரான ஜீவன் தொண்டமான் மற்றொருவர் மொட்டுக் கட்சியின் பவித்ரா வன்னியாராச்சி. இருவரும் முன்னர் ராஜபக்ச அமைச்சரவையில் இருந்தவர்கள்.



ஜீவன் தொண்டமான் இப்போது நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வளர்ச்சித்துறைக்கான அமைச்சராக பொறுப்பேற்றுள்ளார். முன்னர் கோட்டாபய ராஜபக்ச ஆட்சியில் அவர் தோட்ட வீடமைப்பு மற்றும் சமூக உட்கட்டமைப்பு ஆகிய துறைகளிற்கு அமைச்சராக இருந்தார்.

அண்மைக்காலமாக அவர் தன்னை அமைச்சராக்கும்படி தொடர்ந்து ஜனாதிபதி ரணிலும் வேண்டி அழுத்தம் கொடுத்து வந்தார் என்று உள்தகவல்கள் கூறுகின்றன.

சற்று பின்னோக்கிப் பார்ப்போம். கடந்த ஆண்டு (2022) மே மாதம் ஜீவன் தொண்டமான் ராஜபக்சக்களுடனான தமது 15 ஆண்டுக்கால உறவை முடித்துக் கொள்வதாக வெளிப்படையாக அறிவித்தார். கோட்டாபய அரசில் மக்களில் சொல்லொணா துன்பங்களிற்கு ஆளாகியுள்ள நிலையில் தாம் பதவியில் இருக்க வேண்டிய அவசியம் இல்லை என்று அறிவித்தார்.

ஆனால், இப்போது அதே ராஜபக்சக்களின் பின்புலத்தில், மொட்டுக் கட்சியின் தயவில் இயங்கும் அரசில் அவர் அமைச்சர் பொறுப்பை ஏற்றுள்ளார். 15 மாதங்களிற்கு முன்னர் சொன்னதெல்லாம் காற்றோடு போயாச்சு.

"அரசியலில் இதெல்லாம் சாதாரணமப்பா" என்று சூரியன் திரைப்படத்தில் வரும் ஒற்றை வரி வசனம் எக்காலத்திற்கும் எந்நாட்டிற்கும் பொருந்தும்.

ஆக சேவலிற்கு தை பிறந்தவுடன் வழி பிறந்துள்ளது. கூரைக்கு மேல் பறக்க முடியாத சேவல் இன்று யானையின் மேல் பலருடன் அமர்ந்துள்ளது. ஆனால் யானையே மொட்டின் பலத்தில் தான் நிற்கிறது என்பதை சேவல் அறிந்துள்ளதா?



இலங்கையில் அடிப்படை அதிகார அலகான உள்ளூராட்சி சபைகளிற்கான தேர்தல் திகதிகள் அறிவிக்கப்பட்டிருந்தாலும், அவை உறுதியாக நடைபெறுவதில் பல கேள்விகள் உள்ளன. இந்நிலையில் அந்த அடிப்படை அதிகார அலகில் தமது ஆளுமை மற்றும் அதிகாரத்தைக் காட்டுவதற்கு கட்சிகள் தயாராகி வருகின்றன. அதற்கு கூட்டணிகள் முக்கியமென்று கட்சிகள் கருதுகின்றன. கடந்த பொதுத் தேர்தல் காலத்தில் ஐக்கிய (மில்லாத) தேசியக் கட்சி தனது யானை பலத்தை இழந்து அரசியல் அரங்கில் பரிதவித்து வருகிறது. அரசியல் அனுபவம் மிக்க ரணில் உள்ளூராட்சித் தேர்தல்கள் மூலம் கட்சியை பலப்படுத்த விழைகிறார். அதே போன்று சேவலும் மிகவும் நலிந்த நிலையில் உள்ளது. பதவி இல்லாமல் சேவல் ஊட்டச்சத்தின்றி காணப்படுகிறது. யானைக்கு கிடைக்கும் சோளப் பொரியில் தனக்கும் ஏதாவது மிஞ்சும் என்பது சேவலின் கணக்காக உள்ளது.

நீரின்றி மீன் உயிர்வாழ முடியாது என்பது போன்று தொண்டமான்களிற்கு பதவியின்றி அரசியல் செய்ய முடியாது என்பதே யதார்த்தம் என்பது நாட்டிலுள்ள அனைவரும் அறிந்ததே. பெற்ற பதவிகள் மூலம் பெரியவர் தொண்டமான் தொடக்கம் ஜீவன் தொண்டமான் வரை மக்களிற்கு சில நன்மைகளைச் செய்துள்ளார்கள் என்பதையும் மறக்க முடியாது.

இலங்கையின் அரசியல் வரலாற்றில் ஐக்கிய (மில்லாத) தேசியக் கட்சிக்கும்-இலங்கை தொழிலாளர் காங்கிரஸிற்கும் நெருக்கமான உறவே இருந்துள்ளது. பெரியவர் சவுமியமூர்த்தி தொண்டமானை 1978இல் ரணிலின் அரசியல் குரு மற்றும் மாமாவான ஜே ஆர் ஜெயவர்தன அமைச்சராக்கினார். தான் அமைச்சராக பொறுப்பேற்க பல காரணங்கள் இருந்தாலும், அதற்கான முக்கிய காரணம் ஜெ ஆர் ஜெயவர்தன என்று 4 செப்டம்பர் 1978 அன்று செய்தியாளர் ஒருவருக்கு அளித்த பேட்டியில் கூறியிருந்தார். அதுவும் அமைச்சரவை அந்தஸ்துள்ள பொறுப்பு அவருக்கு அளிக்கப்பட்டது.

அதன் மூலம் "தலைவர்" தொண்டமான் என்று தோட்ட மக்களால் அழைக்கப்பட்டவர் "அமைச்சர்" தொண்டமான் என்று அழைக்கப்படும் நிலை உருவானது. இன்னும் சற்று பின்னோக்கிப் பார்த்தால் 1947 ஆம் ஆண்டு முதலே ஐ தே க மற்றும் இ தொ கா விற்கும் இடையே அரசியல் நல்லுறவு இருந்து வந்துள்ளது. பெரியவர் தொண்டமானிற்கு பிறகு அவரது பேரனும் அரசியல் வாரிசு என்று கருதப்பட்ட ஆறுமுகன் தொண்டமான் "அமைச்சர் பதவி மூலம் மக்கள் தொண்டு" என்கிற கொள்கையை தொடர்ந்து முன்னெடுத்தார்.



பன்னெடுங்காலமாக இந்த இரு கட்சிகளிடையே இருந்த உறவில் 2004 ஆம் ஆண்டு காலப்பகுதியில் உரசல் ஏற்பட்டு அது விரிசலாகி பின்னர் கசந்து போனது. ஆனாலும் ஆறுமுகன் தொண்டமானின் அகால மரணத்தை அடுத்து அவரது மகனும் தொண்டமான் குடும்பத்தின் அரசியல் வாரிசுமான ஜீவன் தொண்டமான கடந்த நாடாளுமன்ற தேர்தலில் நுவரேலியா மாவட்டத்தில் போட்டியிட்டு வெற்றிபெற்றார். பின்னர் கோட்டா அமைச்சரவையில் இடமும் பெற்றார்.

ஜெ ஆர் ஜெயவர்தன ஆட்சிக் காலத்தில் 1977க்கு பிறகு 1989 ஆம் ஆண்டே பொதுத் தேர்தல் நடைபெற்றது என்பது வரலாறு. அப்போது நுவரெலியா மாவட்டத்தில் இ தொ கா வேட்பாளர்கள் அனைவரும் தோல்வியடைந்தனர். ஆனால் அரசியல் உறவு காரணமாக ஐ தே க தமது தேசிய பட்டியல் இடங்களில் இரண்டை அவர்களுக்கு அளிக்க பெரியவர் தொண்டமானும், தேவராஜும் நாடாளுமன்றம் சென்றனர். அமைச்சுப் பதவியும் பெற்றனர். அதே அமைச்சரவையில் ரணில் இருந்தார். பின்னர் 1993 ஆம் ஆண்டு ரணசிங்க பிரேமதாச விடுதலைப் புலிகளால் கொல்லப்பட- பிரதமராக இருந்த விஜேதுங்க ஜனாதிபதியானார். இதையடுத்து ரணில் பிரதமராக தொண்டமான் தலைமையிலான இ தொ கா ஆதரவளித்தது. 1994 ஆம் ஆண்டு தேர்தலிலும் ஐ தே க-இ தொ க உறவு தொடர்ந்தது. தேர்தலுக்குப் பின்னர் சந்திரிகா அம்மையார் தலைமையிலான கூட்டணிக்கு சேவல் ஆதரவுதர பெரியவர் தொண்டமான் மீண்டும் அமைச்சரானார்.

அரை நூற்றாண்டு காலம் மலையகம் மற்றும் தேசிய அரசியலில் ஆளுமை செலுத்திய பெரியவர் தொண்டமான் 1999 ஆண்டு காலமானதை அடுத்து இ தொ க வின் தலைமைப் பொறுப்பு ஆறுமுகன் தொண்டமானிடம் வந்தது. ஆறுமுகன் தொண்டமானும் அரசியலும்-அமைச்சுப் பதவியும் இணை பிரியாதது என்ற கொள்கையை வெற்றிகரமாக முன்னெடுத்தார். பதவியில் இருந்தால் அதிகாரம், அதன் மூலம் ஆளுமை, அந்த ஆளுமையின் காரணமாக தோட்ட மக்களைத் தொடர்ந்து அடிமைகளாக வைத்திருக்க முடியும் எனும் எண்ணம் தொண்டமான்களிடம் இன்றளவும் உள்ளது என்கிற விமர்சனம் தொடர்ச்சியாக இருந்து வருகிறது.



இருந்த போதும் 2004 ஆம் ஆண்டு தேர்தலின் பின்னர் சேவலிற்கும்-யானைக்கும் இடையேயான உறவு கசந்தது. ஆறுமுகன் தொண்டமான் மகிந்த ராஜபக்சவிற்கு ஆதரவான நிலைப்பாட்டை எடுத்தார். பிறகு வந்த தேர்தலில் மகிந்த தலைமையிலான கூட்டணியில் இ தொ க போட்டியிட்டது.

அவருக்கு பிறகு தலைமைப் பதவிக்கு வந்த ஜீவன் தொண்டமான் ராஜபக்சக்களிற்கு பின்னடைவு ஏற்பட்டு வருவதை உணர்ந்த இ தொ க 2022 மே மாதம் மொட்டுக் கட்சியுடன் இனி உறவில்லை என்று கூறி அவர்களுடனான அரசியல் தொடர்புகளை முறித்துக் கொண்டார்.

பிறகு ரணிலுடனான உறவை புதுப்பித்துக் கொள்ளும் வகையில் பிரதமர் பதவியேற்ற போதும் பின்னர் ஜனாதிபதி தேர்தலின் போதும் இ தொ க ஆதரவளித்தது.

இப்போது மீண்டும் அமைச்சர் பதவி. இரட்டை குதிரை சவாரி ஆபத்தானது என்பதை இளம் தொண்டமான் புரிந்துகொள்வது அவசியம்.

# ஒலி அலைகளில் புதுயுகம்

yugam radio & TV

24 மணிநேரமும் உங்களுடன்



நிகழ்ச்சிகளில் பங்குகொள்ள: 416.455.4343, 647.450.4345

தொலைபேசியூடாக நிகழ்ச்சிகளைக் கேட்க

416.623.8110

647.450.4345

இணையம்

www.yugamradio.com

www.webyugam.com



கணபதி ரவீந்திரன் 416 – 898 – 7284

Yugam Media Inc

2900 Markham Rd Unite U21, Toronto ON M1X 1E6

(Markham & McNicoll)

Tel: 416-297-5002


## வன்னிச் சங்கம் - கனடா.

## VUnited Care for Kids Inc.

Organization – Reg # 1913383. Charitable Organization.

Head office address: 8-3500 McNicoll Ave, Toronto (ONT), M1V4C7.

Secretary@vcarekids.org info@vcarekids.com 416-644-1113.

21-12-2022.

அனைத்து பொதுச்சபை உறுப்பினர்களுக்கும்,

VUnited Care For Kids Inc Ontario ( வன்னிச் சங்கம்.)

அன்புடையீர்!

**பொதுச்சபை உறுப்பினர்களுக்கு விளக்கமளிக்கும் பொச்சபைக் கூட்டம் 2023.**

சமகாலத்தில் VUnited Care For Kids Inc Ontario பற்றிப் பலவிதமான குற்றச்சாட்டுக்கள் கனேடிய தமிழ்ச் சமூகத்தின் மத்தியில் தவறாக முன்வைக்கப்பட்டு வருகின்றது. இவ்வமைப்பினது நன்மதிப்புக்கு களங் கம் ஏற்படுத்தப்பகின்றது. இவ்வாறு எங்கள் சமூகத்தவர்மத்தியில் தவறாக முன்வைக்கப்படுகின்ற கருத்துக்கள் அனைத்துக்கும் ஆதாரங் களுடனான விளக்கங்களைத் தருவதற்காக இப் பொதுக்கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. எனவே தாங்கள் அனைவரும் இக் கூட்டத்தில் தவறாது கலந்து கொண்டு உங்கள் ஐயப்பாடுகளைத் தெளிவுபடுத்திக் கொள்வதோடு உங்கள் கருத்துக்களையும், ஆலோசனைகளையும் எங்களுக்கு வழங்குமாறு அன்போடு கேட்டுக் கொள்கின்றோம்.

இடம்: 8-3500 McNicol Rd, Scarborough (ONT). காலம்: தை 28, 2023 மாலை 2.00 மணி.(சனிக்கிழமை)

To all members of the General Assembly.

VUnited Care For Kids Inc Ontario ( வன்னிச் சங்கம்.)

Dear all!

General Meeting for explanations among members of the General Assembly.

Currently, many allegations are being made about VUnited Care For Kids Inc Ontario among the Canadian Tamil community. Thus, the reputation of this organization is constantly being tarnished. This public meeting is to provide evidence explanations to all the misrepresented propaganda in our society. All members should participate and raise your questions and advice please.

Place: 8-3500 McNicol Rd, Scarborough (ONT). Time: January 28, 2023, மாலை 2.00 மணி. (Saturday)

Thank you.

| | |
|---|---|
| Mr. R. Sivakumaran | Mr. P. Sivasuthan |
| President | Secretary |
| VUnited Care For Kids Inc On | VUnited Care For Kids Inc On |

குறிப்பு: 2022ம் ஆண்டுக்கான சந்தாப்பணத்தினைச் செலுத்தாத அங்கத்தவர்கள் தை 15, 2023ம் திகதிக்கு முன்னதாக பொருளாளருடன் தொடர்பு கொண்டு அதனைச் செலுத்தியபின் இக் கூட்டத்தில் கலந்துகொள்ளமுடியும் என்பதனைக் கவனத்தில் கொள்ளவும்.


30 வருடங்களுக்கு மேலாக கனடிய தமிழர்களின் நம்பிக்கைக்கு பாத்திரமாக விளங்கும் வெற்றிகரமான வர்த்தக நிறுவனம்

# ஸ்காபுறோ சங்கர் அன் கோ

இறக்குமதியாளர்கள், மொத்த சில்லறை விற்பனையாளர்கள், தினமும் மலிவு விலையில் நீங்கள் விரும்பும் அனைத்தும் பெற்றுக் கொள்ளலாம்.

## இனிய புத்தாண்டு மற்றும் தைப்பொங்கல் நல்வாழ்த்துக்கள்

Tasty தமிழா

TASTY தமிழா தயாரிப்புகள் இங்கு கிடைக்கும்

Summer Special : கோடையில் வீட்டுத் தோட்டத்திற்கு தேவையான ஊர் மண்வெட்டி, பிக்காசு மற்றும் வேம்பு, வாழை, மல்லிகை மரக்கன்றுகள், மரக்கறி விதைகள் இன்னும் பல...



உங்கள் வீட்டு குழந்தைகளுக்கு ஆரம்பக் கல்விச்செல்வத்தை ஊட்ட வர்ணங்களில் பாடப்புத்தகங்கள்

யாழ்ப்பாணத்திலிருந்து தருவிக்கப் பெற்ற திருக்கணித பஞ்சாங்கம் மற்றும் பஞ்சாங்கம்

மண்சட்டிகள், மட்பானைகள், மண்அடுப்புக்கள், மண்கூசாக்கள், மின் தேங்காய் துருவி அனைத்தும் இங்கு கிடைக்கும்.

இல்லத்தரசிகளின் சமையலறைக்குத் தேவையான Rice Cookers, Grinding Machines, Rotty Makers, Sumeet, Preeti, Premier, Chef Mastrer Makes ஆகிய பல மின்சார உபகரணங்கள் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்துள்ளோம். மலிவான விலைகளில் பெற்றுக் கொள்ளுங்கள்.



காலை 8.30 முதல் இரவு 9.00 மணிவரை வாரத்தில் 7 நாட்கள் திறந்திருக்கும்

# SHANKAR & CO

2425, Eglinton Avenue East. Unit 6, Scarborough.Ont. M1K 5G8

Tel: 416 759 5100 / 416 759 4916 (Kennedy & Eglinton)

# அன்பின் தொனி - 677

பாஸ்டர் அல்பிரட் சொருபிம் (மீட்பர் கிறிஸ்து சபை - பிரம்டன்)

**படைப்புகளை வணங்காதே -** Worship not the Creations

**உன்னை படைத்தவரை வணங்கு -** Worship your Creator

**பாவ மன்னிப்பும் இரட்சிப்பும்**

பாவ மன்னிப்பைக் குறித்தும், இரட்சிப்பைக்குறித்தும் பரிசுத்த வேதாகமம் விபரமாகவும் விளக்கமாகவும் கூறியிருப் பதை இங்கு கவனிக்கலாம்: தன் பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடையமாட்டான், அவைகளை அறிக்கை செய்து விட்டுவிடுகிறவனோ இரக்கம் பெறுவான். **- நீதிமொழிகள் 28: 13**

நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம் மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார். **- 1 யோவான் 1: 9**

என்னவென்றால், கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினாலே அறிக்கையிட்டு, தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று உன் இருதயத்திலே விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவாய். நீதியுண்டாக இருதயத்திலே விசுவாசிக் கப்படும், இரட்சிப்புண்டாக வாயினாலே அறிக்கைபண்ணப்படும். அவரை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் வெட்கப் படுவதில்லையென்று வேதம் சொல்லுகிறது. **- ரோமர் 10: 9-11**

தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார். உலகத்தை ஆக்கினைக்குள்ளா கத்தீர்க்கும்படி தேவன் தம்முடைய குமாரனை உலகத்தில் அனுப்பாமல், அவராலே உலகம் இரட்சிக்கப்படுவதற் காகவே அவரை அனுப்பினார். அவரை விசுவாசிக்கிறவன் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படான், விசுவாசியாத வனோ, தேவனுடைய ஒரேபேறான குமாரனுடைய நாமத்தில் விசுவாசமுள்ளவனாயிராதபடியினால், அவன் ஆக்கி னைத் தீர்ப்புக்குட்பட்டாயிற்று. **- யோவான் 3: 16-18**

மேலே கொடுக்கப்பட்ட வேத வசனங்களின்படி இரட்சிப்பு ஒவ்வொரு மனிதனும் தன் பாவங்களுக்காக மனஸ்தாபப் பட்டு தனது பாவங்களை அறிக்கையிட்டு, ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை தனது சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ளும் ஒரு தனிப்பட்ட அனுபவம். இரட்சிப்பைப் பெறுவதற்கான வழியிலே ஒருவரை நாம் வழி நடத்தலாமே தவிர, அவருக்காக நாம் இரட்சிப்பைப் பெற்றுக்கொடுக்க முடியாது என்பது சத்தியம். இந்தச் சத்தியத்தை சரிவர அறிந்துவிட்டால் நாம் எமது சுய சிந்தையிலே நடக்கமாட்டோம்.

**இயேசுவின் கட்டளை**

அப்பொழுது இயேசு சமீபத்தில் வந்து, அவர்களை நோக்கி: வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீ'ராக்கி, பிதா குமாரன் பரிசு த்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்டயாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம்பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் என்றார். ஆமென். **- மத்தேயு 28: 18-20**

பின்பு, அவர் அவர்களை நோக்கி: நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள். விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான், விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளா கத்தீர்க்கப்படுவான். விசுவாசிக்கிறவர்களால் நடக்கும் அடையாளங்களாவன: என் நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்துவார்கள், நவமான பாஷைகளைப் பேசுவார்கள், சர்ப்பங்களை எடுப்பார்கள், சாவுக்கேதுவான யாதொன்றைக் குடித்தாலும் அது அவர்களைச் சேதப்படுத்தாது, வியாதிஸ்தர்மேல் கைகளை வைப்பார்கள், அப்பொழுது அவர்கள் சொஸ்தமாவார்கள் என்றார். இவ்விதமாய்க் கர்த்தர் அவர்களுடனே பேசினபின்பு, பரலோகத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, தேவனுடைய வலதுபாரிசத்தில் உட்கார்ந்தார். அவர்கள் புறப்பட்டுப்போய், எங்கும் பிரசங்கம்பண்ணினார்கள். கர்த்தர் அவர்களுடனேகூடக் கிரியையை நடப்பித்து, அவர்களால் நடந்த அடையாளங்களினாலே வசனத்தை உறுதிப் படுத்தினார். ஆமென். **- மாற்கு 16: 15-20**

இரட்சிப்பு என்பது ஒருவர் தான் உயிரோடு இருக்கும்போது அடையவேண்டிய ஒரு நிலை என்பதை மேலே கொடுக்கப் பட்ட வேத வசனங்கள் தெளிவுபட கூறியிருப்பதையும், இயேசு தாமே இரட்சிப்பிற்கான வழியை எமக்கு ஏற்படுத்தித் தந்ததோடு, அதை கடைப்பிடிக்கும்படி கட்டளையிட்டிருப்பதையும் நாம் காணலாம். இப்படியாக தேவ வார்த்தை எமக் குக் கற்பிக்கும்போது அதற்கு மாறாக நாம் செயற்படுவது முழுத் தவறு என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். இந்த வசனங்களின் அடிப்படையில் மரித்துப் போனவர்களுக்காக உயிரோடு இருப்பவர்கள் ஞானஸ்நானம் பெறுவது தவறு என்பதையும், ஏற்றுக்கொள்ள முடியாத ஒரு போதனை என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

**ஒருபால் திருமணம் -** Same sex marriage

இன்று நாம் காண்கிறதும் வாழ்கிறதுமான இந்த உலகத்தைப் படைத்த தேவாதி தேவன், சகல வஸ்த்துக்களையும் படைத்து, கடைசியாக தமது சாயலாக மனுஷனைச் சிருஷ்டித்து ஆணும் பெண்ணுமாக உருவாக்கி அவர்கள் பலு கிப் பெருகி, படைப்புகளின் பலவற்றையும் ஆளுகைசெய்யும்படி ஆசீர்வதிதார் என்பதை, பரிசுத்த வேதாகமத்திற் கூடாகப் படிக்கிறோம், அதையே இவ்வுலகில் கடந்துபோன காலங்களுக்கூடாக கண்டும் வருகிறோம். இப்படி ஆணும் பெண்ணுமாகப் படைத்த இருவரையும் கணவன் மனைவி என்ற உறவோடு இசைந்து ஒரே மாமிசாக ஜீவக்க கட்டளை யிட்டார். இங்கு தேவன்தாமே முதலாவது திருமண வாழ்க்கையை ஏற்படுத்தினார் என்பதை எந்தவித ஐயமுமின்றி நாம் பரிசுத்த வேதாகமத்தில் காணக்கூடியதாய் இருக்கிறது.

**தொடரும்...**



கடன் அட்டைத் தொல்லைகளிலிருந்து விடுதலை

NEW LIFE FRESH START

வங்கிக் கடன்களில் 80% வரையிலான கழிவு

Reduce your debts upto 80%

கடன் அட்டை, வங்கிக் கடன்களுக்கு விதிக்கப்பட்ட சகல வட்டிகளும் நிறுத்தப்படும்
Stop all interest on your debts

கடன் தொடர்பாக விடுக்கப்படும் தொலைபேசி அழைப்புகள், சம்பளப் பறிமுதல் போன்ற சட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்படும்.
Stop collection calls, Court action & Wage garnishments

உங்கள் சொத்துகள், முதலீடுகள் பாதுகாக்கப்படும்
Protect all your assets (House, Car, RRSP, RESP, TFSA, GIC)

மாதாந்த ரீதியில் ஒரே கட்டுப்பணத்தில் எல்லாக் கடன்களையும் தீர்க்க வசதி செய்தல்
Make one monthly payment to all of your creditors

வங்குரோத்துக்கு செல்லாமல் தீர்வு ஏற்பாடு செய்யப்படும்
Give you solutions without Bankruptcy



Suren Sornalingam
Post Graduate Diploma in Business Management
Government Registered (BIA) Insolvency Counsellor
Member of Canadian Insolvency Foundation

crc
CREDIT RECOVERY CANADA
10 Milner Business Court -Unit 300
Scarborough ON M1B 3C6

Tel: 647-274-2832
Fax: 416-332-0914
www.creditrecoverycanada.com

# இவ்வார ராசிபலன்

## 20-01-2023 வெள்ளி தொடக்கம் 26-01-2023 வியாழன் வரையும்




**மேஷம்:** பணப்புழக்கம் சீராகும் வாரம். மூத்தோர் மனகுறை அகலும். நினைத்ததை சாதித்துக் காட்டுவீர்கள். கணவன், மனைவி உறவில் ஒற்றுமை வளரும். கடன் கச்சைகள் தீரும். மனஅமைதி கூடும். இல்லத்தில் மகிழ்ச்சியும், மன அமைதியும் கூடும். விரக்திகள் மறையும். உறவினர் வழியால் செலவு அதிகரிக்கும். ஞாபகமறதி ஏற்படும். பேச்சில் நிதானம் தேவை. திருமண வாய்ப்பு கூடி வரும். திடீர் லாபம் உண்டு. மனக்குழப்பம் நீங்கும். மற்றவர் உதவி கிட்டும். புதிய நட்பு உருவாகும். நீண்ட நாள் கனவு நிறைவேறும். வெளியூர் பயணம் உண்டு. தேக ஆரோக்யம் கூடும். வழக்கு முடிவுக்கு வரும். தொழில் லாபம் பெருகும். பணியில் கண்டிப்பு அவசியம். பழைய நண்பரை சந்திக்க நேரிடும். புதிய சிந்தனை உருவாகும். வேலைபளு கூடும். உற்சாகம் களைகட்டும். விரும்பியது நிறைவேறும். திருமண தீபம் சுடர்விடும். பணம் புரளும். எதிலும் வெற்றி கிட்டும். ஏற்றம் அதிகமாகும். குடும்பத்தில் மகிழ்ச்சி பெருகும். கடன் பாக்கிகள் வசூலாகும். வரவுகள் திருப்தி தரும். வாகன யோகம் உண்டு.

வழிபட வேண்டிய தெய்வம்: நவதேவதை, அதிர்ஷ்ட எண்: 4,2,3,9
அதிர்ஷ்ட நிறம்: மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Q,X




**ரிஷபம்:** உதவியும், பதவியும் கிடைக்கும் வாரம். மனிதநேயம் மிகுதியாகும். பழைய பாக்கி வசூலாகும். வணிகத்தொழில் வளம் கூடும். உறவினர் வருகை உண்டு. உடல்நிலையில் கவனம் தேவை. மனைவியின் அன்பு அதிகரிக்கும். சாதக சூழ்நிலைகள் உருவாகும். உதவும் குணம் உண்டு. பழையக் கடன் தீரும். புதிய நட்பு உருவாகும். பேச்சில் நிதானம் தேவை. விபரீத எண்ணம் விலகும். செயல்பாட்டில் தீவிரம் கூடும். உரிய நேரத்தில் உதவிகள் கிடைக்கும். புதிய முதலீடுகளில் கவனம் தேவை. இனம்புரியா சந்தோஷம் மனதில் குடிக்கொள்ளும். ஆலோசனைகளால் ஆதாயம் உண்டு. கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். இடமாற்றம் நன்மை தரும். குடும்பத்தினர்களிடம் அனுசரிப்பு கிட்டும். பெரியோர்களின் வாழ்த்துக் கிட்டும். மதிப்பும், மரியாதையும் உயரும். எதிர்பார்த்த தொகை தாமதமாகும். மங்கல செய்தியால் மனம் மகிழும். அரசு வகையில் அனுகூலம் கிட்டும். குடும்பத்தில் கருத்து வேறுபாடு தோன்றும். தன வரவுகள் தடைபடும். புதிய முயற்சியை தள்ளி போடவும். வங்கி சேமிப்பு உயரும். சூழ்ச்சிகளில் இருந்து விடுபடுவீர்கள். ஆரோக்கியம் சீராகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: வேலவப் பெருமாள், அதிர்ஷ்ட எண்: 2,5,7,9
அதிர்ஷ்ட நிறம்: ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: L,N




**மிதுனம்:** பாராட்டுக்கள் கிடைக்கும் வாரம். தொழில் வளம் கூடும். வழக்குகள் சாதகமாகும். முன்னோர்கள் ஆசீர்வாதம் கிடைக்கும். நீண்ட நாள் முயற்சி நிறைவேறும். கலைத்துறையில் கௌரவம் கூடும். வரவுக்கு மீறிய செலவு ஏற்படும். வாகனத்தால் செலவு ஏற்படும். வெளியூர் பயணம் வெகுமானம் சேர்க்கும். கல்வியில் ஆர்வம் கூடும். விழிப்புணர்ச்சியோடு செயல்படுவது நல்லது. பயணம் வெற்றி தரும். உறவினரால் நன்மை ஏற்படும். மாலை நேரத்தில் மங்கல செய்தி வரும். உத்யோக வாய்ப்புண்டு. கூட்டுத்தொழில் லாபம் தரும். விவசாயம் பலன் தரும். வழக்குகள் சாதகமாகும். காதல் கசக்கும். கல்வியில் கவனம் தேவை. இடமாற்றம் உண்டு. தடுமாற்றம் ஏற்படும். திருத்தமான முடிவு ஏற்படும். வருத்தங்கள் மறையும். விளையாட்டுத்துறையில் வெற்றிக்கிட்டும். மனமகிழ்ச்சி அதிகரிக்கும். குழந்தைகளால் பெருமை சேரும். சகோதரியால் அனுகூலம் உண்டு. வில்லங்கம் விலகும். போட்டிகள் உருவாகி மறையும். வீடு வாங்கும் யோகம் உண்டு.

வழிபட வேண்டிய தெய்வம்: பிரகதீஸ்வரர், அதிர்ஷ்ட எண்: 5,9,2,1
அதிர்ஷ்ட நிறம்: கிளிப்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: G,C




**கடகம்:** திட்டமிட்ட காரியம் ஜெயமாகும் வாரம். கவனமுடன் செயல்பட வேண்டும். வெளிநாட்டு நபரால் வெகுமதி கூடும். வெளியூர் பயணம் நன்மை தரும். பாராட்டுக்கள் உயரும். புதிய தொழில் அமையும். திட்டங்கள் எளிதாகும். உணவுத்தொழில் உயர்வு பெறும். பிள்ளைகள் நலனில் அக்கறை தேவை. இசையார்வம் கூடும். குடும்ப பாசம் அதிகரிக்கும். செல்வாக்கு உயரும். பொருளாதாரம் உயரும். நல்லோர்களின் வாழ்த்து உண்டாகும். எதிரிகள் தொல்லை குறையும். தனவரவு அதிகரிக்கும். பணியில் கண்டிப்பு தேவை. வாக்குவாதங்கள் உருவாகும். பெற்றோர்கள் நலனில் அக்கறை தேவை. பிள்ளைகள் வழியில் தொல்லைகள் உண்டாகும். ஆன்மீக சிந்தனை அதிகமாகும். பயணங்களால் இடையூறு ஏற்படும். மறைமுக எதிர்ப்பு விலகும். பொதுவாழ்வில் புகழ் கூடும். தொலைபேசித் தகவல் ஆதாயம் தரும். பூமி வாங்கும் யோகம் உண்டு. கண்ணாடித் தொழில் முன்னேற்றம் தரும். உடல் பொலிவு கூடும். ஆடை, அணிகலன் சேரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: கால பைரவர், அதிர்ஷ்ட எண்: 6,4,3,8
அதிர்ஷ்ட நிறம்: சாம்பல் நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Y,U




**சிம்மம்:** ஆன்மீக எண்ணம் அதிகரிக்கும் வாரம். மறைமுக எதிர்ப்பு விலகும். ஆபரணச் சேர்க்கை உண்டு. குடும்ப கௌரவம் உயரும். சச்சரவுகள் அகலும். இடமாற்றம் நன்மை தரும். புதிய தொழில் தொடங்குவீர்கள். நாட்பட்ட நோய்களுக்கு தீர்வு கிடைக்கும். நினைத்த காரியத்தில் வெற்றி பெறுவீர்கள். பூமி வாங்கும் யோகம் உண்டு. செயல் திறமை அதிகரிக்கும். அரசு வாய்ப்பு தடைப்படும். மனைவி சச்சரவு தீரும். தாய் வழி உறவில் கவனம் தேவை. உடல் நலத்தில் அதிக அக்கறை தேவை. எதிரிகள் பலம் குறையும். நல்லவர் நட்பு கிட்டும். கலைத்துறையில் முன்னேற்றம் கொடுக்கும். பயணம் அனுகூலம் தரும். கூட்டு தொழில் லாபம் தரும். சகோதரியால் அனுகூலம் உண்டு. ஆபரணச் சேர்க்கை உண்டு. விவேகம் அதிகரிக்கும். உல்லாசப் பயணம் இனிக்கும். இயற்கை காட்சிகளைக் கண்டு இன்புறுவீர்கள். பண நடமாட்டம் கூடும். வியாபாரத்தில் எதிர்பார்க்கும் லாபம் கிட்டும். சுபகாரியங்கள் இல்லத்தில் இனிதே நடந்தேறும். கணவன், மனைவி உறவு தித்திக்கும். வெளிவட்டார பழக்கம் நலம் தரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: பிரபஞ்ச கடவுள், அதிர்ஷ்ட எண்: 9,1,7,3
அதிர்ஷ்ட நிறம்: இந்திர நீலம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: V,X




ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது! என்ற உறுதியோடு உங்கள்
'ராஜயோகம்'
Dr. K. RAM.Ph.D (USA)
தொடர்புக்கு: 0091-9840160068 / 9940431377





**கன்னி:** வருமானம் சேரும் வாரம். ஏற்றுமதி தொழில் லாபம் தரும். பெற்றோர் உடல்நிலையில் கவனம் தேவை. திருமண முயற்சி பலன் தரும். உறவினர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். அரசு வழியில் கவனம் தேவை. பொது விஷயங்களில் நாட்டம் கூடும். காதலர்களுக்குள் மனக்கசப்பு ஏற்படும். பிரிந்த குடும்பம் ஒன்று சேரும். விவசாயிகள் பயன்பெறுவார்கள். சகோதர வழியில் கவனம் தேவை. தர்ம சிந்தனைகள் மேலோங்கும். மாணவர்களுக்கு கல்வியில் ஆர்வம் கூடும். விளையாட்டுத் துறையில் ஆர்வம் அதிகரிக்கும். பங்குச் சந்தையில் பணம் புரளும். சொல்வாக்கு மேம்படும். செல்வாக்கு கூடும். பெருமைகள் சேரும். பெண்களால் பெருமை உண்டு. எதிர்ப்புகள் மாயமாய் மறையும். கணவரிடத்தில் மதிப்பு உயரும். குழப்பங்கள் அகலும். மருத்துவ செலவு அதிகரிக்கும். உத்தியோகத்தில் உயர்வு கிடைக்கும். ஆடம்பர பொருள் சேரும். நண்பர்கள் சந்திப்பு கிட்டும். வார்த்தைகளில் நிதானம் தேவை. வாய்ப்புக்கள் சாதமாக அமையும். தெய்வப்பணிகளில் ஈடுபாடு அதிகரிக்கும். பதவி உயர்வு தாமதமாகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: மாசாணியம்மன், அதிர்ஷ்ட எண்: 7,9,1,2
அதிர்ஷ்ட நிறம்: குங்கும கலர், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: K,T




**துலாம்:** பெருமைகள் சேரும் வாரம். சுபவிரயம் ஏற்படும். பூர்வீக சொத்துக்கள் விற்பனையாகும். விலகி சென்றவர் திரும்பி வருவர். திருமண பேச்சு முடிவுக்கு வரும். வரவு திருப்தி தரும். மருத்துவச் செலவுகள் குறையும். உறவினர் வருகையால் கலகலப்பு கூடும். கடன் விஷயத்தில் விடுதலைப் பெறுவீர்கள். செயல்களில் கவனமுடன் இருக்க வேண்டும். வறுமைகள் அகலும். மதிப்பு உயரும். மாற்று இனத்தவர் வாழ்வு கிட்டும். மகான்களின் சந்திப்பு கிட்டும். பெற்றோர் வழி மருத்துவச் செலவு உண்டு. கணவன், மனைவி கௌரவம் உயரும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். சுறுசுறுப்பு அதிகமாகும். ஆரோக்யம் சீராகும். எதிரிகள் ஏமாற்றம் அடைவர். உத்தியோகத்தில் உற்சாகம் கூடும். கலகலப்பான செய்திகள் வந்து சேரும். வீட்டுத்தேவைகள் பூர்த்தியாகும். டிரான்ஸ்போர்ட் தொழில் லாபம் தரும். குடும்பத்தில் மேன்மை உண்டு. வியாபாரம் திருப்தி தரும். விரக்திகள் விலகும். பணியாட்கள் ஆதரவு அதிகமாகும். பாதகமான சூழ்நிலைகள் விலகும். மனஅமைதி சீர்குலையும். மறைமுக எதிர்ப்பு வலுபெறும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீபத்ரகாளியம்மன், அதிர்ஷ்ட எண்: 2,9,7,8
அதிர்ஷ்ட நிறம்: யானை நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: N,L




**விருச்சிகம்:** பெண்களால் ஆதாயம் கிடைக்கும் வாரம். வாகன மாற்றம் உண்டாகும். மனஅமைதி சீர்குலையும். மறைமுக எதிர்ப்பு வலுபெறும். பயணங்களால் இடையூறு ஏற்படும். ஆன்மீக சிந்தனை அதிகமாகும். பிள்ளைகள் வழியில் இன்பம் உண்டாகும். பெற்றோர்களிடத்தில் சமாதானம் கிடைக்கும். பழையக் கடன் தீரும். தேக ஆரோக்கியம் மிளிரும். உடன்பிறப்பால் நன்மை உண்டு. நிர்வாகச் செலவுகள் கூடும். வாய்ப்புகள் வந்து சேரும். வழக்குகள் சாதகமாகும். உத்தியோகத்தில் ஒற்றுமை நிலவும். உடல் உஷ்ணம் வந்து போகும். அச்சுத்தொழில் ஆதாயம் தரும். திருப்புமுனை ஏற்படும். பொருளாதார சிக்கல் நீடிக்கும். வியாபாரத்தில் கவனம் தேவை. வர்த்தக தொழில் லாபம் தரும். பிரியமானவர்களைச் சந்திப்பீர்கள். மகான்களின் சந்திப்பு கிட்டும். வேண்டாத விஷயங்கள் விலகும். குடும்ப ஒற்றுமை மேலோங்கும். போக்குவரத்தில் கவனம் தேவை. மன சஞ்சலம் ஏற்படும். ஆடை, அணிகலன்கள் சேரும். ஸ்டேஷனரி தொழில் லாபம் தரும். கால்நடைகளால் பலன் உண்டு. கன்னிப்பெண்களுக்கு சுபச்செய்தி வரும். பிரபல்ய ஆசை ஏற்படும். மரத்தொழில் லாபம் தரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: கோணியம்மன், அதிர்ஷ்ட எண்: 7,3,0,2
அதிர்ஷ்ட நிறம்: அடர்ந்த சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: R,M




**தனுசு:** சாதனை படைக்கும் வாரம். முத்தான வாய்ப்புகள் பெருகும். மெத்தனப் போக்கு மாறும். பயணம் வெற்றி தரும். சுறுசுறுப்புடன் செயல்படுவீர்கள். இனிதான செய்திகள் தேடி வரும். நினைத்த காரியம் வெற்றி பெறும். பொன்னான நேரம் உங்களை வந்து அடையும். பிள்ளைகளிடத்தில் உள்ள அன்பு அதிகரிக்கும். மனதில் சந்தோஷம் அதிகரிக்கும். புதிய எண்ணம் உருவாகும். தொழில் லாபம் கூடும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். பெண்கள் கவனம் தேவை. மருத்துவ செலவு உண்டு. மாற்று இன உதவி கிட்டும். புதிய சொத்து சேரும். மருத்துவர்களுக்கு நற்பெயர் கிட்டும். வழக்கு முடிவுக்கு வரும். பிள்ளைகளால் தொல்லை உண்டாகும். பால்ய நண்பரை சந்திக்க நேரிடும். ஏற்றமும், மாற்றமும் அதிகரிக்கும். பக்குவமான பேச்சு பயன் தரும். பாதகமான சூழ்நிலை அகலும். மனை வாங்கும் சிந்தனை உதயமாகும். தொலைபேசித் தகவல் தொல்லை தரும். செயல் விவேகம் கூடும். குளிர்பானத் தொழில் கவனம் தேவை. பிராணிகளால் தொல்லை ஏற்படும். பல்வலி வந்து போகும். வணிகத்தொழில் விரிவடையும். ஆடம்பர நாட்டம் ஏற்படும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஜோதிலிங்கப் பெருமாள், அதிர்ஷ்ட எண்: 2,4,8,7
அதிர்ஷ்ட நிறம்: காவி நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Z,B




**மகரம்:** ஆசைப்பட்ட பொருள் வாங்கும் வாரம். உண்மைகள் வெளிப்படும். பதவி உயர்வு கிட்டும். மனக்கசப்பு நீங்கும். அரசு வழியில் ஆதாயம் கிடைக்கும். கணினி துறையில் ஊதிய உயர்வு உண்டு. சகோதரியினால் நன்மை உண்டு. உடல்நலம் மேம்படும். புதிய முதலீடு தவிர்க்கவும். கணவன், மனைவி உறவு மேம்படும். தொழில் அபிவிருத்தி அடையும். புதிய வாய்ப்புகள் கிடைக்கும். பிள்ளைகளால் மனக்கசப்பு வந்து நீங்கும். வீடு, மனை ஆசைகள் பூர்த்தியாகும். சிரமப்பட்ட காரியங்கள் நிறைவேறும். சிக்கனத்தை கையாள வேண்டும். அடுத்தவர் தலையீட்டை தவிர்க்கவும். மனநிம்மதி அதிகரிக்கும். கடன் வாங்க நேரிடும். பங்குச்சந்தையில் கவனம் தேவை. வருமானம் திருப்தி தரும். வாகன மாற்றம் உண்டு. மாற்று யோசனை பயன் தரும். மாணவர்களுக்கு படிப்பில் அக்கறை கூடும். புத்திர வகையில் சந்தோஷம் கூடும். நட்டமில்லாமல் திட்டங்கள் நிறைவேறும். ஆன்மீக ஈடுபாடு அதிகரிக்கும். புதிய ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவீர்கள். ஆடம்பரச் செலவுகள் அதிகரிக்கும். உத்தியோகப் பெண்களுக்கு பதவி உயர்வு கிடைக்கும். பழைய சம்பள பாக்கிகள் வந்து சேரும். விலை உயர்ந்த பொருட்களில் முதலீடு செய்வீர்கள். பாக்கெட்டில் காசும் குறையும். பந்தாவும் குறையாது.

வழிபட வேண்டிய தெய்வம்: பகவதி அம்மன், அதிர்ஷ்ட எண்: 7,2,5,1
அதிர்ஷ்ட நிறம்: ஆரஞ்சு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: R,M

(தொடர்ச்சி 29 பக்கம்)

# தமிழ் மரபுத் திங்கள் (நிலைமண்டில ஆசிரியப்பா)

மரபுத் திங்களை மகிழ்வுடன்
கொண்டாட
கரங்கள் கோர்த்தே களத்திலே
இணைவோம்
தமிழனின் பெருமையைத் தரணியில்
இயம்பியே!
அமிர்தத் தமிழை அரியணை ஏற்றுவோம்
உழவர் திருநாளை உலகறியச் செய்தே!
உழவுத் தொழிலுக்கு உன்னதம்
சேர்ப்போம்
பொங்கல் விழாவைப் பொறுப்பாய்ச்
செய்தே!
மங்காத் தமிழன் மரபு காப்போம்
முத்தாய் எமக்கு மூத்தோர் தந்த
முத்தமிழும் மூவேந்தர் கதையும்
சிலம்பும்
ஆய கலைகள் அறுபத்து நான்கையும்
தேய விடாமல் திடமாய்க் காப்போம்
திருக்குறள் தேவாரம் திருவெம்பா
திருக்கோவை
அரும்பெரும் காப்பியம் ஐந்துடன்
ஆத்திசூடி
பருப்பொடு சதிபோல் பாலகர் விரும்பி
கருத்தொடு கற்றிடக் களத்தைக்
கொடுப்போம்.
பாரம் பரிய பண்பாட்டு விழுமியம்
காரம் குறையாக் கண்ணாய்க் காப்போம்
கிட்டிபுள் கிளித்தட்டு கும்மி கோலாட்டம்
சிட்டான சிறார்க்குச் சிந்தையில்
ஏற்றுவோம்
சொக்கட்டான் எட்டுப் பெட்டி சிலம்பம்
கொக்கான் வெட்டுதல் கெந்திப்
பிடித்தல்
பொம்ம லாட்டம் போன்ற செயல்களை
செம்மை குறையாமல் செவிகளில்
சொல்வோம்
பொங்கு தமிழுக்குப் பங்கம் விளைந்தால்
சங்காரம் நிசமென்று சங்கே முழங்கு"
பாரதி தாசனின் பாடல் வரிகளை
பாரெலாம் ஒலித்திட பாதை அமைப்போம்
சோர்விலா இனமாய்த் துலக்கம் பெற்றிட
சாரங்கன் தாள்பணிந்து சபதம்
எடுப்போம்
அதிசயிக்கும் அறிவியலை அன்றே
கொடுத்த
அதிரசமாய் நாவில் அசைந்திடும் தமிழே!
முச்சங்கம் வைத்து முத்தமிழ் வளர்த்த
பச்சைத் தமிழர் பாரினில் நாங்கள்
கதிரோடு ஆடும் கழனி போலவே
சதிராடும் எங்கள் எண்ணத்திற் தமிழே!
அங்கமாய் எம்முள் ஆகிவிட்ட மொழியை
பங்கம் வராமல் பார்த்துக் கொள்வோம்
அக்கரை நாடிருந்து அகதியாய்
வந்தாலும்
இக்கன டாவிலும் தொலைக்கா
இனமேநாம்
நன்னெறியை உலகிற்கு நயந்த
நற்றமிழே!
என்றும் உன்னுடன் இனிமையாய்ப்
பயணிப்போம்
வாழ்க்கையை வகுத்துக் காட்டிய
மொழியை
வீழ்ந்து விடாமல் வீச்சுடன் காப்போம்
எங்களை உலகிற்கு எடுத்துக்
காட்டியது
பங்கமிலா பண்பாடு போற்றும்
பைந்தமிழே!

உலகில் மூத்த மொழியாய் உதிர்த்து
பலரும் போற்றும்
பண்பான மொழியெமதே
எங்கள் தாய்மொழி தமிழென
இயம்புவோம்
சங்கத் தமிழென சந்ததிக்குச்
சொல்வோம்
முத்தாக நாவில் விளையாடும்
முத்தமிழை
சொத்தாக எண்ணிச் சரித்திரம்
படைப்போம்
நித்திரைப் பொழுதுகள் நெருங்கும்
போது
சித்திரக் கதைகளைச் சிறுவர்க்குச்
சொல்வோம்
நமக்கென நாடு இல்லாத போதிலும்
தமிழைத் தொலைக்காத் தலைமுறை
நாங்கள்
வீழாது ஒருநாளும் எங்கள் வீரத்தமிழ்
வாழ்க தமிழினமே வளர்க
தமிழ்மொழியே!

(எல்லா மொழியும் கற்றுக்கொள்
எம்மொழியில் பற்றுக்கொள்.)

**ஆக்கம்... கவிஞர் மார்க்கம் சந்திரன் (416) 844-7453**

## இவ்வார ராசிபலன்

(28 பக்கத் தொடர்ச்சி)




**கும்பம்:** வேண்டாத உறவுகளை தவிர்க்கும் வாரம். விவசாயிகள் கோரிக்கை நிறைவேறும். பிரிந்த குடும்பம் ஒன்று சேரும். வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். உறவினர் வழியில் செலவுகள் அதிகரிக்கும். அரசியல் ஆதாயம் தரும். நீண்ட நாள் பிரச்சனை முடிவுக்கு வரும். கணவன், மனைவி வாக்குவாதங்கள் ஏற்படும். புதிய தொழில் வாய்ப்பு பெருகும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். அயல்நாட்டுப் பயணம் உண்டு. நண்பர்களிடத்தில் எச்சரிக்கை தேவை. உறவுகளால் செலவுகள் அதிகரிக்கும். உத்தியோகத்தில் உயர்வு கிட்டும். மருத்துவச் செலவுகள் குறையும். நட்பு வட்டம் விரிவடையும். விரக்திகள் மறையும். காதலர் ஒற்றுமை அதிகரிக்கும். புத்தி சாதுர்யம் பெருகும். நம்பிக்கை துளிர்விடும். கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். அலைபேசித் தகவல் ஆதாயம் தரும். புது முயற்சிகள் பலன் தரும். நல்லோர்களின் சந்திப்பு கிட்டும். திருப்தி பெருகும். போதாத காலம் விலகும். தோதான எண்ணம் உருவாகும். கடன் தொல்லை தரும். மன சந்தோஷம் அதிகரிக்கும். நண்பர்களால் அலைச்சல் உண்டு. எண்ணிய காரியம் கைகூடும். வீண் செலவு ஏற்படும். புண்ணிய ஸ்தலம் செல்வீர்கள். எலக்ட்ரிக்கல் தொழில் லாபம் தரும். புதிய தொழில் துவங்க வாய்ப்பு உள்ளது. முன்னேற்றம் தரும் காலம்.

வழிபட வேண்டிய தெய்வம்: தர்ம தேவதை, அதிர்ஷ்ட எண்: 1,4,8,3
அதிர்ஷ்ட நிறம்: அடர்ந்த சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: P,Q



**மீனம்:** பிதா வழி உறவு சேரக்கூடிய வாரம். மனோபலம் அகலும். குடும்பத்தில் அமைதி பெருகும். பொருளாதார மேன்மையுண்டு. தொழில் அபிவிருத்தி உண்டாகும். தன வரவில் தடங்கல் உண்டு. புதிய வாய்ப்புக்களை எதிர்பார்க்கலாம். கருத்து வேறுபாடுகள் அகலும். மனைவி உறவு சீராகும். இடமாற்றம் உண்டு. கல்வியில் அக்கறை தேவை. போட்டிகள் அதிகமாகும். அச்சுத்தொழில் ஆதாயம் தரும். சுபகாரியம் தடைப்படாதிருக்கும். பழிச்சொல் நீங்கும். மனவேதனை அதிகரிக்கும். உத்தியோக சோதனை ஏற்படும். இழுபறி நிலை நீங்கும். உறவினர்களால் பாதகம் உண்டு. உஷ்ண நோய் ஏற்படும். புதிய வாய்ப்புகள் தேடி வரும். கடன் வாங்க நேரிடும். அரசு வழி ஆதாயம் கிட்டும். வெற்றிகள் குவியும். பெருமைகள் தேடி வரும். புகழ் அதிகரிக்கும். காதல் கண்ணியம் கூடும். கணவன், மனைவி கௌரவம் அதிகரிக்கும். பணிச்சுமைகள் குறையும். தொலைதூரப் பயணம் உண்டு. இல்லத்தில் நல்லவை நடக்கும். பழையக் கடன் தீரும். சகோதர உறவு பலப்படும். அடுத்த நபரால் தொல்லை உண்டு. எடுத்த காரியத்தில் வெற்றி பெறுவீர். உடல்வலிகளிலிருந்து விடுதலை அடைவீர்கள். புதிய தொழில் வாய்ப்புகள் கூடும். பூர்வீக சொத்து வரும். புத்தாடை ஆபரணம் சேரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: பைரவர், அதிர்ஷ்ட எண்: 4,8,6,3
அதிர்ஷ்ட நிறம்: குங்கும கலர், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: O,Y

## கடந்தவையும் கடப்பவையும் (42)

கண்ணால் காணாத போர்க் களங்களை - கண்
முன்னால் கண்டு வந்ததுபோல் - பல காலத்திற்கு

முன்னாடி புலம் பெயர்ந்து வந்தவர்கள்
சொல்லாத பல சொல்லித் தமைவளர்க்க - அன்று

ஆரென்றும் தெரியாது எவரென்றும் தெரியாது
யார் பெற்ற பிள்ளையோ பாவம் என்று - நிதம்

தாம் செத்த பெரியவர்கள் பலரும் உண்டு.

அன்று,

வல்லிபுர ஆழ்வாரின் தீர்த்த நாள்
வெள்ளணவே ஆலயம் சென்றுவிட்டார் பாட்டி

தாத்தாவும் கூடவே காதில் கேட்ட
நேற்றைய சேதியே நினைவாகப் போயிருக்க

பாட்டிக்கோ மனதெல்லாம் பெரும் பதட்டம் - கண்ணில்
பட்டவர் தெரிந்தவர் ஆகிவிட்டால்

கண்ட இடத்தில் நிறுத்தி அவர் கேட்டாராம்
'என்ன நடந்ததோ அவர்களுக்கு?' என்று

நடுக்கடலில் பிடிபட்டு நஞ்சுண்ட கண்டர்களாய்

அகப்பட்ட அவர்கள்பாடு அந்தரத்தில் என்றறிந்து - அவர்களுக்காய்

ஓடி ஓடி அர்ச்சனைகள் செய்தாராம் - மக்களோடு

கூடி நின்று கும்பிட்டு வெளிவரவே - அவர்களில் பலர்

போய்விட்டார் என்ற சேதி கேட்டதுதான் - அங்கே
வாய் விட்டு அழுத ஓலம் - பின்

நாட்கணக்காய் நீடித்து ஓய்ந்ததுவாம்
ஆட்கள் பலர் கூடிநின்று வணக்கம் செய்த தீருவிலில்

அவர் வயிற்றில் ஆருமே பிறக்கவில்லை - ஏன்
அவருக்கு இத்தனை வருத்தமோ புரியவில்லை? - இப்படி

யாரும் அங்கு கேட்கவில்லை - இறந்தவர்க்கு
யாரும் அங்கு அந்நியமாயும் இருக்கவில்லை

இப்படித்தான் அன்று எத்தனையோ இழப்பு (தொடரும்)

-- உமா மோகன் - Montreal- Canada --

# ஈழத்துத் திருக்கோவில்கள் 1032



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி.வசந்தா நடராசன் B.A.,
(416) 332-0269 vasantha@rogers.com



## தம்பலகமம் ஆதிகோணநாயகர் கோயில்
## திருகோணமலை

"தாயினும் நல்ல தலைவரேன் றடியார்
தம்மடி போற்றிசைப்பார்கள்
வாயினு மனத்து மருவி நின்றகலா
மாண்பினர் காண்பல வேடர்
நோயிலும் பிணியுந் தொழிலர்பால் நீக்கி
நுழைதரு நூலினர் ஞாலம்
கோயிலுஞ் சுனையுங் கடலுடன் சூழ்ந்த
கோணமா மலை யமர்ந்தாரே."

ஈழவளநாட்டிலே, கிழக்குமாகாணத்தில் அமைந்திருக்கும் சிவனுக்குரிய திருக்கோயிலாக, வரலாற்றுப் பெருமை மிக்க திருக்கோணேஸ்வரம் விளங்குகின்றது. திருக்கோணேஸ்வர வரலாற்றோடு தொடர்புடைய கோயில்கள் பல திருகோணமலையிலும், அதனைச் சூழவுள்ள கிராமங்களிலும் காணப்படுகின்றன. இவற்றுள் ஒரு காலகட்டத்தில், திருகோணேஸ்வரத்தில் எழுந்தருளியிருந்த கோணநாயகர், அன்னியரின் ஆதிக்கத்தின் விளைவாக, அழிவினின்றும் பாதுகாக்கப்பட்டு, எழுந்தருளியுள்ள பிரதேசமாகத் தம்பலகமம் என்னும் அழகிய கிராமம் விளங்குகின்றது. இக்கிராமம், தென்னஞ்சோலைகள் சூழ்ந்த இயற்கை அழகுப் பொலிவோடு, வற்றாத நீர்வளத்தைக் கொண்டு, சோழநாடு சோறுடைத்து என்பது போல, தம்பலகமம் பிரதேசமும், செந்நெற் கழனிகள் சூழ்ந்த சைவப்பெருமக்கள் வாழ்கின்ற அழகிய கிராமமாக மிளிர்கின்றது. திருகோணமலைப் பட்டணத்திலிருந்து கண்டிக்குச் செல்லும் நெடுஞ்சாலையில், இருபத்துநாலு கிலோமீற்றர் தூரத்தில் ஒரு கிளைப்பாதை பிரிகின்றது. அங்கிருந்து மூன்று கிலோமீற்றர் தூரத்தில் அமைந்துள்ள தம்பலகமம் கிராமத்தில், ஆதிகோணநாயகர் கோயில் அமைந்துள்ளது. இவ்வாலயத்தின் வரலாறு பஞ்ச ஈஸ்வரங்களுள் ஒன்றாகிய திருக்கோணேஸ்வரத்தின் வரலாற்றோடும், மரபுகளோடும் ஒன்றுபட்டுக் காணப்படுகின்றது.

ஆதிகோணநாயகர் ஆலய வரலாற்றை அறிவதற்கு உறுதுணையாகவுள்ள, திருக்கோணேஸ்வரம் வரலாற்றின் சில செய்திகளைச் சுருக்கமாகத் தெரிந்து கொள்வது அவசியமாகும். திருகோணமலை திருக்கோணஸ்வரத்தில் எழுந்தருளியிருந்து அருளாட்சி செய்த பெருமான், காலநியதிக்கேற்க ஆதிகோணநாயகர் என்னும் திருப்பெயரோடு, தம்பலகமம் கிராமத்தில் எழுந்தருளி அருள்பாலிக்கும் வரலாறு, தொன்மைச் சிறப்புடையதாகக் காணப்படுகின்றது. இக்காரணத்தினாலேயே ஆதிகோணநாயகர் என்பதிலுள்ள ஆதி என்னும் சொல் திருக்கோணேஸ்வரத்தைச் சுட்டுவதாகவே அமைந்துள்ளது. மகாமேரு மலையின் சிகரங்களிலொன்றாகத் திருக்கோணேஸ்வரத்தைப் புராணங்கள் விபரித்துள்ளன. கிறிஸ்து பிறப்பதற்கு 1300 ஆண்டுகளுக்கு முன் கோணேசர் ஆலயம் கட்டப்பட்டது. அதாவது இற்றைக்கு ஏறக்குறைய 3000 ஆண்டுகட்கு முற்பட்ட வரலாற்றை உடையது திருக்கோணேஸ்வரம். புத்தபகவான் பிறப்பதற்கு சுமார் 800 ஆண்டுகளுக்கு முன் இவ்வாலயம் கட்டப்பட்டது. இத்தகவல்கள் போத்துக்கீசரால் அழிக்கப்பட்ட கோணேசர் கோயில் கற்தூண்களில் உள்ள கல்வெட்டுக்களில் காணப்பட்ட செய்தியாகும். குவைரோஸ் பாதிரியார் எழுதிய "கொன்குவிஸ்ரா" என்ற நூலில் இச் செய்திகள் காணப்படுகின்றன. இக்குறிப்பினை கலாநிதி போல் ஈ.பீரிசின் பதிப்பிலும் காணக்கூடியதாயுள்ளது.

போத்துக்கல் நாட்டில் லிஸ்பனில் அமைந்துள்ள அஜூடா நூலகத்திலுள்ள சுவடிகளில், பின்வரும் செய்திகள் காணப்படுகின்றன. மனுராசா அல்லது மாணிக்கராசா என்னும் மன்னன் இலங்கையை ஆண்டதாகவும், அவன் கி.மு 1300 ஆம் ஆண்டு கோணேசர் கோயிலைக் கட்டினான் என்று கூறப்பட்டுள்ளது. இத்தகவல் றோயல் ஏசியாட்டிக் சொசைட்டி வெளியீட்டுத் தொகுதியில் காணப்படுகின்றது. இலங்கையை ஆண்ட மன்னன் இராவணன் திருக்கோணேசர் கோயிலோடு கொண்டுள்ள தொடர்புகளைப் புராண, இதிகாச வரலாறுகள் மூலம் அறியலாம். இந்துக்களின் மகரிஷிகளில் ஒருவராகிய அகத்தியமுனிவர் கோணேஸ்வரத்தை வழிபட்ட குறிப்புக்கள், அகத்தியரின் புராண வரலாறுகளிலே புதைந்து கிடக்கின்றது. அகத்தியரின் வரலாற்றை ஆராய்ந்த வரலாற்றாசிரியர்களின் குறிப்பின்படி, அகத்தியர் காலம் கி.மு 1000 ஆண்டுகட்கு முற்பட்டதாகக் காணப்படுகின்றது.

திருகோணமலையில் பிரடெரிக்கோட்டை வாசலின் இரு பக்கங்களிலுமுள்ள தூண்களில் பாண்டிய மன்னனுடைய இரட்டைமீன் இலச்சினை பொறிக்கப்பட்டுள்ளதை இன்றுங் காணலாம். பாண்டிய மன்னர்கள் 433-460 வரை அநுராதபுரத்திலிருந்து ஆட்சி செய்துள்ளார்கள். இவர்கள் ஆட்சிக்காலத்தில் மனுநீதிகண்ட சோழனின் மகனாகிய குளக்கோட்டு மன்னன் திருகோணமலைக்கு வந்து கோணேசர் ஆலயத்தைப் புனருத்தாரணம் செய்துள்ளதாக யாழ்ப்பாண வைபவமாலையிலே கூறப்பட்டுள்ளது. குளக்கோட்டு மன்னனின் புனருத்தாரணப் பணிக்குச் சான்றாகப் பிரடெரிக்கோட்டை வாசலிலுள்ள கல்வெட்டுப்பாடல் சான்றாகக் காணப்படுகின்றது. இவையாவும் திருக்கோணேஸ்வரத்தின் தொன்மையை எடுத்துக் காட்டுவனவாகக் காணப்படுகின்றன.

இத்தகைய வரலற்றுப்புகழ்மிக்க திருக்கோணேஸ்வரத்தை கி.பி 1624 ஆம் ஆண்டு, போத்துக்கேய தளபதியாகிய கொன்ஸ்ரன்ரைன் டீசா என்பவனுடைய தலைமையிலான படைகள் இடித்தழித்தார்கள். இவ்வேளையில், கோயில் விக்கிரகங்களை எடுத்துக்கொண்டு நாலாபக்கங்களிலும் ஓடிய பக்தர்கள் திருவுருவங்களைக் கிணறு, குளங்களில் போட்டும், நிலத்திலே புதைத்தும் மறைத்தும் வைத்தார்கள். ஆனால், இருபாகை முதன்மைக் குருக்களிற் சிலரும், தானத்தாரும், வரிப்பத்தாரும் சில விக்கிரகங்களை எடுத்துக்கொண்டு, தம்பலகமத்திற்கு மேற்கேயுள்ள சுவாமிமலை என்ற இடத்தில் ஒளித்து வைத்தார்கள். தம்பகமம் வாசிகளிற் சிலர் கிழங்கெடுக்கச் சென்ற சமயம், சுவாமி மலையில் விக்கிரகத்தோடு, செப்பேடு ஒன்றும் கண்டெடுக்கப்பட்டுத் தம்பலகமத்தில் ஓர் கோயில் கட்டி, சுவாமியைப் பிரதிஷ்டை செய்தனர்.

இதன் பின்னர் இவ்வாறு பிரதிஷ்டை செய்த மூர்த்தியை ஆதிகோணநாயகர் என்றும், அவர் எழுந்தருளியுள்ள கோவிலை ஆதிகோணநாயகர் திருக்கோயில் என்றும் வழங்கினர். தொன்மைமிகுந்த திருக்கோணேஸ்வரத்தில் எழுந்தருளியிருந்த திருவுருவம் என்ற காரணத்தினால், ஆதிகோணநாயகர் என அழைக்கின்றனர். ஆதி என்ற இச்சொல் திருக்கோணேஸ்வரத்தின் தொன்மை வாய்ந்த மூர்த்தி என்பதைக் குறிப்பிடுவதாகக் காணப்படுகின்றது.

**- வளரும்...**

MONEY PROBLEMS?
பணச்சிக்கலா?
0%வட்டி
அனைத்து மாதாந்த கொடுப்பனவுகளுக்கும் ஒரு செலுத்தல்
ALL DEBT SOLUTIONS CR PLAN
No Need to file for Bankruptcy
One Small Monthly Payment for all your Bills



வசந்தி சிவராஜா

நீங்கள் மேலதிகப்பற்றை எப்போதும் பயன்படுத்துகிறீர்களா?
நீங்கள் ஒரு காசோலையில் இருந்து மறு காசோலை என வாழ்கிறீர்களா?
நீங்கள் சம்பள நாள் கடன்கொடுப்போரிடம் இருந்து கடன் வாங்குகிறீர்களா?
உங்களைக் கடன் கொடுக்க வேண்டியவர்கள் அல்லது கடன் அறவிடும்-முகவர் நிலையங்கள் தொந்தரவு செய்கிறார்களா?
உங்களது மகிழுந்து, வீடு, ஆர்ஆர்எஸ்பி, பங்குகள் அல்லது வேறு சொத்துக்களை இழக்கப்போகிறோமா என அச்சப்படுகிறீர்களா?
நீங்கள் உங்களது கடன் மதிப்பீடு இடர்ப்பாட்டுக்கு உடையதாக நினைக்கிறீர்களா அல்லது கெட்ட கடன் வைத்திருக்கிறீர்களா?

நாங்கள் உங்களைக் காப்பாற்ற முடியும்
உங்களது மகிழுந்து, வீடு, ஆர்ஆர்எஸ்பி மற்றும் ஏனைய-சொத்துக்களை வைத்திருங்கள்.
நாங்கள் உங்களது நிலைமையைப் பொறுத்து உங்களது-விருப்புகளுக்கு இடமளிப்போம்.
நாங்கள் உங்களது கடனை 80 விழுக்காடு குறைப்போம்.
நாங்கள் உங்களுக்கு தொலைபேசி அழைப்புக்கள் மற்றும்-சொத்துமுடக்கை உடனடியாக நிறுத்துவோம்.

நாங்கள் உங்களுக்கு உதவமுடியும்
நாங்கள் உங்களது கடன் நம்பிக்கையை மீள்கட்டி எழுப்ப உதவுவோம்.
நாங்கள் எங்களது கடன் திட்டத்தின் கீழ் நீங்கள் கடன் வாங்குவதையும்-அதனைப் புத்திசாலித்தனமாகப் பயன்படுத்துவற்கும் உதவுவோம்.
தனிப்பட்ட மற்றும் அந்தரங்கமான சந்திப்புக்கு எங்களை அழையுங்கள்.



தமிழில் தொடர்புகளுக்கு:
வசந்தி சிவராஜா - 416-616-3077

எல்லாக் கடன்களுக்கும் தீர்வும் மற்றும் ஆலோசனை சேவைகள்
உங்கள் வாழ்க்கையில் நிரந்தரமான மாறுதலுக்கு மற்றும் இலவச ஆலோசனைக்கு உடனே அழையுங்கள்
416-671-0577

4 இடங்களில் சேவை
ரொறன்ரோ, ஸ்காபறோ, றிச்மோன்ட்கில், மிசிசாகா
வார இறுதி - இரவு நேரங்களிலம் சேவை உண்டு

MISSISSAUGA OFFICE
1090 Dundas St. East
Suite #103
L4Y 2B8
Mississauga

SCAROBOROUGH OFFICE
2100 Ellesmere Rd, Suit # 211 E
Scarborough, ON
M1H 3B7

HEAD OFFICE - TORONTO
155 Rexdale Blvd. Suite # 704
M9W 5Z8
Toronto

RICHMONDHILL OFFICE
10255 Yonge St. Suite # 204
Richmondhill

NORTH YORK OFFICE
298 Sheppard Ave., W. # 200
M2N 1N5 North York


SUBRA MORTGAGE FINANCIAL
SUBRA MORTGAGE SOLUTIONS
✦ RESIDENTIAL ✦ COMMERCIAL ✦ INDUSTRIAL
✦ VACANT LAND ✦ CONSTRUCTION
Know the basic things on Mortgage to find a better way for your Future!
CONTACT US TODAY
NESAN
416-908-5656
1st & 2nd Mortgages | Purchase | Refinance | Renewal | Switches | Equity lind of Credit
Pre-approvals | Self-employed | Multi-rental properties | New immigrants
Office: 416-660-5656
Fax: 647-351-3099
Toll: 1-844-878-2721
1585 Markham Rd, Unit #406, Toronto, M1B 2W1
www.subra.com
WE DEAL WITH ALL BANKS
Brokerage #10330
Powered By
MORTGAGE ALLIANCE
Scotiabank
radius financial
EQUITABLE BANK
RMG mortgages
Canada Trust
RFA
FIRST NATIONAL FINANCIAL LP
HOME TRUST
MCAP

மொன்றியல் நகரில் உதயன் UTHAYAN
விளம்பரங்கள், மரண அறிவித்தல்கள், பிறந்ததின வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும் அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
பழமையான மரக்கறி வகைகள் மற்றும் பழவகைகளுக்கு மொன்றியலில் புகழ்பெற்ற தமிழர் ஸ்தாபனம்
5925 Victoria Montreal, QC H3W 2R9
514-342-4229
514-865-0519

TRAFFIC TICKETS! Peter Joseph
Legal Representative / Paralegal
Careless Driving, Speeding, Accidents, Red lights, Stop sign, Seat Belts, Fail to Remain / Stop at the Scene, Stunt Driving (Racing), No Insurance Etc....
416-757-7707
Cell : 416-575-8797
Fax : 1-866-516 0689
E-mail: legalservice.pj@gmail.com

Keith Sanmugathas Broker
Sun Sanmugathas Broker of Record
PROPERTY MAX
Realty Inc. Brokerage
SANMUGATHAS TEAM
6888 14th Ave Markham, On L6B 1A8
Office: 416-291-3000
416-666-9464 www.iselldreamcondos.ca
416-291-0005 www.iselldreamhomes.ca

26ம் ஆண்டில்..
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்

Jayasaji JEWELLERY
416 299 5479
416 293 5935
jayasaji1@hotmail.com
www.Jayasaji.ca
jayasajijewellery
Jayasaji Jewellery
6055 Steeles Ave E# 131-132, Scarborough, Ontario, M1X0A7
MANUFACTURER, WHOLESALER AND RETAILER OF 18, 22, 24K YELLOW, ROSE AND WHITE GOLD GEMSTONE AND DIAMOND JEWELLERY SINCE 1993

உதயம் 1398 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday January 20, 2023

# மொன்றியால் மாநகரில் இயங்கிவரும் 30க்கும் மேற்பட்ட தமிழ் அமைப்புக்கள் ஒன்றாகக் கூடி கொண்டாடிய தமிழ் மரபுத் திங்கள் பெருவிழா





கடந்த 15ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை தொடக்கம் மொன்றியால் மாநகரில் “லவால்“ பிரதேசத்தில் ஒரு அழகிய மண்டபத்தில் கொண்டாடப்பெற்ற “தமிழ் மரபுத் திங்கள்“ கொண்டாட்டத்தின் போது கனடிய வெளிவிவகார அமைச்சர் மெலனி அவர்கள், நீயா நானா புகழ் கோபிநாத் உட்பட பல பிரமுகர்கள் கலந்து கொண்டனர்

அன்றைய நிகழ்வில் சுமார் 2500 பார்வையாளர்களும் பிரமுகர்களும் ரொறன்ரோவிலிருந்து பாராளுமன்ற உறுப்பினர் ஹரி ஆனந்தசங்கரி ஒன்றாரியோ மாகாண சபை உறுப்பினர் லோகன் கணபதி மற்றும் கல்விச் சபை உறுப்பினர் நீதன் சாண் ஆகியோர் உத்தியோகபூர்வமாக கலந்து கொண்டார்கள் என்பதும் கவனிக்கத்தக்க ஒன்றாகும்.

(உள்ளே விபரமான செய்தி 20ம் பக்கத்தில்)



# யாழ் மாவட்ட அரசாங்க அதிபராக நியமனம் பெற்றுள்ள சிவபாதசுந்தரம் அம்பலவாணர் அவர்களுக்கு கனடாவிலிருந்தும் வாழ்த்து

யாழ்ப்பாணம் சுருவிலை வதிவிடமாகக் கொண்டிருந்தவரும் தற்போது யாழ்ப்பாண மாவட்ட புதிய அரசாங்க அதிபராக நியமனம் பெற்றுள்ளவருமான சிவபாதசுந்தரம் அம்பலவாணர் அவர்களை சுருவில் மக்கள் ஒன்றியம் - கனடா வாழ்த்தும் வகையில் செய்தி ஒன்றை வெளியிட்டுள்ளது.

(உள்ளே விபரமான செய்தி ம் பக்கத்தில்)

# ”நமது தமிழ் மொழியின் உயரிய பாரம்பரியத்தைப் பற்றி நாங்கள் மிகவும் பெருமைப்படுகிறோம்”

## வான் நகரசபை நடத்திய தமிழர் மரபுரிமை மாத விழாவில் கனடிய தமிழர் காங்கிரஸ் தலைவர் சிவன் இளங்கோ புகழாரம்




நமது தமிழ் மொழியின் உயரிய பாரம்பரியத்தைப் பற்றி நாங்கள் மிகவும் பெருமைப்படுகிறோம். என கடந்த திங்கட்கிழமை கனடாவின் வான் நகரசபை நடத்திய தமிழர் மரபுரிமை மாத விழாவில் சிறப்பு விருந்தினர் உரையாற்றிய கனடிய தமிழர் காங்கிரஸ் தலைவர் சிவன் இளங்கோ புகழாரம் சூட்டினார். வான் நகரசபையின் மேயரம் **Steven Del Duca** அவர்கள் தலைமையில் நடைபெற்ற இந்த பெருவிழாவில் நூற்றுக்கணக்கான மக்கள் கலந்து கொண்டனர். அங்கு உரையாற்றிய திரு சிவன் இளங்கோ தொடர்ந்து பேசியதாவது.

(உள்ளே விபரமான செய்தி 10ம் பக்கத்தில்)

# City of Vaughan celebrates 'Tamil Heritage Month, with the support of Canadian Tamil Congress




## கனடிய தமிழர் பேரவையின் ஆதரவுடன் தமிழர் மரபுரிமை மாத விழாவை கொண்டாடிய கனடாவின் வோன் நகர சபை

கனடிய தமிழர் பேரவையின் ஆதரவுடன் தமிழர் மரபுரிமை மாதத்தையும் தைப்பொங்கல் விழாவையும் கொண்டாடிய கனடாவின் வோன் நகர சபை கடந்த திங்கட்கிழமை இந்த பெருவிழாவிற்காக தனது நகரசபையின் வளாகத்தை ஒதுக்கித் தந்தது. நூற்றுக்கணக்கான மக்கள் அங்கு கலந்து கொண்டனர்.

(உள்ளே விபரமான செய்தி 10ம் பக்கத்தில்)

# HomeLife/GTA Realty Inc வீடு விற்பனை முகவர் நிறுவனம் நடத்திய விற்பனை விருதுகள் வழங்கும் விழா



திருவாளர்கள் ராஜா மகேந்திரன் மற்றும் **Eddi Woo** ஆகியோரின் நிர்வாகத்தில் இயங்கிவரும் **HomeLife/GTA Realty Inc** வீடு விற்பனை முகவர் நிறுவனம் நடத்திய விற்பனை விருதுகள் வழங்கும் விழா கடந்த புதன்கிழமையன்று ஸ்காபுறோவில் உள்ள மார்க்கம் கொன்வென்சன் விழா மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது. சிறப்பு விருந்தினராக பாராளுமன்ற உறுப்பினர் ஹரி ஆனந்தசங்கரி கலந்து கொண்டு உரையாற்றிய பின்னர் விற்பனை விருதுகள் பெற்றவர்களுக்கு விருதுகளை வழங்கிக் கௌரவித்தார்.

உயிர் காக்க உதவுங்கள்
MGR 106
இன்னிசைப் பொழுது
27th JANUARY Friday 2023 7PM
416-200-7652, 647-526-7652

இவ்வருடத்திற்குரிய அதி உயர் விற்பனை விருதினைப் பெற்ற ரதீஸ் சுப்பிரமணியம் உட்பட அடுத்த தரங்களில் சுமார் 50க்கும் மேற்பட்டவர்கள் விருதுகளைப் பெற்றனர். இங்கே காணப்படும் படங்களில் அதி உயர் விருதினைப் பெற்ற ரதீஸ் சுப்பிரமணியம் கௌரவிக்கப்படுவதையும் பாராளுமன்ற உறுப்பினர் ஹரி ஆனந்தசங்கரி நிறுவனத்தின் நிர்வாகிகளை கௌரவிப்பதையும் காணலாம்.



புலம்பெயர் உறவுகளே! தாயகம் செல்லுகையில் இங்கு தங்கிப் பாருங்கள்..
தமிழர் நிர்வாகத்தில் இயங்கும் தரமான நட்சத்திர விடுதி
MaRadha HOTEL
COLOMBO - SRI LANKA
SALES@MARADHA.LK
+94112550136